# சைவநெறி

## தரம் - 11

# ஆசிரியர் வழிகாட்டி

**(2016 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

**சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,**

**தேசிய கல்வி நிறுவகம்,**

**ஸ்ரீலங்கா**

www.nie.lk

info@nie.lk

# சைவநெறி

## தரம் - 11

## ஆசிரியர் வழிகாட்டி

தேசிய கல்வி நிறுவகம்
முதற் பதிப்பு - 2016

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,

தேசிய கல்வி நிறுவகம்,

ஸ்ரீலங்கா.

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்,
ஸ்ரீலங்கா.

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016ஆம் ஆண்டிலிருந்து தரம் 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துவதற்கான அறிவுரைகள்

தேசிய கல்வி நிறுவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டி சைவநெறிப் பாடத்தை கற்றலால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடையும் வகையில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய இறைநம்பிக்கை,சமய நம்பிக்கை, சமய ஒழுகலாறு, வழக்காறு, விழுமியங்கள், தத்துவங்கள், சமய சமூக நடைமுறைகள், இலக்கியம் செயன்முறை அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் தேர்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டே ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்ட்டுள்ளது.

மாணவர்களினால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான விடய உள்ளடக்கம் இவ் ஆசிரியர் வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவும் பொருட்கள், தரவிருத்தி உள்ளீடுகள் கொடுக்கப்பட்டிருப்பதால், முன் கூட்டியே அவற்றை உரிய நேரத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்பு கிடைக்கின்றது.

பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை உறுதி செய்து கொள்வதற்குரிய பெறுமதிமிக்க ஆலோசனைகள் பல, கணிப்பீடும் மதிப்பீடும் என்ற பகுதியிலே உள்ளடக்கப்பட்டள்ளன பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் என்ற பகுதியை பாடசாலைக் கல்வியோடு சார்ந்த அனைவரும் முறையாக வாசித்து விளங்க வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களுக்குக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வழங்கும் போதும் ஆசிரியர் பணிகளை மேற்பார்வை செய்யும் போதும், உரியவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கும், பாடசாலை முகாமைத்துவத்தில் உள்ளவர்களுக்கு இது தேவையான விளக்கத்தை அளிக்கிறது.

ஆசிரியர் வழிகாட்டியில் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய செயற்பாடுகள் உள்ளடக்கப்படுள்ளன. இச் செயற்பாடுகளை ஆசிரியர் அவ்வாறே நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. தமது ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனைகளுக்கும் ஏற்ப, செயற்பாடுகளை ஏற்றவிதமாக ஒழுங்குபடுத்திக் கொள்வது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணமாக நான்கு குழுக்களை அமைக்க வேணடுமென கூறியிருப்பினும் வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப அதை மாற்றிக் கொள்ளலாம். குழுச் செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் விதமாக உரிய தீர்மானங்களை எடுக்கும் போது ஆசிரியர் சாதுர்யமாக நடந்து கொள்ளவேண்டும். உரிய தேர்ச்சி மட்டத்தை நிறைவு செய்யும் விதமாகச் செயற்பாடுகளுக்கு உரிய நேரம் வேறாக்கப்பட்டுள்ளது. ஒரு பாடவேளைக்கு அப்பாற் செல்ல ஆசிரியருக்கு நேரிடலாம் ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதியளவு நேரம் அந்தச் செயற்பாடுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் நேர அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தனிப் பாடவேளை, இருபாடவேளைகளுக்கு ஏற்றவாறு இச் செயற்பாடுகளைப் பகுதிகளாகச் செய்து கொள்ள வேண்டியது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. முன்னைய நாள் ஆரம்பித்த செயற்பாடொன்றை தொடர்ந்து மறுநாள் செய்யும் போது முதன் நாள் நிறைவு செய்தவற்றை மீண்டும் அறிமுகம் செய்து, தொடர வேண்டும் என்பதும் உங்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

யாதேனும் ஒரு தேர்ச்சி மட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வெவ்வேறான செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன்படி உத்தேச செயற்பாடானது அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என உங்களிடம் எதிர்பார்க்கபட்டவில்லை. மிகவும் சிறந்த பிரவேசத்துடன் கூடிய, ஆய்வுகளைக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவுபடுத்தக்கூடிய வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி, மேற் கொள்ளப்படும் சிறந்த கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டையே நாம் உங்களிடம் எதிர்பார்க்கின்றோம். புதிய விடயங்களை அறிமுகப்படுத்தும் போது உங்களின் வினைத்திறனையும் விளைதிறனையும் மேம்படுத்தும் நோக்கில் இவ் வழிகாட்டியை தேசிய கல்வி நிறுவகம் வழங்குகிறது. கணிப்பீட்டு, மதிப்பீட்டு செயற்பாடுகளை பயன்படுத்திக் கற்றலை பரிசீலனை செய்து, உரிய மீளவலியுறுத்தல்களை செய்வது உங்கள் பணியாகும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு மதிப்பீட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. வழிகாட்டியில் செயற்பாடுகளின் இறுதியில் வீட்டில் செய்யப்படவேண்டியதும் ஆசிரியர்களால் அவதானிக்கப்பட வேண்டியதுமான செயற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது அவற்றை ஆசிரியர்கள் உரியவாறு செயற்படுத்தும் அதேவேளை மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல். சமூகத்திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பயனுள்ள கற்றல் கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

விரிவுரையாளர் - இந்துசமயம்
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்..

# கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் அனுமதியும்** | : | **கல்விசார் அலுவல்கள் சபை**<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **இணைப்பாக்கம்** | : | **திரு பொன் ஜெயரூபன்**<br>விரிவுரையாளர்,<br>சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **விடய ஆலோசனை** | : | **பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம்**<br>தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.<br><br>**பேராசிரியர் கலாநிதி மா.கருணாநிதி,**<br>கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம். |

**எழுத்தாளர் குழு**

| | | |
|---|---|---|
| **உள்வாரி** | : | **திரு. பொன் ஜெயரூபன்**<br>விரிவுரையாளர்,,<br>சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **வெளிவாரி** | : | **திரு. எஸ். சேதுரட்ணம்,**<br>ஆசிரியர், பது/பண்டாரவளை தமிழ் ம.மகா வித்தியாலயம்,<br>பண்டாரவளை. |
| | - | **திருமதி. எம். சண்முகதாஸ்,**<br>ஆசிரியர், தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,<br>திருகோணமலை. |
| | - | **திருமதி. ஆர். யோகானந்தம்,**<br>ஆசிரியர், பிலி/நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம்,<br>நுகேகொட. |
| | - | **திருமதி. என். சுதமதி,**<br>ஆசிரியர், யாழ்/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி,<br>சாவகச்சேரி. |
| | - | **திரு. பெ. பேரின்பராசா,**<br>ஆசிரியர், மட்/களுதாவளை மத்திய மகா வித்தியாலயம்,<br>களுவாஞ்சிக்குடி. மட்டக்களப்பு. |
| **கணனி வடிவமைப்பு** | - | திருமதி. ரி. ஜெயவதனி |
| **மொழிச் செவ்விதாக்கம்** | - | பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம் |
| **அலுவலக உதவி** | - | திருமதி . எஸ். சி.பிரியதர்சனி |
| | - | திருமதி. மங்கலிகா விஜேரத்ன |
| | - | திரு. டயஸ் அமரசிங்க |

# உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துவதற்கான அறிவுரைகள் | v |
| கலைத்திட்டக் குழு | vi |
| 11.1.0 பாடத்திட்டம் | |
| 11.1.1 அறிமுகம் | 01 |
| 11.1.2 தேசிய கல்வி இலக்ககளும் அடிப்படைத் தேர்ச்சிகளும் | 02 |
| 11.1.3 கற்றல் - கற்பித்தல் முறை | 05 |
| 11.1.4 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 06 |
| 11.1.5 கணிப்பீடும் மதிப்பீடும் | 08 |
| 11.1.6 பாடத்திட்டத்தின் நோக்கம், தேர்ச்சிகள் | 10 |
| 11.1.7 பாடத்திட்டம் | 11 |
| 11.2.0 பாடத்திட்ட செயற்பாடுகளின் தொடர்ச்சி | |
| 11.2.1 கற்றல் கற்பித்தல் முறை - விளக்கம் | 23 |
| 11.3.0 கணிப்பீடும் மதிப்பீடும் | |
| 11.3.1 கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம் | 109 |

# பாடத்திட்டம்
# சைவநெறி
# தரம் -11

## 11.1.1 அறிமுகம்

விஞ்ஞான விருத்தியும் பொருளாதார மாற்றமும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், மாணவர்களின் வாழ்வில் குறுக்கிடும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கத்தக்க ஆளுமையுள்ளவர்களாக்குவது கல்வியில் கடமையும் பொறுப்புமாகும். மாணவர்களை ஆளுமையுள்ளவர்களாக வளர்ப்பதில் சமய பாடம் முக்கிய பங்கினை வகிக்கிறது. சமயம் ஒரு வாழ்க்கை நெறி. மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கான நெறிமுறைகளையும் பண்புகளையும் அது அமைத்துத் தருகின்றது.

மனித வாழ்வில், சமயம் வகிக்கின்ற முக்கியத்துவம் உணரப்பட்டமையாலேயே சைவநெறி இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒரு பாடமாக இடம் பெற்று வருகின்றது. அத்துடன்,2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கலைத்திட்டத்தில் இப்பாடம், கட்டாய பாடங்கள் ஐந்தினுள் ஒன்றாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சைவநெறி பாடத்தினூடாக மாணவர்களின் அறிவு, திறன்,மனப்பாங்கு மட்டுமன்றி,சமய அடிப்படையில் வையத்துள் வாழ்வாங்கு வாழும் திறனை விருத்தி செய்யக் கூடிய ஒழுக்கம், பண்பாடு முதலான ஆளுமைப் பண்புகளும் ஆன்மீகப் பண்புகளும் விருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் சமய அபிமானம், சமய நம்பிக்கை,சமய உணர்வுகள் என்பன வளர்க்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2016 இலிருந்து நடைமுறைக்கு வரும் இக்கலைத்திட்டமானது, நடைமுறை வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படையான தேர்ச்சிகளை வழங்கி, மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதற்குச் சமயக் கல்வியைப் பயன்படுத்துவதைப் பிரதான நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன்,

- இறைசிந்தனை
- சமய நம்பிக்கை
- சமய ஒழுகலாறுகளும் விழுமியங்களும்
- சமய இலக்கியங்களும் தத்துவங்களும்
- சமயமும் சமூக நடைமுறைகளும்
- சமய சமரசம்

முதலான விடயங்களையும் உள்ளடக்குவதாக இப்பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தில் மாணவர்கள் அடையவேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய தேர்ச்சிகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ள ஆசிரியர்கள் தம்மாலான ஒத்துழைப்பை வழங்க முன்வர வேண்டும்.

## 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்கு தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போஷிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

*தேசிய கல்விச் சேவை ஆணைக்குழுவின் அறிக்கை (2003)*

## 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்:**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை.

| | | |
|---|---|---|
| எழுத்தறிவு | : | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம். |
| எண்ணறிவு | : | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்துதல். எண்ணுதல், கணித்தல், ஒழுங்குமுறையாக அளத்தல். |
| சித்திர அறிவு | : | கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும். |
| தகவல் தொழில் நுட்பத் தகைமை | : | கணனி அறிவு கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்துதல். |

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வு சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்:**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்.

| | | |
|---|---|---|
| **சமூகச் சூழல்** | : | தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை. |

**உயிரியல் சூழல்** : வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத் தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதீகச் சூழல்** : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருட்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வு, நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்:**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.

பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.



**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்:**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும், விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும், உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்:**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுனர் போட்டிகள், ஓய்வு நேர பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மன எழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**(vii) கற்றலுக்குக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்:**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்துக்கு ஏற்ப இயங்கவும், அதனை முகாமை செய்யவும், வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## 11.1.3கற்றல் - கற்பித்தல் முறை

கற்றல் என்பது வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதாகும். கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவு மட்டம், பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தலிலேயே தங்கியுள்ளது. பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில் மாணவரிடம் உருவாக்கப்படும் கற்றல் பற்றிய கட்டுருவாக்கவியல் சிந்தனையில் உருவாகும் புதிய கருத்துக்கள், விடயங்கள் போன்றன பற்றித் தாமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலை, மாணவர்களிடம் கட்டியெழுப்புவதே இதன் பிரதான அடிப்படை நோக்கமாகும்.

மாணவர்களது வாழ்வியலுக்குத் தேவையான ஆக்கத்திறன், கற்பனைத்திறன், தொடர்பாடல் திறன் முதலானவற்றையும் ஒழுக்கம், விழுமியம், ஆன்மீகம் என்பன சார்ந்த பண்புகளையும் விருத்தி செய்யக் கூடிய ஒரு கற்றல் முறையாகவும் இது அமைந்துள்ளது. குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினூடாக மாணவர் நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும், நிலையானதுமான மாற்றமொன்றை இலக்காகக் கொண்டு தேர்ச்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சைவசமய பாடத்தைப் பொறுத்தவரை முக்கியமாக எதிர்பார்ப்பது, மனப்பாங்கு விருத்தியும் நடத்தை மாற்றமுமாகும். அதனை ஏற்படுத்த ஓர் இலகு வழியாக தேர்ச்சி மையக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை அமைந்துள்ளது.

தேர்ச்சி மையக் கல்வியில் ஆசிரியரது வகிபாகம் தெளிவானதொரு மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. தாம் பெற்றிருக்கும் அறிவை மாணவர்களுக்கு அப்படியே ஒப்புவிப்பதன் மூலம் அறிவை இடமாற்றம் செய்பவராக விளங்கிய ஆசிரியரின் செயன்முறை மாற்றப்பட வேண்டியதொன்றாகும். தேர்ச்சியை மையமாகக் கொண்டமைக்கப்பட்ட சைவநெறி பாடத்திட்டத்தில், சமயம் சார் செயன்முறை அனுபவங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், இங்கு மாணவரின் செயற்பாடு, பங்கு பற்றல் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தினூடாக மாணவர் அடையவேண்டுமென எதிர்பார்க்கின்ற குறைந்தபட்ச அடைவு மட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்யவேண்டியது ஆசிரியரின் கடமையாகும். அத்துடன் மாணவரைச் சரியாக இனங்கண்டு, கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவு மட்டத்தை எய்துவதற்கு வழி காட்டுவது ஆசிரியரது கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஆரம்பத்திலேயே மாணவரிடம் விருப்பு, வெறுப்பு, எதிர்பார்ப்பு என்பவற்றை ஏற்படுத்த வேண்டும். இங்கு விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படுவது அவசியமாகும். இதற்குப் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்களைக் கேட்டல், அட்டைகளைக் காட்சிப்படுத்தல், திருமுறைப்பாடல்கள், தோத்திரப்பாடல்கள் என்பவற்றைப் பாடச் செய்தல், போலச் செய்தல், ஒளி, ஒலி நாடாக்கள் என்பவற்றைப் பயன்படுத்துதல், செய்து காட்டல் முதலானவை அவற்றுட் சிலவாகும்.

சைவநெறி வாழ்வியலுடன் தொடர்புடைய ஒரு பாடமாகும். அதனால், கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஊடாக மாணவரிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆதலால், ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை நடத்துவதற்காகத் திறந்த உள்ளத்துடனும் போதிய திட்டமிடலுடனும் தயாராக வரவேண்டும். இங்கு மாதிரிகள் மட்டுமே தரப்பட்டுள்ளன. தமது தற்றுணிவுக்கேற்ப மாதிரிகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு ஆசிரியர் உரிமையுடையோராவர்.

## 11.1.4 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

சமயக் கல்வி கற்றல் - கற்பித்தல் தொடர்பாக பாடசாலையிலும் அயலிலும் கிடைக்கின்ற பௌதிக வளங்களையும், மனிதவளங்களையும் உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு ஒவ்வொரு பாடசாலையையும் திட்டமிட்டுச் செயற்படுத்துவது அவசியம்.

சைவ சமய வழிபாட்டு முறைகளுக்கும், சமயம் சார்ந்த நடவடிக்கைகளுக்குமென பாடசாலைக் கொள்கை இருத்தல் அவசியம்.

சமயக் கல்வியின் அவசியத்தை, தகுந்த ஆதாரங்களுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும் எடுத்துக் கூறுவதன் மூலம் அவர்களின் உதவிகளைப் பெற்று கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ளலாம்.

சைவசமயத்தைக் கற்பிப்பதற்கு, பாடசாலையில் வளப் பற்றாக்குறை ஏற்பட்டால் அதனை நிவர்த்தி செய்வதற்குப் பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் முதலானோரதும் சமய நிறுவனங்களதும் ஒத்துழைப்புக்களைப் பெறலாம்.

மேற்படி கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், ஆற்றல்மிக்கோரை உருவாக்குவதற்கும், சமயக் கல்வியையும் அதன் பாரம்பரியத்தையும் வளர்த்தெடுப்பதற்குப் பொருத்தமான பின்னணியைப் பாடசாலைகளில் உருவாக்கத்தக்க வகையில், பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இசைவுபடுத்தப்படல் அவசியமாகும்.

சைவநெறிப் பாடத்தினூடாக, புதிய ஆக்கபூர்வமான சிந்தனையின் பால் வழிப்படுத்தப்படும் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பாடசாலை வேலைத்திட்டத்தை அமைத்துக் கொள்ளல் பொருத்தமுடையதாகும். இப்பாடத்திட்டத்தை பாடசாலையில் அமுலாக்கும்போது சைவசமய பாரம்பரியங்களைப் பின்பற்றும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைக்கலாம்.

- பாடசாலையில் தினசரிப் பிரார்த்தனைகள், வெள்ளிக்கிழமை பிரார்த்தனை என்பவற்றுக்கு ஏற்ற வசதிகள் அளித்தலும், மாணவர் அனைவரும் கலந்து கொள்ள வழிவகை செய்தலும்
- ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நற்சிந்தனை கூற இடமளித்தல
- வகுப்பறையில் சுவாமிப்படங்களை வைத்து வழிபட ஊக்குவித்தல்
- பாடசாலைக்கு அண்மையிலுள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபட வழிப்படுத்தல்
- சமய தீட்சை வழங்கல்
- குருபூசை, பாடசாலைச் சமய விழா,சமயப் பேச்சு, பண்ணிசை, நாடகப்போட்டி முதலானவற்றினை நடத்த ஒழுங்கு செய்தல்.
- சமய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க ஒழுங்கு செய்து கொடுத்தல்.
- மாணவரின் ஒத்துழைப்புடன் கூட்டாகச் செயற்படக் கூடிய சைவசமய மன்றங்களை அமைத்து நடத்தல்
- சமயம் தொடர்பான கல்விக் கண்காட்சிகளை வகுப்பறைகளிலும் பாடசாலைகளிலும் நடத்த ஒழுங்கு செய்தல்
- பாடவிடயம் தொடர்பான முக்கிய இடங்களுக்கு வெளிக்களச் சுற்றுலாக்களையும் திட்டமிட்டு, சரியாக நிறைவேற்றுதல்.
- ஒப்படைகள், செயற்றிட்டங்கள், புத்தாக்கம் போன்றவற்றில் ஈடுபட மாணவரை ஊக்குவித்தல்
- வெவ்வேறு தலைப்புக்களில் திட்டமிடப்பட்ட விவாதங்கள், உரையாடல்கள் போன்றவற்றை நடத்துதல்

- சமயக் கருத்தரங்குகள், சமய விழாக்கள் என்பவற்றில் பங்கு கொள்ள ஊக்குவித்தல் மாணவரின் பல்வேறு திறன்களும், மனப்பாங்குகளும் விருத்தியடையக் கூடிய வகையில் இவ்வாறான செயற்பாடுகளை வழங்கலாம்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கைகள், வேலைத்திட்டங்ஙளிலிருந்து சற்று விலகி, பாடசாலைக்கெனச் சிறப்பான கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும். அதனை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காக தகைமை வாய்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியரை ஈடுபடுத்தலும் பயனுறுதிமிக்க நேரமுகாமையும் மிக அவசியம்.

ஒவ்வொரு சமய பாட ஆசிரியரும் தமது வகுப்பில் பயிலும் மாணவர்களைக் கீழ்வரும் நற்பழக்கவழக்கங்களை உடையவர்களாக ஆக்குதல் வேண்டும்.

- கடவுள் பக்தி
- தாய், தந்தை, குரு ஆகியோரைத் தினம் தினம் வணங்குதல்
- மூத்தோரிடம் மரியாதை
- ஒழுக்கம்
- தியாகமும், தொண்டும்
- சமய அறிவில் ஆர்வம்
- சைவ தர்ம நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல்

மாணவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்குவதை ஆசிரியர்கள் இலட்சியமாகக் கொண்டு செயற்படல் வேண்டும். பாடசாலைகளில் இக்கலைத்திட்டத்தை மேற்குறிப்பிட்டவாறு நடைமுறைப்படுத்துவதனால் அடுத்த தசாப்தத்தில் எமது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட புத்தாக்கம் புரிவோரையும் மனிதப் பண்புள்ளவர்களையும் குறைவின்றி உருவாக்கலாம்.

### 11.1.5 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினூடாக, மாணவர் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடைந்துள்ளனரா என்பதை அறிவதற்கு ஏற்ற இலகுவான வழிமுறைகளாக கணிப்பீடும் மதிப்பீடும் அமைந்துள்ளது.
மாணவரின் நடத்தைசார் பண்புகள், சமய வழிபாடுகளில் அவர்கள் கொண்டுள்ள அக்கறை, சமய, சமூக செயற்பாடுகளில் காட்டும் ஆர்வமும் ஈடுபாடும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் போது வெளிக்காட்டும் தன்மை, பங்கேற்கும் தன்மை என்பன கணிப்பீடு செய்யப்பட வேண்டும். இவற்றை முறை சார்ந்த வழிகளில் வகுப்பறைக்கு உள்ளேயும், வெளியேயும் கணிப்பீடு செய்ய முடியும்.

மதிப்பீட்டினைப் பல வழிகளில் மேற் கொள்ள முடியும். பாடம் தொடர்பான மதிப்பீடு பாட அலகின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது, வாய்மொழிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை, செயற்றிட்டம் போன்ற செயற்பாடுகளினூடாக மேற் கொள்ள முடியும். தவிர, தவணை இறுதியில் ஒப்படை, செயற்றிட்டங்களை வழங்குதல் என்பவற்றினூடாகவும் மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியும்.

மேலும், திருமுறைகள் தோத்திரப்பாடல்கள் பாடும் போது, மாணவர் பிழையற மனனம் செய்து, உச்சரிப்புத் தெளிவு, பண், இசை என்பவற்றுடன் சரியான நிலையில் நின்று பாடுகிறார்களா என்பதையும் கணிப்பீடு செய்ய வேண்டும். அவ்வாறே, ஆலய வழிபாடு, அங்கு செய்யப்படும் அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்கார முறைகளையும் தெய்வங்களை வழிபடும் ஒழுங்கு முறைகளையும் அவதானிக்க வேண்டும். இவற்றுக்கு எற்ற மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளை முன்கூட்டியே தயாரித்துக் கொள்ள வேண்டும்.

### 11.1.6 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. தமது அன்றாட வாழக்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்தல்.
2. பக்தி, இறைநம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்ளல்.
3. திருமுறைப் பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுதல்.
4. ஆலயங்களில் சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுதல்
5. சைவசமய குரவர்கள், சமயப் பெரியார்களைப் பற்றி அறிந்து, அவர்களை தம் வழிகாட்டிகளாகக் கொள்ளல்
6. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி கருத்துக்களை வெளிப்படுத்துதல்
7. நாட்டார் சமய வழிபாடுகளையும், நாட்டார் வழக்காறுகளையும் அறிந்து போற்றுதல்.
8. ஈழத்துச் சைவ சமய வளர்ச்சி பற்றிய விவரங்களைத் திரட்டி, உரிய ஆதாரங்களுடன் முன்வைத்து, ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும், வரலாற்றுச் சிறப்பையும் அறிதல்
9. ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளல்.
10. பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிக்கு மதிப்பளித்தல்



**தரம் 10க்குரிய தேர்ச்சிகள்**

1. தமது அன்றாட வாழக்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.
2. பக்தி, இறைநம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர்.
3. திருமுறைப் பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
4. ஆலயங்களில் சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவர்
5. சைவசமய குரவர்கள், சமயப் பெரியார்களைப் பற்றி அறிந்து, அவர்களை தம் வழிகாட்டிகளாகக் கொள்வர்
6. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி கருத்துக்களை வெளிப்படுத்துவர்
7. நாட்டார் சமய வழிபாடுகளையும், நாட்டார் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவர்.
8. ஈழத்துச் சைவ சமய வளர்ச்சி பற்றிய விவரங்களைத் திரட்டி, உரிய ஆதாரங்களுடன் முன்வைத்து, ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும், வரலாற்றுச் சிறப்பையும் அறிந்து கூறுவர்
9. ஈழத்துச் சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வர்.
10. பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிக்கு மதிப்பளிப்பர்

## பாடத்திட்டம் சைவநெறி - தரம் - 11

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1.0 தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர். | 1.1 கடவுள் என்றுமுள்ளவர் என்பதையும், மூலகாரணர் என்பதையும் விளங்கிக் கொள்வர் | • கடவுள் இருப்பையும் சைவ சித்தாந்த நூல்கள் வாயிலாக விளக்குதல்<br><br>**கடவுள்** | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• கடவுள் என்பதன் பொருளை விளங்கிக் கூறுவார்.<br>• கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை, கடவுள் பாடத்தினூடாக கடவுளின் தோற்றமும், அவை சுட்டும் தத்துவப் பொருளும் பற்றி கலந்துரையாடி உண்மைத் தன்மைகளை வெளிப்படுத்திக் கூறுவர். | 02 |
| | 1.2 நாளாந்தக் கடைமைகளில் இறைசிந்தனையுடன் ஈடுபட்டு செயற்படுவர் | • **வீட்டில் சைவம்**<br>• சமய அனுட்டானங்கள்<br>• தீட்சை<br><br>• **பாடசாலையில் சைவம்**<br>• கூட்டுப்பிராத்தனை, சமய விழாக்கள்<br><br>• **ஆலயமும் சமுதாயமும்** சமுதாய தொடர்புகளைப் பேணுவதில் ஆலயங்களின் பங்கு | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவ இல்லத்தின் அவசியத்தினை உணர்வர்.<br>• நிதமும் வீடுகளில் சமய அனுஷ்டானங்களை முறையாக மேற்கொள்வர்.<br>• தீட்சை பெற்றுக் கொள்வதன் அவசியத்தினை உணர்ந்து, தீட்சை பெற்று வாழ்வர்.<br>• பாடசாலைகளில் காலைக்கூட்டத்தின் போதும் பொது நிகழ்வுகளின் போதும் திருமுறைகளை ஓதுவர்.<br>• பாடசாலைகளில் குரு பூசைத் தினங்களைக் கொண்டாடுவர்.<br>• பாடசாலைகளில் சமய விழாக்களை முறைப்படி நிகழ்த்துவர்/கொண்டாடுவர்.<br>• வாழ்க்கையில் நாளாந்தச் சமய செயற்பாடுகளில் விசேட விழாக்களை கைக்கொள்வர்.<br>• சமுக அங்கத்தவன் என்ற வகையில ஆலயங்களோடு சமய ரீதியிலான தொடர்புகளைப் பேணுவர்.<br>• வீடு, பாடசாலை, கோயில்களில் சமயச் செயற்பாடுகளில் ஈடுபடுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 1.3 சமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் இனங்கண்டு பின்பற்றுவர் | • சைவ நெறி வலியுறுத்தும் அறங்கள்<br>• ஒப்புரவு<br>• ஈகை | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• அறங்களால் கட்டியெழுப்பப்பட்டதே சைவசமயம் என்பதை அறிவர்.<br>• தம் வாழ்க்கையில் ஒப்புர ஒழுகுவர்.<br>• ஈகையின் முக்கித்துவத்தை அறிந்து அதனை தம் வாழ்வில் கைக்கொள்வர்.<br>• ஒப்புர ஒழுகுதல், ஈகையின்பால் மற்றோரையும் வழிப்படுத்துவர். | 02 |
| | 1.4 சைவசமய விரதங்களை அறிந்து கடைப்பிடிப்பர் | • **பஞ்சாங்கம் பார்த்தறிதல்** | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• பஞ்சாங்கம் பார்ப்பதன் அவசியத்தை அறிந்து அவற்றைத் தம் வாழ்வில் கைக்கொள்வர்.<br>• பஞ்சாங்கம் கூறும் விஞ்ஞானரீதியான உண்மைகள் பற்றி தேடி ஆராய்வர்<br>• பஞ்சாங்கமும் சமுாதாய நிலைமைகளும் பற்றிய விளக்கத்தினைப் பெறுவர் | 01 |
| | | • **விரதங்கள்**<br>• கார்த்திகை விளக்கீடு | • கார்த்திகை விளக்கீட்டின் தத்துவம் பற்றி விளக்கம் பெறுவர்<br>• கார்த்திகை விளக்கீடு பற்றிய புராணக் கதைகளை தேடிப் பெறுவர்.<br>• கார்த்திகை விளக்கீட்டில் நடைபெறும் நிகழ்வுகளை அறிந்து கொள்வர்.<br>• கார்த்திகை விளக்கீட்டின் பலன்களை அறிந்து முக்கியத்துவம் அளிப்பர். | 01 |
| | | • திருவாதிரை<br>• வரலட்சுமி | • திருவாதிரை, வரலட்சுமி ஆகிய விரதங்களின் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றை அனுட்டிப்பர்.<br>• விரதங்களை அனுஷ்டிக்கும் போது பின்பற்ற வேண்டிய விரத நியதிகளைக் கடைப்பிடிப்பர்.<br>• விரதங்களின் மூலம் ஆன்மீக வாழ்வு மேம்படுகின்றது, என்பதை உணர்வர். கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவர். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 1.5 வாழ்வியல் சடங்குகள் பற்றி அறிந்து, பொருளுணர்ந்து அவற்றைப் பின்பற்றுவர் | • வாழ்வியல் சடங்குகள்<br>• அபரக்கிரியை | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• அபரக்கிரியையின் அவசியத்தினை உணர்ந்து அவற்றுக்கு மதிப்பளிப்பர்.<br>• பல்வேறு பிரதேசங்களில் காணப்படும் அபரக்கிரியை முறைகளைத் தேடியறிவர்.<br>• அபரக்கிரியைகளின் விஞ்ஞான மற்றும் சமயரீதியான தத்துவக்கருத்துக்களைத் தேடியறிவர்<br>• தாம் வாழும் சமூகத்தில் இடம்பெறும் அபரக்கிரியைகளில் பங்குகொள்வர். | 02 |
| 2.0 பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர். | 2.0 திருமுறைப் பாடல்களினதும் தோத்திரப் பாடல்களினதும் அருஞ்சொற்களை விளக்குவர், சந்தர்ப்பம் கூறுவர், பண்ணுடன் பாடுவர் | • பிற்கால தோத்திரப் பாடல்கள்<br>1. திருப்புகழ்<br>"உம்பர்தரு தேனுமணி ..."<br>"பாதிமதி நதி ....."<br>2. நாலாயிரம் திவ்விய பிரபந்தம்<br>"பச்சைமால் மலைபோல் மேனி ..."<br>"உண்ணு சோறு பருகு நீரும்..."<br>3. அபிராமி அந்தாதி<br>ஆத்தாளை எங்கள்.."<br>" தனந்தரும் கல்வி.."<br>4. சகலகலாவல்லி மாலை<br>" தூக்கும் பனுவலும்..."<br>5. பராபரக்கண்ணி<br>" சிந்தித்த வெல்லாமென் ."<br>6. கந்தரலங்காரம்<br>"சிந்திக்கிறேன் நின்று..."<br>6. கந்தபுராணம்<br>" மூவிரு முகங்கள்..." | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• பிற்கால தோத்திரப் பாடல்கள் எவையென அறிவர்.<br>• தோத்திரப் பாடல்களின் சிறப்பினை அறிவர்.<br>• தோத்திரப் பாடல்களை மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.<br>• எழுத்துப்பிழையின்றி, வரிக்கிரமமாக தோத்திரப்பாடலினையும் அதன் பொருளினையும் எழுதுவர்.<br>• தோத்திரப் பாடல்களினைத் தினசரி பாடிப் பயன் பெறுவர். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 2.2 சைவ சமயத்தின் பொது நூல், சிறப்பு நூல்களை அறிந்து அவை கூறும் தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்துவர் | • **வேதங்களும் ஆகமங்களும்**<br>- வேத, ஆகமங்களின் பொருள் மரபு - விளக்கம் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• வேதம் என்பதன் பொருளினைக் கூறுவர்.<br>• ஆகமம் என்பதன் பொருளினைக் கூறுவர்.<br>• வேதத்தின் பொருள் மரபினை அறிவர்.<br>• ஆகமத்தின் பொருள் மரபினை அறிவர்.<br>• வேதத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைத் தம் வாழ்வில் கடைப்பிடிப்பர்.<br>• ஆகமத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைத் தம் வாழ்வில் கடைப்பிடிப்பர்.<br>• வேத, ஆகம கருத்துக்களை பிறருக்கு எடுத்துரைப்பர். | 03 |
| | 2.3 சமய இலக்கியம் மூலம் சமய உணர்வை விருத்தி செய்வர், தத்துவக் கருத்துக்களை அறிந்து அவற்றை உரியவாறு வெளிப்படுத்துவர். | • **கந்தபுராணம்**<br>**- மீட்சிப் படலம்**<br>(தெரிவு செய்யப்பட்ட பாடல் பகுதி ) | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• கந்தபுராணத்தை இயற்றியவர் கச்சியப்ப சிவாச்சாரியார் என்பதனை அறிவர்.<br>• கந்தபுராண கதைச் சுருக்கத்தை அறிந்து பிறருக்கும் கூறுவர்.<br>• கந்தபுராணம் குறிப்பிடும் சமய தத்துவக் கருத்துக்களை அறிவர்.<br>• கந்தபுராணத்தில் இடம்பெறும் முக்கிய கதாபாத்திரங்களையும் அவற்றின் குணாதிசயங்களையும் இனங்கண்டு கூறுவர் | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 3.0 பக்தி உணர்வு குறித்த விளக்கத்தை நாயன்மார் சரிதங்களினூடாக பெற முனைவர். இறை நம்பிக்கையும் அன்புமே பக்தியின் அடிப்படை எனப் புரிந்து கொள்வர். | 3.1 பெரிய புராணம் கூறும் நாயன்மார் வரலாறு மூலம் பக்தி நிலைகளைப் புரிந்து கொள்ள முயற்சிப்பர், சமய வரலாறு கூறும் உண்மைப் பொருளை இனங்காண்டு கூறுவர். | • **குங்கிலியக் கலைய நாயனார்** | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• குங்கிலியக் கலயரின் சிவத்தொண்டினை அறிந்து விவரிப்பர்.<br>• குங்கிலியக்கலயரிடம் காணப்பட்ட நற்பண்புகளை பிறருக்கும் எடுத்துரைப்பர்.<br>• குங்கிலியக்கலயரின் சிவத்தொண்டினை தாமும் பின்பற்றி சைவசமயத்தை மேன்மையுறச் செய்யும் ஆற்றலை வளர்த்துக்கொள்வர்.<br>• குங்கிலியக்கலயரின் குருபூசைத்தினத்தைக் கொண்டாடுவர். | 02 |
| 4.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணிப் போற்றுவர் | 4.1 ஆலய உற்சவக் கிரியைகளை இனங்கண்டு அவற்றின் உண்மைத் தத்துவங்களை விளக்குவர் | • குடமுழுக்கு கிரியைகள்<br>• கிரியைகள் பற்றிய தத்துவ விளக்கம் | • **இப்பாட அலகைக் கற்றக் பின்னர் மாணவர்கள்**<br>• குடமுழுக்கு என்பதன் விளக்கத்தை விபரிப்பர்<br>• குடமுழுக்கு செய்யப்படுவதன் நோக்கம் பற்றி ஆராய்வர்<br>• குடமுழுக்கின் சமய மற்றும் விஞ்ஞான ரீதியான தத்துவ விளக்கத்தைக் கூறுவர்<br>• குடமுழுக்கின் அம்சங்களை பட்டியற்படுத்துவர்<br>• குடமுழுக்கு கிரியைகளின் வகைகளையும் அதன் விளத்கத்தையும் முன்வைப்பர்<br>• குடமுழுக்கு கிரியைகளில் பங்கு கொண்டு அவை பற்றிய விளக்கத்தை ஏனையவருக்கும் எடுத்துரைப்பர் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 5.0 சமயப் பெரியார்களைப் பற்றி அறிந்து, அவர்களை வழிகாட்டிகளாகக் கொள்வர் | 5.1 நாயன்மாரின் வரலாறுகளை அறிந்து கூறுவர், அவர்களின் பக்தி வைராக்கியம், சமுக நோக்கு முதலியவற்றைக் கடைப்பிடிக்கும் தூண்டுதலை வெளிப்படுத்துவர். | • **நாயன்மாரின் சமுக நோக்கிலான பணிகள்**<br>- படிக்காசு பெறல்<br>- முதலையுண்ட சிறுவனை உயிருடன் மீட்டமை<br>- திருத்தொண்டுகள் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• நாயன்மார்களின் சமயப் பணிகளை அறிந்து அவற்றுக்கு ஒத்த பணிகளை தம் வாழ்விலும் கடைப்பிடிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர்.<br>• சமூகப்பணியின் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றினை தம் வாழ்விலும் கைக்கொள்வர்.<br>• நாயன்மார்கள் ஆற்றிய சமூகப்பணிகளை பிறருக்கும் போதிப்பர்.<br>• சமூக, சமய பணிகளின் முக்கியத்துவம் குறித்து பிறருடன் கலந்துரையாடுவர். | 02 |
| | 5.2 சந்தான குரவர் வரலாறுகளை அறிந்து கூறுவர் | • **சந்தான குரவர்களும் அவர்கள் ஆற்றிய பணிகளும்** | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சந்தான குரவர்களை அறிவர்.<br>• சந்தான குரவர்கள் ஆற்றிய பணிகளை அறிவர்<br>• அவர்தம் பணிகளை தமது வாழ்க்கையில் கைக்கொள்ளும் ஆற்றலைப் பெறுவர்<br>• சந்தான குரவர் பணிகளை பிறருடன் கலந்துரையாடுவர். | 02 |
| | 5.3 சித்தர்கள், ஞானியர்கள் பற்றி அறிந்து கொள்வர் | • **சித்தர்கள் அறிமுகம் -**<br>- **அருணகிரிநாதர்** | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சித்தர்கள் மெய்யறிவு கைவரப் பெற்றவர்கள் என்பதனை அறிவர்.<br>• சித்தர்கள் தெய்வீக ஆற்றலை உடையவர்கள் என்பதைக் கூறுவர்.<br>• அருணகிரிநாதர் வரலாற்றைக் கூறுவர்.<br>• திருப்புகழின் சிறப்பினை அறிந்து பாடுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 5.4 ஈழத்துச் சமய பெரியார்களையும், அவர்களின் பணிகளையும் அறிந்து கூறுவர் | • **ஆறுமுக நாவலர்**<br>- வரலாற்றுச் சுருக்கம் (காலப்பின்னணி, பிறப்பு) பணிகள் - சமயப் பணி | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஆறுமுகநாவலர் அவர்களின் காலப் பின்னணியை அறிவர்.<br>• ஆறுமுகநாவலர் அவர்களின் சமூக, சமய பணிகளை அறிந்து, பிறருக்கும் எடுத்துக் கூறுவர்.<br>• ஆறுமுகநாவலர் அவர்களின் பணிகளில் தம்மாலான சமூக, சமய பணிகளைச் செய்ய முன்வருவர்.<br>• இன்றையச் சூழலிலும் சமூக, சமய பணிகளின் அவசியம் குறித்து கலந்துரையாடுவர். | 02 |
| 6.0 சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி வெளிப்படுத்துவர் | 6.1 மும்மல இயல்புகளை நூல்கள் வாயிலாக அறிந்து கூறுவர். | • **மும்மலங்கள்**<br>- ஆணவம், கன்மம், மாயை பற்றிய சித்தாந்தக் கருத்துக்கள் பற்றிய விளக்கம் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவசித்தாந்த சாத்திர நூல்களை அறிவர்.<br>• முப்பொருள்களில் பாசமும் ஒன்று என்பதை அறிவர்.<br>• மலங்கள் என்றால் என்ன என்பதை அறிவர்.<br>• மும்மலங்களின் இயல்புகளை அறிவர்.<br>• மூவகை மலங்களைப் பற்றி விளக்கம் பெறுவர். | 02 |
| | 6.2 ஒதுக்கப்பட்டுள்ள திருவருட்பயன் பாடப்பரப்பு மூலம் சித்தாந்தக் கருத்துக்களை அறிந்து கொள்வர், | • **திருவருட்பயன் (5-10 அதிகாரங்கள்)** | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவ சித்தாந்த சாஸ்திரநூல்களில் திருவருட்பயனும் அடங்கும் என்பதனை அறிவர்.<br>• திருவருட்பயன் நூலாசிரியர் உமாபதி சிவாச்சாரியார் என்பதனைக் கூறுவர்.<br>• திருவருட்பயன் காப்புச் செய்யுள் விநாயகருக்குரியது என்பதனைக் கூறுவர்.<br>• பதிமுது நிலை என்னும் அதிகாரத்தில் உள்ள பதியின் இயல்புகளைப் பட்டியல்படுத்துவர்.<br>• 5-10 வரையான அதிகாரங்களுக்குரிய பாடல் விளக்கத்தினை அறிந்து கூறுவர் | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| . | 6.3 ஆன்மீக விடுதலைக் கான மார்க்கங்கள் பற்றிய அறிவைப் பெற்று செயற்பாட்டில் ஈடுபடுவர் | • **நாற்பாதங்கள்**<br>• **சிவசின்னங்கள்**<br>• **தீட்சைகள்** | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவநாற்பாதங்களின் தன்மை பற்றிய உண்மைகளை அறிந்து அவற்றை தம் வாழ்வில் கடைப்பிடிப்பர்.<br>• நாற்பாதங்களின் அதிசயத்தை நாயன்மார் வரலாற்றினூடாக விளங்கிக் கொள்வர்<br>• சிவசின்னங்கள் எவை என்பதை அறிவர்.<br>• சிவசின்னங்களுக்கு மதிப்பளிப்பர்.<br>• சைவசமயி என்கிற வகையில் தம் வாழ்வில் சிவசின்னங்களை அணிந்து அதன் பயனைப் பெறுவர்.<br>• சைவ சமய தீட்சையைக் கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பர்<br>• தீட்சை வகைகள், தீட்சை பெற்றுக் கொள்ளும் முறைகள், தீட்சை பெற்றுச் செய்யவேண்டிய கடமைகள் என்பவ்றறை விளக்குவர் | 04 |
| 7.0 நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவர். | 7.1 நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் சடங்குகளின் சிறப்பினை தெரிந்து கூறுவர் | • கண்ணகியம்மன் சடங்கு<br>• நாகதம்பிரான் சடங்கு | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• நாட்டார் வழிபாடு ஆகமம் சாரா முறையில் இடம்பெறும் என்பதை அறிவர்.<br>• கண்ணகியம்மன் வழிபாடு நாகதம்பிரான் வழிபாடு பற்றிய சமய நம்பிக்கைகளைக் கூறுவர். இடங்களில் மூன்றினைக் கூறுவர்.<br>• கண்ணகியம்மன் வழிபாட்டோடு தொடர்புடைய கதையினைக் கூறுவர்.<br>• இவ்வரு வழிபாடுகளையும் தம் வாழ்விலும் ஏற்றுக் கடைப்பிடிப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 7.2 கிராமிய வழிபாட்டின் அம்சங்களின் கலைச் சிறப்புக்களைத் தெரிந்து விளக்குவர் | • **பூசை முறைபற்றிய விவரங்கள்** (கும்பம் வைத்தல், கதவு திறத்தல், மண்டபம் காவல் பண்ணுதல், கலியாணச் சடங்கு, கும்பச் சடங்கு, பள்ளயச் சடங்கு, சுவாமி ஊர்வலம், மடைபரவல், பரிகலம் அழைத்தல்,,வழிவிடல் பொங்கல், குளிர்த்தி, தீமிதிப்பு, நேர்த்தி, வேண்டுதல், வைரவர்சடங்கு் முதலானவை) | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• கிராமிய பூசைமுறைகளை அறிவர்.<br>• கிராமிய பூசை முறைகள் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடும் என்பதை அறிவர்.<br>• கிராமிய பூசை நிகழ்வுகளில் தம்மையும் ஈடுபடுத்தி பயன்பெறுவர்.<br>• நாட்டார் வழிபாட்டின் எளிமை குறித்து ஏனையோருடன் கலந்துரையாடுவர்.<br>• நாட்டார் வழிபாட்டின் சமய நம்பிக்கைகளையும கலை அம்சங்களையும் அறிந்து போற்றுவர் | 02 |
| 8.0 ஈழத்துச் சைவ மரபுளையும், வரலாற்று ஆதாரங்களையும் திரட்டி ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும், வரலாற்றுச் சிறப்பையும் அறிவர் | 8.1 ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும், வரலாற்றுச் சிறப்பையும் எடுத்துரைப்பர் | • **மகாவம்சம் முதலிய நூல்களில் கூறப்பட்டவை** (கோகில சந்தேஸய, பரவி சந்தேஸய, திஸர சந்தேஸய, சலஹினி சந்தேஸய, சவுல் ஸந்தேஸய) | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஈழத்து வரலாற்றுத் தொன்மையயை அறிய உதவும் சான்றுகளை அறிவர்.<br>• ஈழத்துச் சைவசமயத்தின் தென்மை பற்றிய குறிப்புக்கள் மகாவம்ச நூலில் காணப்படுகின்றது என்பதை அறிவர்.<br>• மகாவம்சம் குறிப்பிடும் ஈழத்து சைவ சமயத்தின் தொன்மை பற்றிய கருத்துக்களை குறிப்பிடுவர்.<br>• ஈழத்து சைவசமயத்தின் தொன்மையின் சிறப்பினை ஆதாரங்களுடன் கருத்துரைப்பர்<br>• ஈழத்து சைவசமயத்தின் தொன்மையின் சிறப்பினை கலந்துரையாடுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 8.2 ஈழத்துச் சைவ ஆலயங்கள் பற்றிய விவரங்களைப் பெறுவர், அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தைத் தெரிந்து கூறுவர். | • விநாயகர் ஆலயம்-<br>- மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார்<br>• சிவாலயம்<br>- திருக்கேதீச்சரம்<br>• அம்மன் ஆலயங்கள்<br>- வற்றாப்பளை கண்ணகி அம்மன்<br>• முருகன் ஆலயம்<br>- மண்டூர் முருகன் ஆலயம்<br>- இணுவில் கந்தசுவாமி ஆலயம்<br>• விஷ்ணு ஆலயம் - பொன்னாலை வரதராஜப் பெருமாள் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய சிப்புக்களை போற்றுவர்<br>• திருக்கேதீச்சர ஆலயத்தின் சிறப்புப் பற்றி அறிந்து தல யாத்திரை மேற்கொள்வர்.<br>• வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து அவற்றைப் போற்றுவர்.<br>• முருகன் ஆலயங்களில், மண்டூர் முருகன் ஆலயம் இணுவில் கந்தசுவாமி ஆலயம் ஆகியவற்றின் சிறப்புக்களை அறிந்து போற்றுவர்.<br>• ஆலய சிறப்புக்கருதி தல யாத்திரை மேற்கொள்வர்.<br>• பொன்னாலை வரதராஜப் பொருமாள் ஆலயம் பற்றிய சிறப்புக்களை அறிந்து போற்றுவர்.<br>• ஆலயங்களுடாக இடம்பெறும் சமய சமுகப் பணிகளை அறிந்து போற்றுவர் | 04 |
| | 8.3 ஈழத்துச் சைவ சமய நூல்கள், இதழ்கள், நிறுவனங்கள் பற்றி எடுத்துரைப்பர். | • **நூல்கள் , இதழ்கள்**<br>சித்திரபுத்திரனார் கதை<br>• **நிறுவனம்**<br>• சைவ பரிபாலன சபை | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சித்திரபுத்திரனார் கதையை அறிவர்.<br>• இக்கதையில் வரும் முக்கிய பகுதிகளை பிறருக்கு எடுத்துக் கூறுவர்.<br>• சைவபரிபாலன சபை ஆற்றிய சமயப் பணிகள், கல்விப்பணிகளைக் குறிப்பிடுவர்.<br>• அவற்றினை பிறருடன் கலந்துரையாடுவர்.<br>• சமயத்தின் அடிப்படையில் சமய, சமூகப் பணிகள் ஆற்றப்பட வேண்டும் என்ற மனப்பாங்கினைப் பெறுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 9.0 சைவ சமயிகள் சமூகப் பணியின் முக்கியத்துவத்தை அறிந்து சமுதாய முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர் | 9.1 சரியைத் தொண்டின் மகத்துவம் அறிந்து, சரியையில் ஈடுபடுவர் | **சரியைத் தொண்டு**<br>• திருத்தொண்டு<br>• பிற பொதுப் பணிகள்- அனர்த்த உதவிகள், முதியோர், சிறுவர் பராமரிப்பு இல்லம், விசேடதேவை கொண்ட பராமரிப்பு இல்லங்கள்) | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவர்களால் இலகுவில் ஆற்றக்கூடிய தொண்டு சரியைத் தொண்டு என்பதனை அறிவர்.<br>• சைவசமயத்திற்காக தங்களாலான திருத்தொண்டுகளைப் புரிவர்.<br>• சரியைத் தொண்டின் மகத்துவத்தை தொண்டுகளால் ஏற்படும் நன்மைகள் மூலம் உணர்ந்து கொள்வர்.<br>• சமயத்தின் வழி பிற சமயத் தொண்டுகளையும் புரிய முன்வருவர் | 01 |
| | 9.2 அன்னதானத்தின் சிறப்பினை அறிந்து அதனை மேற்கொள்வர். | • சிவனடியாருக்கு அமுதூட்டல்<br>• வறியவர்க்கு அன்னமிடல் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள**<br>• தானங்களில் சிறந்தது அன்னதானம் என்பதனை அறிவர்.<br>• சிவனடியார்க்கும், வறியவர்களுக்கும் அன்னமிடல் முக்கிய பணி என்பதனை அறிவர்.அதன்படி, தம்மாலான அன்னதானப் பணிகளை மேற்கொள்வர்.<br>• அனைவருக்கும் உணவு வழங்குவதே அன்னதானத்தின் நோக்கம் என்பதனை அறிவர்.<br>• தமது வாழ்வில் இவ்வகையான அறப்பணிகளை மேற்கொள்வர். | 01 |
| 10.0 சமயங்கள் கூறும் பண்புகளை அறிந்து அவற்றுக்கு மதிப்பளிப்பர். | 10.1 சமய நூல்கள் கூறும் அறக்கருத்துக்களை அடையாளப்படுத்துவர், அவற்றுக்கு மதிப்பளிப்பர். | • பகவத்கீதையும் தம்மபதமும் - சிறப்பு நோக்கு | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• தம்ம பதத்தினை அறிவர்.<br>• பகவத்கீதையினை அறிவர்<br>• இரண்டிற்கும் இடையிலான தொடர்பினை அறிவர்.<br>• பகவத்கீதை தம்மபதம் முன்வைக்கும் கருத்துக்களை ஆராய்வர் அவை பற்றிய செய்திகளுக்கு மதிப்பளிப்பர். | 01 |

# சைவநெறி தரம்-11

| தவணை | தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாடவேளை | மொத்தப் பாடவேளை |
|---|---|---|---|---|
| தவணை -1 | 1.0 | 1.1 | 02 | 22 |
| | | 1.2 | 02 | |
| | | 1.3 | 02 | |
| | | 1.4 | 03 | |
| | | 1.5 | 02 | |
| | 2.0 | 2.1 (1,2, ஆம் பாடல்) | 03 | |
| | | 2.2 | 03 | |
| | | 2.3 | 05 | |
| தவணை -2 | 2.0 | 2.1 (3,4,5 ஆம் பாடல்) | 03 | 24 |
| | 3.0 | 3.1 | 02 | |
| | 4.0 | 4.1 | 02 | |
| | 5.0 | 5.1 | 02 | |
| | | 5.2 | 02 | |
| | | 5.3 | 02 | |
| | | 5.4 | 02 | |
| | 6.0 | 6.1 | 02 | |
| | | 6.2 | 03 | |
| | | 6.3 | 04 | |
| தவணை -3 | 2.0 | 2.1 (6,7ஆம் பாடல்) | 02 | 17 |
| | 7.0 | 7.1 | 02 | |
| | | 7.2 | 02 | |
| | 8.0 | 8.1 | 02 | |
| | | 8.2 | 04 | |
| | | 8.3 | 02 | |
| | 9.0 | 9.1 | 01 | |
| | | 9.2 | 01 | |
| | 10.0 | 10.1 | 01 | |

# செயற்பாடுகள்

## கற்றல் கற்பித்தல் முறைகள் - விளக்கம்

**தேர்ச்சி 1.0 :** தமது அன்றாட வாழ்க்கையில் கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.1 :** கடவுள் என்றுமுள்ளவர் என்பதையும், மூலகாரணர் என்பதையும் விளங்கிக் கூறுவர்.

**செயற்பாடு :** ‘‘கடவுள் ஒருவரே என்னும் உண்மையை ஏற்றுச் செயற்படுவோம்.’’

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- கடவுள் ஒருவரே என்பதை தேவாரப் பாடல்களின் மூலம் நிறுவுவர்.
- திருவாசகப் பாடல்களின் மூலம் கடவுள் ஒருவரே என்பதை நிறுவுவர்.
- சைவசித்தாந்த நூல்களின் அடிப்படையில் கடவுள் ஒருவரே என்பதை எடுத்துக் கூறுவர்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- கடவுள் ஒருவரே என்பதை மாணவர்கள் ஆதாரங்களுடன் கூற சந்தர்ப்பம் வழங்குதல்.
- தேவாரம், திருவாசகப் பாடல்களை ஆதாரம் காட்டி கடவுள் ஒருவரே என்னும் உண்மையை ஏற்று கூற இடமளித்தல்.
- சைவசித்தாந்த நூல்களை ஆதாரங்காட்டி கடவுள் ஒருவரே என்ற கூற்றை முன்வைத்தல்.
- கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  - கடவுள் ஒருவரே உண்மையானவர்.
  - கடவுள் என்றுமுள்ளவர், எங்குமுள்ளவர், எல்லாம் வல்லவர், அவரே கர்த்தா.

**படி II:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக் களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழு வினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப் பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன்போது பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - கடவுள் ஒருவரே என்பதைக் காட்டும் ஆதாரங்கள்.

| | |
|---|---|
| ‘‘ஈறாய் முதல் ஒன்றாய் ......’’ | திருஞானசம்பந்தர் |
| ‘‘அப்பன் நீ அம்மை நீ ......’’ | திருநாவுக்கரசர் |
| ‘‘எல்லா உலகமும் ஆனாய் நீயே ...... | சுந்தரர் |
| ‘‘ஏகன் அநேகன் ......’’ | சிவபுராணம் - மாணிக்கவாசகர் |
| ‘‘வானாகி மண்ணாகி ......’’ | மாணிக்கவாசகர் |
| ‘‘அவன் அவள் அது என ......’’ | சிவஞானபோதம் |
| ‘‘ஒருவனோடொருத்தி ......’’ | சிவஞான சித்தியார் |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- 1.1.1 இலுள்ள மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்.
- தேவாரமுதலிகளின் பாடல்கள்.
- திருவாசகப் பாடல்கள்.
- சைவசித்தாந்த சாஸ்திரப் பாடல்கள்.
- டிமைன் கடதாசி, பிளற்றினம் பேனை.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி** V: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- தேவாரமுதலிகளின் பாடல்களில் கடவுள் ஒருவரே என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக் காட்டுவர்.
- திருவாசகப் பாடல்களின் மூலம் கடவுள் ஒருவரே என்பதை எடுத்துக் காட்டுவர்.
- சைவசித்தாந்த சாஸ்திரங்கள் மூலம் கடவுள் ஒருவரே என்பதை நிறுவுவர்.

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களைச் சேகரித்து கலந்துரையாடிக் கருத்தை முன்வையுங்கள்.

**குழு 1, 3**

கீழ்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பாட்டினைப் பூர்த்தி செய்க.

(அ) ஈறாய் முதல் ஒன்றாய் ...... - A
(ஆ) வானாகி மண்ணாகி ...... - B
(இ) அவன் அவள் அது ...... - C
(ஈ) ஒருவனோடு ஒருத்தி ...... - D
(உ) ஏகன் அனேகன் ...... - E

மேலுள்ள பாடலடிகள் காணப்படும் நூல்களைக் குறிப்பிடுக.

| நூல்கள் | குறியீடு |
|---|---|
| 1. சிவஞானசித்தியார் | |
| 2. தேவாரம் | |
| 3. சிவபுராணம் | |
| 4. சிவஞானபோதம் | |

**குழு 2, 4**

பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| A. தடத்தநிலை | B. சிவஞானசித்தியார் | C. விஷ்ணு | D. சக்தி |
| E. சிவம் | F. மெய்கண்டதேவர் | G. சொரூபநிலை | H. அருணந்தி சிவாச்சாரியார் |
| I. பிரமா | J. நாதம் | K. உருத்திரன் | L. சிவஞானபோதம் |

(1)கடவுளின் இருநிலைகளுடனும் தொடர்புடைய தொகுதி,
(அ) A, B (ஆ) A, G (இ) C, J (ஈ)E, J

(2)அருவத்திருமேனியை உள்ளடக்கிய தொகுதி,

(அ) E, I, J (ஆ) C, D, K (இ) I, J, K (ஈ) D, E, J

(3) சைவசித்தாந்தத்தின் முதல்நூல், வழிநூல் என்பவை அடங்கும் தொகுதி,
(அ) B, L (ஆ) A, B (இ) K, L (ஈ) H, L

(4)சித்தாந்த நூல்களை அருளியோர் அடங்கும் தொகுதி,
(அ) B, l (ஆ) F, H (இ) D, M (ஈ)I, J

(5)முத்தொழில்களுடன் தொடர்புடைய மூர்த்தங்கள்,
(அ) L, I, K (ஆ) C, D, E (இ) I, C, K (ஈ)E, J, K

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ......................................................................................................................
(2) ......................................................................................................................
(3) ......................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

கடவுள் ஒருவர் உள்ளார் என்பதையும், அவரே யாவற்றுக்கும் அடிப்படையானவர் என்பதனையும் பிள்ளைகளுக்கு உணர்த்தி பிள்ளைகளோடு தாமும் இறை வழிபாட்டில் ஈடுபடுவர்.

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : நாளாந்தக் கடமைகளில் இறைசிந்தனையுடன் ஈடுபட்டுச் செயற் படுவர்.

**செயற்பாடு** : "வீடுகளிலும் பாடசாலைகளிலும் கோயில்களிலும் சமயச் செயற்பாடுகளில் ஈடுபடுவோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :
- வீட்டில் சமயச் செயற்பாடுகளில் ஈடுபடுவர்.
- பாடசாலையில் சமயவிழாக்களை முன்னின்று நடத்துவர்.
- ஆலயங்களில் நடைபெறும் நித்திய, நைமித்திய கிரியைகளில் பங்குபற்றுவர்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி I:**
- நாம் நாள்தோறும், விசேட தினங்களிலும் கடைப்பிடிக்கும் சைவப் பழக்க வழக்கங்களைக் கூற இடமளியுங்கள்.
- அவை கடைப்பிடிக்கும் முறைமைகளைக் கேட்டறியுங்கள். அவை கடைப்பிடிக்கப்பட வேண்டிய இடங்களைக் கேட்டு அறியுங்கள்
- கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்கள் குறித்து அதி கவனம் செலுத்துங்கள்.
  - வீடு, பாடசாலை, கோயில் என்பன முக்கிய இடங்களாகும்.
  - வீடு, பாடசாலை, கோயில்களில் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய சமயச் செயற்பாடுகள் பல உள்ளன.

**படி II:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக் களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழு வினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப் பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன்போது பின்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - வீட்டில் நாள்தோறும் நித்திய கருமானுஷ்டானங்களை அனுட்டிக்கும் போது, திருநீறு தரிக்க வேண்டிய இடங்களில் தரித்து, சந்தனம், குங்குமம் இட்டு, இறைவன் முன்னிலையில் விளக்கேற்றிப் பூ வைத்து பஞ்சதோத்திரங்களைப் பண்ணோடு பாடி வழிபடுதல்.
  - தீட்சைப் பெற்றவரே சைவ சமயத்தவராவர்.
  - தினமும் பெற்றோர் பெரியோரின் ஆசீர்வாதத்தைப் பெறுதல்.
  - பாடசாலைகளில் காலைக் கூட்டுப்பிரார்த்தனைகளில் ஈடுபடுதல்.
  - நவராத்திரி விழா, நாயன்மார்கள், சந்தானகுரவர்கள் குருபூசைகளை முறைப்படி

நடத்துதல்.
- பாடசாலைகளில் குரு ஆசீர்வாதம் பெறுதல்.
- சமூகத்தொடர்பை ஏற்படுத்தும் சாதனமாக ஆலய விழாக்கள் அமைகின்றன என்பதனை ஏற்று விழாக்களை உபயமாக ஏற்றுச் செயற்படுத்தல்.
- நாள் தோறும் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுதல் வேண்டும். அவ்வாறு செல்ல முடியாதவர்கள் செவ்வாய், வெள்ளி போன்ற நாட்களில் ஆலய வழிபாடு செய்தல் வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்.
- ஆலய வழிபாடு, கிரியைகள் தொடர்பான இறுவட்டுக்கள்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- வீட்டில் மேற்கொள்ளும் சமய அனுஷ்டானங்களை முறைப்படி குறிப்பிடுவர்.
- பாடசாலையில் மேற்கொள்ளும் சமயஞ்சார் செயற்பாடுகளைப் பட்டியற்படுத்துவர்.
- ஆலயத்தில் சமுதாய இணைப்பை ஏற்படுத்தும் வகையில் சமயச் செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு 1:** (1) உமது வீட்டில் இறைவழிபாட்டுடன் மேற்கொள்ளும் நாளாந்தக் கடமைகளைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு 2:** (1) உங்கள் பாடசாலையில் மேற்கொள்ளும் சமயவிழாக்களைக் குறிப்பிடுக.
(2) இக் கற்றல் செயற்பாட்டிற்கான நிகழ்வுகளை ஓர் சுவரொட்டியின் மூலம் விளக்குக.

**குழு 3:** (1) ஆலயத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் நிகழ்வுகளைப் பட்டியற்படுத்துக.
(2) நீங்கள் மேற்கொண்ட செயற்பாடுகளுடன் தொடர்புடைய படங்களை வகுப் பறையில் காட்சிப்படுத்துங்கள்.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ......................................................................................................................
(2) ......................................................................................................................
(3) ......................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

வீடு, பாடசாலை, ஆலயம் என்பனவற்றில் மேற்கொள்ளுகின்ற நாளாந்தச் செயற்பாடு களிலும் விசேட செயற்பாடுகளிலும் பிள்ளைகளையும் ஈடுபடுத்தி நாமும் ஈடுபடுவோம்.

**தேர்ச்சி 1.0 :** தமது அன்றாட வாழ்க்கையில் கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.3 :** சமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் இனங்கண்டு பின்பற்றுவர்.

**செயற்பாடு :** ''சைவசமய விழுமியப் பண்புகளை வாழ்வில் கடைப்பிடிப்போம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- ஒப்புரவு என்பதன் பொருளைக் கூறுவர்.
- ஈகை என்னும் விழுமியப் பண்பை வாழ்வில் கடைப்பிடிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- சமய ஒழுகலாறுகளை விளக்கும் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் வாழ்வில் பின்பற்றும் அறச்செயற்பாடுகளைக் கூற இடமளியுங்கள்.
- வாழ்வு செம்மையுற ஒவ்வொரு சைவசமயியும் அறச்செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்பதனை ஒப்புரவு, ஈகை மூலம் எடுத்துக் காட்டுங்கள்.

**படி II:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக் களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழு வினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப் பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன்போது கீழ்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - சமயநெறி வலியுறுத்தும் அறங்களில் ஒப்புரவும் ஒன்றாகும்.
  - ஒப்புரவு என்பது உலக வாழ்வியலோடு ஒட்டி ஒழுகுதல் / வாழுதல்.
  - அரச தர்மத்தைத் தாங்கும் நாற்தூண்களில் ஒப்புரவும் ஒன்று.
  - ஈகை எல்லோராலும் பின்பற்றக்கூடிய ஒரு விழுமியம்.
  - ஈகையையே தம்வாழ்வில் அறமாகக் கொள்ள வேண்டும். அதற்கு உதாரணமாக கர்ணன், சிபிச்சக்கரவர்த்தி ஆகியோரைக் குறிப்பிடலாம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- திருக்குறள் கூறும் ஒப்புரவு, ஈகை அதிகாரங்கள்.
- செயற்பாட்டுப்படிவம்.
- தகவற்கோவை - சித்திரக்கதைகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- சைவசமயிகள் எல்லோரும் பின்பற்ற வேண்டியது நல் அறங்கள்.
- எல்லோராலும் ஈகை என்ற அறத்தைப் பின்பற்ற முடியும்.
- உலகத்தோடு ஒட்டி வாழ்தலே வாழ்வின் முக்கிய அறத்தின் ஆதாரம்.

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய தகவல்களைச் சேகரித்து கலந்துரையாடி முன்வையுங்கள். அதிலுள்ள செயற்பாடுகளை வகுப்பறையில் செய்து காட்டுங்கள். அதனைக் கடைப்பிடியுங்கள்.

**குழு 1, 3 (ஒப்புரவு)**

(1) ஒப்புரவு என்றால் என்ன?

(2) இதனை விளக்கும் கதை ஒன்றினைக் குறிப்பிட்டு அதனை நாடகமாக நடித்துக் காட்டுக.

**குழு 2, 4 (ஈகை)**

(1) ஈகை என்றால் என்ன?

(2) ஈகை என்றதும் உமது நினைவிற்கு வரும் கதை ஒன்றினைக் குறிப்பிட்டு நாடகமாக நடித்துக் காட்டுக.

### ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..................................................................................................................

(2) ..................................................................................................................

(3) ..................................................................................................................

### பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

நீங்களும் ஒப்புரவு, ஈகை என்பவற்றை சிறப்பாக வாழ்வில் கடைப்பிடித்து, மற்றவர்களும் அவற்றைத் தம் வாழ்வில் கடைப்பிடிக்குமாறு வாழ்ந்து காட்டுங்கள்.

வாழ்க்கையில் ஒப்புரவு, ஈகை, ஆகிய விழுமியப் பண்புகளைக் கடைப்பிடித்து பிறருக்கு முன்மாதிரியாக நடவுங்கள்.

**தேர்ச்சி 1.0 :** தமது அன்றாட வாழ்க்கையில் கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.4 :** சைவசமய விரதங்களை அறிந்து கடைப்பிடிப்பர்.

**செயற்பாடு :** "பஞ்சாங்கத்தினூடாக வாழ்வியல் விடயங்களை அறிந்து கொள்வோம்."

**பாடவேளை :** 01

**கற்றற் பேறுகள் :**
- வாழ்வியலில் பஞ்சாங்கம் பார்த்தலின் அவசியத்தை அறிந்து கடைப்பிடிப்பர்.
- உத்தராயண தட்சணாயன காலங்களை பஞ்சாங்கத்தில் பார்த்தறிவர்.
- விரதங்களினதும் பண்டிகைகளினதும் காலத்தை பஞ்சாங்கத்தில் பார்த்துக் கடைப்பிடிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- பஞ்சாங்கம் என்பதன் பொருளை மாணவரகளிடம் கேட்டறியுங்கள்
- பஞ்சாங்கத்தின் ஐந்து அங்கங்களையும் கலந்துரையாடுங்கள்.
- உத்தராயண, தட்சணாயன கால நிகழ்வுகளை வாழ்வியலில் இணைத்துச் செயற்படுங்கள்.

**படி II:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக் களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழு வினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப் பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன்போது கீழ்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - பஞ்சாங்கத்தில் ஐந்து அங்கங்கள் காணப்படுகின்றன.
  - ஐந்து அங்கங்கள் : வாரம், நடசத்திரம், திதி, யோகம், கரணம்
  - வருடங்கள் : பிரபவ முதல் அசஷய வரை 60
  - வாரம் : ஞாயிறு முதல் சனி ஈறாக 7
  - நட்சத்திரம் : அச்சுவினி முதல் ரேவதி ஈறாக 27
  - திதி : பிரதமை முதல் பௌர்ணமி வரை 15<br>பிரதமை முதல் அமாவாசை வரை 15
  - பிரதமை முதல் பௌர்ணமி வரை பூர்வபக்கம்.
  - பிரதமை முதல் அமாவாசை வரை அபரபக்கம்.
  - தை தொடக்கம் ஆனி வரை உத்தராயணம்.
  - ஆடி தொடக்கம் மார்கழி வரை தட்சணாயம்.

- வளர்பிறைக் காலம் (பூர்வபக்கம்) நற்காரியங்களுக்கு உத்தமம்
- தேய்பிறைக் காலம் (அபரபக்கம்) நற்காரியங்களுக்கு அதமம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்.
- பஞ்சாங்கங்கள்.
- பிரிசில் போர்ட், நிறப்பேனை.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- பஞ்சாங்கத்திலுள்ள ஐந்து அங்கங்களையும் எழுதுவர்.
- உத்தராயண, தட்சணாயன காலத்தை வகைப்படுத்துவர்.
- பஞ்சாங்கத்தின் உதவியுடன் விரத, பண்டிகைக் காலங்களை அறிந்து கொள்வர்.
- பூர்வ, அபரக் கிரியைகளின் காலங்களைப் பார்த்து வாழ்வில் செயற்படுத்துவர்.

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு 1:** உமக்கு வழங்கப்பட்ட பஞ்சாங்கத்தின் உதவியுடன் நீர் எவ்வெவ் விடயங்களை அறிந்து கொள்வீர் என அட்டவணைப்படுத்துக.

**குழு 2:** உத்தராயண காலத்தைப் பஞ்சாங்கத்தின் துணையுடன் அறிந்து, அக்காலங்களில் அனுட்டிக்கப்படும் விரதங்களை வகைப்படுத்துக.

**குழு 3:** தட்சணாயன காலத்தை பஞ்சாங்கத்தின் துணையுடன் அறிந்து அக்காலத்தில் அனுஷ்டிக்கப்படும் விரதங்களையும், விழாக்களையும் நிரப்படுத்துக.

**குழு 4:** பூர்வக் கிரியைகளை பஞ்சாங்கத்தின் உதவியுடன் நிரற்படுத்துக.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

(3) ..............................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

எமது வாழ்வியலில் விசேட நிகழ்வுகளை மேற்கொள்ளும்போது, பஞ்சாங்கத்தின் அவசியத்தையும், அதன் நம்பிக்கையையும் ஏற்றுச் செயற்பட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 1.0** : தமது அன்றாட வாழ்க்கையில் கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : சைவசமய விரதங்களை அறிந்து கடைப்பிடிப்பர்.

**செயற்பாடு** : "விரதங்களை நியதிப்படி அனுட்டிப்போம்."

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :
- விரதம் என்பதன் பொருளை எழுதுவர்.
- விரதங்களை அனுட்டிக்கும்போது கைக்கொள்ள வேண்டிய நியதிகளைக் கடைப்பிடிப்பர்.
- வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கப்படுவதன் முக்கிய நோக்கத்தை எழுதுவர்.
- மார்கழித் திருவாதிரையின் சிறப்பினை அறிந்து விரதம் அனுட்டிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- மாணவர்கள் அனுட்டிக்கின்ற விரதங்களைக் கூற இடமளியுங்கள்.
- கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்களில் அதிக கவனம் செலுத்துங்கள்.
- விரதங்கள் அனைத்தும் இறைவனை நோக்கி முறைப்படி அனுஷ்டிக்கப்படு கின்றன.
- விரதம், உபவாசம் என்ற பதங்கள் மனஒடுக்கத்திற்கும், இறைவனுக்கருகில் இருப்பதையும் குறிப்பால் உணர்த்துகின்றன.

**படி II:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக் களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்குக் குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழு வினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன்போது கீழ்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - ஆருத்திரா தரிசனம் மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரத்தில் அனுட்டிக்கப்படும் விரதம் ஆகும்.
  - இந்நாளின் சிறப்பை திருஞானசம்பந்தர் "ஆதிரை காணாது போதியோ" எனச் சிறப்பித்துள்ளார்.
  - சிவன் கோயில்களில் மார்கழித் திருவாதிரை அன்று விசேட அபிடேகமும் பூசையும் நடைபெறும்.
  - ஆருத்திரா தரிசனம் சிதம்பரத்திலும் ஈழத்துச் சிதம்பரத்திலும் (காரைநகர் சிவன் கோயில்) சிறப்பாக நடைபெறுகின்றது.

- பார்வதியை நோக்கி அனுஷ்டிக்கப்படும் விரதம் வரலட்சுமி விரதமாகும்.
- வரலட்சுமி விரதம் ஆவணி மாதம் பூரணைக்கு முன்பு வரும் முதல் வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படும்.
- இவ்விரதம் சுமங்கலிக்குரியது என்பது மரபு
- சுமங்கலிப் பெண்கள் தம் கணவர் நீடூழி வாழவும், மாங்கல்யம் நிலைக்க வேண்டியும் அனுஷ்டிப்பர். ஆயினும், தற்காலத்தில் கன்னிப் பெண்கள் தமக்கு சிறந்த கணவன் வாய்க்க வேண்டும் எனக் கருதி விரதத்தை நோற்பர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்.
- டிமைன்ற் கடதாசி, பிளாற்றினம் பேனா

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- திருவெம்பாவையின் இறுதிநாளில் அனுட்டிக்கப்படும் விரதத்தைக் கூறுவர்.
- திருவாதிரைத் திருநாளின் மறுபெயரைக் குறிப்பிடுவர்.
- வரலட்சுமி விரதம் அனுஷ்டிப்பதன் நோக்கத்தைக் குறிப்பிடுவர்.

## செயற்பாட்டுப் படிவம்

**திருவாதிரை விரதம்:**

கடவுள் -
காலம் -
அனுட்டிக்கும் முறை -
சிறப்பித்துக் கூறும் நூல்கள் -

**வரலட்சுமி விரதம்:**

கடவுள் -
காலம் -
அனுட்டிக்கும் முறை -
நோக்கம் -

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................
(2) ..........................................................................................................................
(3) ..........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

வீட்டில் விரதங்களை தாம் அனுஷ்டிப்பதன் மூலம், இவ்விரதத்தின் சிறப்பினைப் பிள்ளைகளுக்கு உணர்த்துங்கள்.

**தேர்ச்சி 1.0 :** தமது அன்றாட வாழ்க்கையில் கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.4 :** சைவசமய விரதங்களை அறிந்து கடைப்பிடிப்பர்.

**செயற்பாடு :** விரதங்களை அறிந்து அனுட்டிப்போம்

**பாடவேளை :** 01

**கற்றற் பேறுகள் :**
- சைவர் அனுட்டிக்கும் விரதங்கள் நான்கினைக் குறிப்பிடுவர்.
- திருக்கார்த்திகை விளக்கீடு பற்றி அறிவர்
- திருக்கார்த்திகை விளக்கீடு தொடர்பான கதைகளை கூறுவர்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- விளக்கீடு தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்களில் அதிக கவனம் செலுத்துங்கள்.
- சைவர்களால் கொண்டாடப்படும் பண்டிகைகள் கார்த்திகையில் கொண்டாடப் படும் பண்டிகை விளக்கீடு.
- புற இருள் நீக்கி அகஒளி பெறவேண்டுமென்ற நோக்கில் இப்பண்டிகை கொண்டாடப்படுகின்றது.

**படி II:**
- மாணவர்களை வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக் களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழு வினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன்போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - இறைவன் சோதிப் பிழம்பாகத் தோன்றிய காட்சியை விளக்கும் வகையில் கார்த்திகை விளக்கீடு கொண்டாடப்படுகிறது.
  - அன்றைய தினம் மாலையில் ஆலயங்களில் சுவர்க்கப்பானை என்ற வகையில் வாழைமரம் நட்டு ஓலைகளால் அலங்கரிக்கப்பட்டு அதனை எரியூட்டி இறைவனின் சோதி வடிவமாகக் கருதி வழிபாடு செய்வர். இதனைக் குமாராலய தீபம் என அழைப்பர். வீடுகளில் தீபங்கள் ஏற்றி வழிபாடு செய்யும் முறையினை சர்வாலய தீபம் என அழைப்பர்.
  - முருகன் ஆலயத்தில் கொண்டாடப்படும்போது குமராலயதீபம் என்றும், ஏனைய ஆலயங்களில் ஒளியேற்றும்போது சர்வாலய தீபம் எனவும் போற்றப்படு கின்றது. இத்தினங்களில் வீடுகளில் தீபங்கள் ஏற்றி இறைவழிபாடு செய்யும் முறையும் இனிப்புப் பண்டங்கள் பரிமாறும் வழக்கமும் இடம்பெறுகின்றது
  - திருவண்ணாமலையில் மிகப் பெருவிழாவாக இப்பண்டிகை கொண்டாடப் படுகின்றது போன்று எமது நாட்டிலும் மிகப் பெரும் நிகழ்வாக இடம் பெறுகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- பிரிசில் போர்ட், நிறப்பேனாக்கள்.
- மாதிரிப் படங்கள், செயற்பாட்டுப் பத்திரம்

### கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி** V: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.

- திருக்கார்த்திகை பற்றிய கதையினை அறிந்து கூறுவர்
- திருக்கார்த்திகை தினங்களில் ஆலயங்களில் நடைபெறும் விழாக்களில் பங்கு பற்றி அவை பற்றி விளக்குவர்
- திருக்கார்த்திகை தினங்களில் தமது வீடுகளில் சமயச் செயற்பாடுகளில் ஈடுவடுவர்
- திருக்கார்த்திகை பற்றிய கதைகள், படங்கள் பற்றிய விடயங்களை காட்சிப்படுத்துவர்

### செயற்பாட்டுப் படிவம்

விளக்கீட்டுப் பண்டிகை ஒன்றை மாதிரிச் செயற்பாடாக செயற்படுத்துங்கள்

### ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ....................................................................................................................

(2) ....................................................................................................................

(3) ....................................................................................................................

### பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

பிள்ளைகளை விளக்கீடு அன்று பந்தங்களை ஏற்றிச் செயற்பட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 1.0 :** தமது அன்றாட வாழ்க்கையில் கடவுள் சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.5 :** வாழ்வியல் சடங்குகள் பற்றி அறிந்து, அவற்றின் பொருள் உணர்ந்து அவற்றைப் பின்பற்றுவர்.

**செயற்பாடு :** ‘‘வாழ்வியற் சடங்குகளில் ஈடுபடுவோம்.’’

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- அபரக்கிரியை என்பதன் பொருளை விபரிப்பர்.
  வாழ்வியல் சடங்கில் இடம்பெறும் சடங்கினைக் கூறுவர்.
- சிரார்த்தம் என்பதன் பொருளைக் கூறுவர்.
- அபரக்கிரியைகளின் ஒழுங்கு முறைகளைக் கூறுவர்

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி I:**
- எமது வாழ்வியற் சடங்குகள் பற்றிக் கூற இடமளியுங்கள்.
- கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்களில் அதிக கவனம் செலுத்துங்கள்.
- சைவசமயத்தவரோடு தொடர்புடைய வாழ்வியல் சடங்குகள் பூர்வக் கிரியை, அபரக்கிரியை என இருவகைப்படும்.
- ஒரு மனிதனின் இறப்போடு தொடர்புடைய கிரியைகள் அபரக்கிரியை.
- அபரக்கிரியைகள் சீவன் சிவத்தன்மை பெறுவதற்காக மேற்கொள்ளப்படுவது.

**படி II:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழு வினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள். அதன்போது கீழ்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - சைவசமயத்தவரோடு தொடர்புடைய வாழ்வியற் சடங்குகள் பூர்வக் கிரியை, அபரக்கிரியை என இருவகைப்படும்.
  - இறந்தபின் செய்யப்படும் கிரியைகளாவன:
    1 வீட்டில் ஆற்றப்படும் கிரியைகள்
    2 சுடலையில் ஆற்றப்படும் கிரியைகள்
    - இறந்தவரின் உடலை தெற்கு வடக்காகப் கிடத்தி தலைமாட்டில் ஒற்றைத் திரி போட்டு குத்துவிளக்கேற்றல்.
    - வீட்டு வாசலில் கறிவாழை, மாவிலை, தோரணம் கட்டுதல்.
    - பிரேதசுத்தி செய்தல். (குளிப்பாட்டல்)
    - சைவக்குருக்களினால் மரணக்கிரியைகள் ஆரம்பிக்கப்படும்.
    - அட்ட திக்குத் தேவர்களையும் சிவனையும் வழிபடல்.
    - பந்தம் பிடித்தல்

- சுண்ணமிடித்தல்
- திருப்பொற் சுண்ணப் பதிகம் பாடுதல்.
- வாய்க்கரிசி இடல்
- பாடை தூக்கும் போது ஒப்பாரி வைத்தல்

இறந்தவரின் உடல் சுடலையை நோக்கிச் செல்லும் போது நடைபெறும் சடங்குகள்.
- பாடையில் வைத்துச் சுடலைக்குக் கொண்டு செல்லுதல்.
- நெற்பொரி தூவுதல்.
- பறை அடித்தல்
- தேவாரம் பாடுதல்
- தீச்சட்டியும் கும்பமும் கொண்டு செல்லுதல்.

சுடலைக் கிரியை
- வாய்க்கரிசி இடுதல்.
- சிதையைக் கொள்ளிக் குடத்துடன் இடது புறமாக மூன்றுமுறை சுற்றிவந்து உடலுக்கு எதிரே நின்று கொள்ளியைத் தலைமாட்டில் வைத்தல்.
- உடல் சிவாக்கினியுடன் சங்கமித்தல். (நகர்ப்புறங்களில் இறந்தவரின் உடலை தகனச்சாலையில் எரிக்கும் வழக்கம் காணப்படுகின்றது - CREMATORIUM )
- சடங்கில் பங்குபற்றியோர் நீராடிய பின்னரே வீட்டுக்குச் செல்லுதல்.

- அஸ்தி சஞ்சயனம்
- அந்தியேட்டி
- சிரார்த்தம்
- மகாளயம்

**அஸ்தி சஞ்சயனம்**

அஷ்தி சஞ்சயனம் என்பது எலும்பைச் சேர்த்தல் என்று பொருள்படும். முதல் ஐந்து நாளில் ஒன்றிலேனும் ஏழாம் ஒன்பதாம் நாள்களிலேனும் செய்யத்தக்கது. சிதைக்கு தீ வைத்தவரும் உறவினர்களும் சுடலைக்குச் சென்று பிராயச்சித்தத்துக்காக அஸ்திர மந்திரத்தால் நூறாகுதிகள் செய்து பிருதுவி முதலிய முப்பத்தாறு தத்துவங்களையும் பூசித்து ஆகுதி செய்வர். பழம், ரொட்டி, இளநீர் என்பவற்றை பலியாக இடுவர். பின் ஒரு பாத்திரத்தில் பாலைவிட்டு எரிந்த உடலில் இருந்து கால், கொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய பகுதிகளில் உள்ள எலும்புகளை எடுத்து அப்பாத்திரத்தில் இடுவர். இப்பாத்திரத்தில் உள்ள அஸ்தி அந்தியேட்டி கிரியையின் போது ஆழ்ந்த நீரில் கரைத்து விடுவர்.

சில பிரதேசங்களில் இறந்தவரின் உடலை புதைக்கும் வழக்கம் உண்டு.இவர்கள் மூன்றாம் குழி மூடுதல் எனும் சடங்கினை ஆற்றுவர். இதன் பின் அவ்வான்மா வீட்டை நோக்கி வராது என்ற நம்பிக்கை காணப்படுகின்றது.

**அந்தியேட்டி**

(அந்திய இட்டி- கடைசியான யாகம்) இறந்த ஆன்மா சிவபதவி அடையும் பொருட்டு செய்யப்படுகின்றது. இதனை பாஷாண பூசை என்று அழைப்பர். இறந்த ஆன்மாவை ஒரு கல்லிலே பூசை செய்வது பாஷாண பூசை எனப்படும்.

கல்லாய் நிற்கும் ஆன்மாவிற்கு நிவேதனம் படைத்து தூபதீபம் காட்டி கடலில் அல்லது நதியில் விட்டு ஸ்நானம் செய்வர். வீட்டில் ஆசௌசம் நீங்குவதற்காக வீட்டில் சைவக் குருக்களை அழைத்துக் கிரியைகளைச் செய்வர். பின் அந்தணர்களை அழைத்து இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக கிரியைகள் மேற்கொண்டு தானங்கள் வழங்கி கிரியைகளில் பங்குபற்றியோருக்கு உணவு அளிப்பர். பின்

**சிரார்த்தம்**

சிரார்த்தம் இறந்தவரின் ஒரு வருட முடிவில் இறந்த திதியில் செய்யப்படுவது. இதனை சபிண்டீகரணம் என்றும் அழைப்பர். ஆனால் தற்போது அந்தியேட்டி என்று சபிண்டீகரண பூசை செய்யும் வழக்கம் உள்ளது. அன்றைய தினம் புரோகிதர்களை அழைத்து கிரியைகள் ஆற்றித் தானம் வழங்குவதோடு எள்ளும் தண்ணீரும் இறைத்து ஆன்ம சாந்திக்காக பிரார்த்தனையும் நடைபெற்று எல்லோருக்கும் உணவளிப்பர். தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் இறந்தவரின் திதியில் சிரார்த்தம் செய்யப்படும். இதனை திவசம் என்றும் அழைப்பர்.

**மகாளயம்**

புரட்டாதி மாதத்து அபரபட்சத்துப் பிரதமை முதல் அமாவாசை வரையான காலமே மகாளயபட்சமாகும்.

வருடாந்த சிரார்த்தம் செய்யத் தவறியவர்கள் இக்காலத்தில் மகாளய சிரார்த்தம் செய்ய உகந்தது.

இங்கு புரோகிதர்களை அழைத்து கிரியைகள் செய்து தானம் வழங்குவதோடு எள்ளும் தண்ணியும் இறைத்து ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் நடைபெறுகின்றது. இவற்றின் மூலம் இறந்த பிதிர்கள் எம்மை ஆசீர்வதிப்பர் என்பது ஐதீகம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் பத்திரம்
- டிமைன் கடதாசி, பிளாற்றினம் பேனா

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.

- சைவமக்கள் வாழ்வில் இடம்பெறும் கிரியைகளை வகைப்படுத்துவர்.
- அபரக்கிரியையில் ஆற்றப்படும் கிரியைகளை படிமுறையாக நிரற்படுத்துவர்
- உறவினரின் மரணக்கிரியையில் பங்குகொண்டு துயர் பகிர்ந்து கொள்வர்.

## செயற்பாட்டுப் படிவம்

(சகல குழுக்களுக்கும் வழங்குக.)

(1)உத்தரக்கிரியை என்பதன் பொருளைத் தருக.

(2)அஸ்தி சஞ்சயனம் மேற்கொள்வதன் பயன் யாது?

(3)சபீண்டீகரணம் என்றால் என்ன?

(4)சிரார்த்தம் செய்யும் இடங்கள் நான்கு தருக.

(5)மகாலயம் செய்யப்படும் காலம் எது?

(6) அபரக்கிரியையில் ஆற்றப்படும் கிரியைகளை அட்டவணைப்படுத்துவர்

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1).........................................................................................................................

(2).........................................................................................................................

(3).........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

பெற்றோர் பிள்ளைகளைத் தம்மோடு அழைத்துச் செல்வதன் மூலம் மரணச் சடங்கு என்னும் வழக்காற்றினை பின்வரும் காலங்களில் எடுத்துச் செல்வதற்கு ஆற்றுப்படுத்தல் முக்கியமானது.

**தேர்ச்சி 2.0** : பக்தி இறைநம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து, அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : திருமுறைப் பாடல்களினதும், தோத்திரப் பாடல்களினதும் அருஞ் சொற்களை விளக்குவர்; சந்தர்ப்பம் கூறுவர்; பண்ணுடன் பாடுவர்.

**செயற்பாடு** : ''திருப்புகழ், நாலாயிரத்திவ்விய பிரபந்தங்களை பக்தியோடு பாடுவோம். எழுத்துப் பிழையின்றி பாடல்களையும் பொழிப்பினையும் எழுதுவோம்.''

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :
- திருப்புகழை சந்தத்துடன் பாடி, பொருள் கூறுவர்.
- நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தை இராகத்துடன் பாடி பொருள் கூறுவர்.
- எழுத்துப் பிழையின்றி பாடல்களையும் பொருளையும் எழுதுவர்.
- தமது வாழ்வில் தோத்திரப் பாடல்களைப் பக்தியுடன் பாட முன்வருவர்

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி I:**
- தோத்திரப் பாடல்கள் பற்றி மாணவர்களிடம் கேளுங்கள்.
- மாணவர்களுக்குத் தெரிந்த திருப்புகழ், நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தில் இடம்பெறும் பாசுரம் ஒன்றினைப் பாடும்படி கூறுங்கள்.
- கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.

  ''உம்பர் தரு தேனுமணி...'' - திருப்புகழ்
  ''பாதிமதிநதி...'' - திருப்புகழ்
  ''பச்சைமா மலைபோல் மேனி...'' - நாலாயிரத்திவ்ய பிரபந்தம்
  ''உண்ணுநீர் ......'' - நாலாயிரத்திவ்ய பிரபந்தம்

  ஆகிய பாடல்களைச் சந்தத்துடன் / இராகத்துடன் பாடக்கூடிய சமய பாட ஆசிரியர் பாடியோ அல்லது பாடக்கூடிய மாணவர்களைப் பாடச்செய்தோ ஏனைய மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- தேவையேற்படின் சங்கீத ஆசிரியரின் உதவி பெற்று பாடல்களை இராகத்துடன் பாடச் செய்யலாம் அல்லது இசைப்பேழையினைப் பயன்படுத்தலாம்.

**படி II:**
- மாணவர்களை வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குழுக் களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழு வினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றிற்கு கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  - (1) ''உம்பர் தரு தேனுமணி ......'' என்ற திருப்புகழ் அருணகிரிநாதரால் விநாயகர் மீது பாடப்பட்டது.
  - (2) ''பாதி மதி நதி......'' என்ற திருப்புகழ் அருணகிரிநாதரால் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருவேரகம் (சுவாமி மலை) தலத்திலுள்ள முருகன் மீது பாடப்பட்டது.
  - (3) ''பச்சை மாமலை மேனி ......'' என்ற பாடல் நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் அடங்குகின்றது. இது தொண்டரடிப்பொடியாழ்வாரினால் விஷ்ணுவின் மீது பாடப்பட்ட பிரபந்தம். இது திருமாலை என்னும் நூலில் 2வது பாடலாக இடம்பெறுகின்றது.
  - (4) ''உண்ணுஞ் சோறு ......''
    இது நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தில் திருவாய்மொழியில் இடம்பெறுகின்றது. இது நம்மாழ்வாரினால் பாடப்பட்டது. இது 6ம் பத்தில் உள்ள 1வது பாடலாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்.
- டிமை கடதாசி, பிளாற்றினம் பேனை
- பாடல்கள் அடங்கிய இசைப்பேழை

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- தோத்திரப் பாடல்களின் சிறப்பினைக் கூறுவர்.
- தோத்திரப் பாடல்களுள் அடங்குபவற்றை பட்டியற்படுத்துவர்.
- திருப்புகழ் என்பதன் பொருளை விளக்குவர்.
- தரப்பட்ட பாடல்களை மனனம் செய்து பக்தியுடன் பாடுவர்.
- பாடல்களை எழுத்துப் பிழையின்றி எழுதிப் பொழிப்பினையும் எழுதுவர்.

## செயற்பாட்டுப் படிவம்

(1) குழுவினரால் தெரிவு செய்யப்படும் பாடல்களை வரிக்கிரமமாக எழுதுங்கள்.
(2) அப்பாடல்களின் பொருளையும் எழுதுங்கள்.
(3) பாடியவரின் பெயரைக் குறிப்பிடுங்கள்.
(4) தெரிவு செய்த பாடல்களைச் சந்தம் / இராகத்துடனும் பக்தியுடனும் பாடுங்கள்.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................
(2) ..........................................................................................................................
(3) ..........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

தோத்திரப் பாடல்களை (திருப்புகழ், நாலாயிரத் திவ்ய பிரபந்தம்) மனனம் செய்து சந்தம் / இராகத்துடன் பாடச் செய்யுங்கள். பொது நிகழ்வுகளில் பாடல்களைப் பாடுவதில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 2.0** : பக்தி இறைநம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து, அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : திருமுறைப் பாடல்களினதும், தோத்திரப் பாடல்களினதும் அருஞ் சொற்களை விளக்குவர்; சந்தர்ப்பம் கூறுவர்; பண்ணுடன் பாடுவர்.

**செயற்பாடு** : ''அபிராமியந்தாதி, சகலகலாவல்லிமாலை, பராபரக்கண்ணி பாடல் களை பக்தியோடு பாடுவோம். எழுத்துப் பிழையின்றி பாடல்களையும் பொழிப்பினையும் எழுதுவோம்.''

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :
- தரப்பட்ட பாடல்களின் சிறப்பினையறிந்து இராகத்துடனும் பக்தியுடனும் பாடுவர்.
- அப்பாடல்கள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தினைக் கூறுவர்.
- அப்பாடல்களை எழுத்துப் பிழையின்றி எழுதி, அதன் பொழிப்பினை யும் கூறுவர்.
- கோயில்களில், பாடசாலைகளில் பாடல்களை இராகத்துடனும் பக்தியுடனும் பாட முன்வருவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- மாணவர்களுக்குத் தெரிந்த தோத்திரப் பாடல்களை கூறும்படி கேளுங்கள்.
- அப்பாடல்களுள் ஒன்றினைப் பாடும்படி கூறுங்கள்.
- கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்கள் குறித்து அதி கவனம் செலுத்துங்கள்.
  ''தனந்தரும் கல்வி...'' - அபிராமியந்தாதி
  ''ஆத்தாளை - எங்கள்...'' - அபிராமியந்தாதி
  ''தூக்கும் பனுவல்...'' - சகலகலாவல்லிமாலை
  ''சிந்தித்தவெல்லாமென்......'' - பராகரக்கண்ணி
  ஆகிய பாடல்களை சந்தத்துடன் / இராகத்துடன் பாடக்கூடிய சமய பாட ஆசிரியர் பாடியோ அல்லது பாடக்கூடிய மாணவர்களைப் பாடச்செய்தோ ஏனைய மாணவர்களை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- தேவையேற்படின் சங்கீத ஆசிரியரின் உதவி பெற்றுப் பாடல்களை இராகத்துடன் பாடச் செய்யலாம் அல்லது இசைப்பேழையினைப் பயன்படுத்தலாம்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- தரஉள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- நியதிகளைக் கூறுங்கள்.
- மாணவர்கள் இசைப்பேழையினைப் பயன்படுத்தவும் அனுமதியுங்கள்.

**படி III:**
- மாணவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.
- தேவையேற்படின் மீண்டும் பாடல்களைப் பாடியோ, இசைப்பேழையை ஒலிக்க விட்டோ மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.

**படி IV:**
- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றிற்கு கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  (1) ''தனந்தரும் கல்வி ......''என்ற பாடல் அபிராமிஅந்தாதியில் அபிராமிபட்ட ரால் பாடப்பட்டது. இது ....... ஆவது பாடலாகும்.

(2) "ஆத்தாளை - எங்கள்......" என்ற பாடல் அபிராமிஅந்தாதியில் 10 ஆவது பாடலாகும். இது அபிராமிபட்டரால் பாடப்பட்டது.

(3) அபிராமியந்தாதியைப் படிப்பதனால் ஏற்படும் பயன் பற்றிக் கூறப்படுகின்றது.

(3) குமரகுருபரர் சரஸ்வதியின் அருள்வேண்டி "தூக்கும் பனுவல் ......" என்ற சகலகலாவல்லிமாலையிலுள்ள பாடலைப் பாடினார்.

(4) "சிந்தித்தவெல்ல மென் ......" என்ற பாடல் தாயுமானவரால் பாடப்பட்டது. இது பராபரக்கண்ணியில் உள்ளது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்.
- டிமைன்ற் கடதாசி, பிளாற்றினம் பேனை
- பாடல்கள் அடங்கிய இசைப்பேழை
- பாடப் புத்தகங்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி** V: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- தோத்திரப் பாடல்கள் மூன்றினைக் குறிப்பிடுவர்.
- அபிராமியந்தாதி, சகலகலாவல்லிமாலை பாடப்பட்ட சந்தர்ப்பத்தினைக் கூறுவர்.
- தரப்பட்ட பாடல்களை மனனம் செய்து இராகத்துடன் பாடுவர்.
- பாடல்களை வரிக்கிரமமாக எழுத்துப் பிழையின்றி எழுதி, பொழிப்பினையும் எழுதுவர்.

## செயற்பாட்டுப் படிவம்

(1)

| பாடல்கள் | நூல் | பாடியவர் |
|---|---|---|
| 1. தூக்கும் பனுவல் | ................................ | .......................................... |
| 2. தனந்தரும் | ................................ | .......................................... |
| 3. சிந்தித்தவெல்லா | ................................ | .......................................... |
| 4. ஆத்தாளை | ................................ | .......................................... |

(2) மேற்கூறப்பட்ட பாடல்களை மனனம் செய்து இராகத்துடன் பாடுக.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................

(2) ..........................................................................................................................

(3) ..........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

அபிராமியந்தாதி, சகலகலாவல்லிமாலை, பராபரக்கண்ணியிலுள்ள பாடல்களை மனனம் செய்வித்து இராகத்துடன் வீடு, பாடசாலை, ஆலயங்களில் பாடுவதற்கு வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 2.0 :** பக்தி இறைநம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து, அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.1 :** திருமுறைப் பாடல்களினதும், தோத்திரப் பாடல்களினதும் அருஞ் சொற்களை விளக்குவர்; சந்தர்ப்பம் கூறுவர்; பண்ணுடன் பாடுவர்.

**செயற்பாடு :** ''கந்தரலங்காரம், கந்தபுராணப் பாடல்களை இராகத்துடனும் பக்தியுடனும் பாடுவோம். எழுத்துப் பிழையின்றி பாடல்களையும் பொழிப்பினையும் எழுதுவோம்.''

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள் :**
- தரப்பட்ட பாடல்களின் சிறப்பினையறிந்து இராகத்துடனும் பக்தியுடனும் பாடுவர்.
- அப்பாடல்களை எழுத்துப் பிழையின்றி எழுதி, அதன் பொழிப்பினை யும் எழுதுவர்.
- பாடல்களை இராகத்துடனும் பக்தியுடனும் பாட முன்வருவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- மாணவர்களுக்குத் தெரிந்த தோத்திரப் பாடல்களை கூறும்படி கேளுங்கள்.
- அப்பாடல்களுள் ஒன்றினைப் பாடும்படி கூறுங்கள்.
- கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்கள் குறித்து அதி கவனம் செலுத்துங்கள்.
  ''சிந்திக்கின்றேன் நின்று...'' - கந்தரலங்காரம்
  ''மூவிரு முகங்கள்...'' - கந்தபுராணம்
  ஆகிய பாடல்களை இராகத்துடன் பாடக்கூடிய சமய பாட ஆசிரியர் பாடியோ அல்லது பாடக்கூடிய மாணவர்களைப் பாடச்செய்தோ ஏனைய மாணவர்களை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- தேவையேற்படின் சங்கீத ஆசிரியரின் உதவி பெற்று பாடல்களை இராகத்துடன் பாடச் செய்யலாம் அல்லது இசைப்பேழையினைப் பயன்படுத்தலாம்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- தரஉள்ளீட்டுப் பொருட்களை வழங்குங்கள்.
- நியதிகளைக் கூறுங்கள்.
- மாணவர்கள் இசைப்பேழையினைப் பயன்படுத்தவும் அனுமதியுங்கள்.

**படி III:**
- மாணவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.
- தேவையேற்படின் மீண்டும் பாடல்களைப் பாடியோ, இசைப்பேழையை ஒலிக்க விட்டோ மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.

**படி IV:**
- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றிற்கு கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  (1) ''சிந்திக்கின்றேன் நின்று ......'' என்ற பாடல் கந்தரலங்காரத்திலுள்ளது. இது அருணகிரிநாதரால் பாடப்பட்டது.
  (2) ''மூவிரு முகங்கள்......'' என்ற பாடல் கந்தபுராணத்தில் கச்சியப்பசிவாச்சாரியாரால் பாடப்பட்டது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்.
- டிமைன் கடதாசி, பிளாற்றினம் பேனை
- பாடல்கள் அடங்கிய இசைப்பேழை
- பாடப் புத்தகங்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- கந்தரலங்காரம், கந்தபுராணம் ஆகியவற்றின் ஆசிரியர்களைக் குறிப்பிடுவர்.
- தரப்பட்ட பாடல்களை மனனம் செய்து இராகத்துடன் பாடுவர்.
- பாடல்களை வரிக்கிரமமாக எழுத்துப் பிழையின்றி எழுதி, பொழிப்பினையும் எழுதுவர்.

### செயற்பாட்டுப் படிவம்

(1) தரப்பட்ட இரு பாடல்களையும் வரிக்கிரமமாக எழுதுங்கள்.
(2) பொழிப்புரையை எழுதுக.
(3) அப்பாடல்களை இராகத்துடனுடம் பக்தியுடனும் பாடுங்கள்.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................
(2) ..........................................................................................................................
(3) ..........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1) கந்தரலங்காரம், கந்தபுராணப் பாடல்களை மனனம் செய்வித்துப் பாடச் செய்யுங்கள்.
(2) பொது நிகழ்வுகளில் பாடுவதற்கு ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 :** பக்தி இறைநம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து, அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.2 :** சைவ சமயத்தின் பொது நூல், சிறப்பு நூல்களை அறிந்து அவை கூறும் தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு :** "வேதாகமங்கள் கூறும் பொருள் மரபுகளை அறிந்து கொள்வோம்."

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள் :**
- வேதம் என்பதன் பொருளை அறிவர்.
- வேதங்களின் பொருள் மரபு பற்றி விளக்குவர்.
  வேதங்களின் பிரிவுகளையும் அதனை தொகுத்தவர் பற்றியும் அறிவர்.
- ஆகமம் என்பதன் பொருளைக் கூறுவர்
- ஆகமம் என்பதன் தத்துவப் பொருள் மரபுகளை விளக்குவர்.
- சைவ சமயத்தின் முதனூல்கள் வேதமும் ஆகமமும் என்பதனை அறிவர்.
- வேதக ஆகமங்கள் வெளிப்படுத்தும் இறைபற்றிய உண்மைகளை ஆராய்ந்த கூறுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- சைவத்தின் பிரமாண நூல்களை மாணவர்களிடம் கேட்டறியுங்கள்.
- திருமந்திரம் வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல் .. என்னும் பாடல் வரிகளை விளக்கி வேதம், ஆகமம் பற்றிய செய்திகளை கலந்துரையாடுங்கள்
- கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்கள் குறித்து அதி கவனம் செலுத்துங்கள்.
  - சைவத்தின் முதனூல்களாகப் போற்றப்படுபவை வேதங்களும் ஆகமங்களும்
  - வேதம் - பொது நூல் :
  - ஆகமம் - சிறப்பு நூல் :
  - சமய தத்துவ கலை வாழ்வியல் சிந்தனைகளை எடுத்தியம்பும் இலக்கியங்கள்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுக்களுக்குமுரிய பொருட்களைப் பகிந்தளியுங்கள்.

**படி III:**
- குழுச் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- ஒரு குழுவினர் கருத்துக்களைக் கூற, ஏனைய குழுவினர் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வையுங்கள்.

**படி IV:**
- குழுக்களின் கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.
- கீழ்வரும் தலைப்புக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

  (1) வேதம் வித் என்ற வினையடியாகப் பிறந்ததினால் அறிதல் என்னும் பொருளுடையது
  வேதங்கள் இருக்கு, யசுர்,சாமம், அதர்வணம் என நான்காக வேத வியாசர் வகுத்தார்.
  ஒவ்வொரு வேதமும் சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணிங்கள், உபநிடங்கள் என்ற நான்கு பகுதிகளை உடையது.
  சங்கிதைகளும் பிராமணங்களும் கர்மகாண்டத்தினையும் ஆரணியம் உபாசனைக் காண்டத்தினையும் சேர்ந்தவை.

வேதங்கள் கூறும் பொருள் மரபு:

சமயம் - இயற்கை வழிபாடு (விண்ணைச் சார்ந்த தெய்வம், மண்ணைச் சார்ந்த தெய்வம். இடைவெளிக்குரிய தெய்வம்)
ஒரு கடவுள் கோட்பாடு என்ற வகையில் கடவுள் பற்றிய சிந்தனை வளர்ச்சி காணப்பட்டது
இருக்குவேதம் ஏகம் சத் விப்பரா பகுதா வதந்தி என்று குறிப்பிடும் (உள்ளது ஒன்று அறிஞர்கள் பலவாறு அழைக்கின்றனர்)
தெய்வங்களுக்கு பல மந்திரங்கள் சொல்லி வழிபடும் முறை காணபப்ட்டது (சதருத்திரியம் - யசூர்வேதம்)

இறைவனை இசையால் ஏத்தியும், போற்றியும் செய்யும் முறையும் காணப்பட்டது (சாமவேதம்)
வேள்வி யாகம், மந்திரம், மாந்திரீகம் போன்ற வழிபாட்டுமுறைகளும் இடம்பெற்றன. (யசூர்வேதம், இருக்கு வேதம் இவை பற்றிக் குறிப்பிடுகின்றன)

தத்துவம் - கடவுள் கோட்பாடு பற்றி தத்துவ சிந்தனைகளில் வளர்ச்சி காணப்பட்டது பிரமம் பற்றிய கருத்து
- ஆன்மா. உலகம் பற்றி விசாரணைகளில் முக்தி பற்றிய கருத்துக்களும் காணப்படுகின்றன.

குடும்ப நிலை - கூட்டுக் குடும்பம்
- அரசியல் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் இயங்கின.
- அரசு தனது மக்கள் என்ற அரசுரிமைப்படி ஆட்சி செய்யப்பட்டது.
- பெண்களின் நிலை அவர்கள் கல்வி, சுதந்திரம் பற்றிய கருத்துக்களும் காணப்படுகின்றன.
- கல்வி, பொருளாதாரம் பற்றிய கருத்துக்களும் காணப்படுகின்றன.

ஆகமம் கூறும் பொருள் மரபு:

- ஆகமம் என்பது வந்தடைதல் அல்லது போய்ச் சேர்தல் எனப் பொருள்படும்
- ஆகமம் முக்தி அடைவதற்கு வழிகாட்டும் நூல் ஆகும்.

| | |
|---|---|
| சிவாகமங்கள் | - 28 |
| சக்தி ஆகமங்கள் | - 67 (தந்திரம்) |
| வைணவ ஆகமம் | - 02 |
| உப ஆகமம் | - 207 |

- சிவாகமங்கள் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்கு பிரிவுகளைக் கொண்டது.

- சரியாபாதம்
  பிராயச்சித்த வழி. பவித்ர வழி
  சிவலிங்க இலக்கணம், உமாமகேஸ்வரர் முதலிய வடிவங்களின் இலக்கணங்கள், சிரார்ததம், அந்தியேட்டி விதிகளும் கூறப்படுகின்றது.
- கிரியாபாதம்
  மந்திர உச்சாடனம், சந்தியாவந்தனம், பூசை, செபம், தீட்சை, சிவசின்னங்கள், முதலியன பற்றிக் கூறப்படும்
- யோகபாதம்
  முப்பத்தாறு தத்துவங்கள் அட்டாங்க யோக அட்டமா சித்திகள் ஆறு ஆதாரங்கள் பற்றி விளக்குகின்றன
- ஞானபாதம்
  சிவனின் சொரூபம், மூவகை ஆன்மா, மூவகை கன்மங்கள், உலகம் பற்றிய கருத்துக் கூறப்படுகின்றது. ஞானபாதமே சைவசித்தாந்தம் என்று போற்றப்படுகின்றது. இவை தவிர ஆலய அமைப்பு, விக்கிரகக்கலை, வாகனங்கள், ஆலய தரிசன விதி. பூசை விழாக்கள், வழிபாட்டமுறை, அர்ச்சகர் ஒழுக்கம், அடியார் வழிபாடு, சிவாலய தரிசன பலன் போன்றனவும் கூறப்படுகின்றது.
  வேத ஆகமங்களின் சிறப்புக்களை தேவார திருவாசகங்களிலும் சைவசித்தாந்த நூல்களிலும் காணமுடிகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்.
- டிமைன் கடதாசி, நிறப்பேனா
- மேலதிக துணை நூல்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி** V: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- சைவத்தின் பிரமாண நூல்களை எழுதுவர்.
- வேதங்களை காண்டங்களாக வகைப்படுத்துவர்.
- ஆகமங்கள் கூறும் பொருள் மரபினை விளக்குவர்
- வேதங்கள் கூறும் பொருள் மரபினை விளக்குவர்

## செயற்பாட்டுப் படிவம்

**குழு 1, 3**

பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. வேதங்களின் பகுதிகளை காண்டங்களாக எழுதுங்கள்
2. வேதங்கள் கூறும் பொருள் தரபினை அட்டவணைப்படுத்துங்கள்

**குழு 2, 4**

1. ஆகமம் என்பதன் பொருளை குறிப்பிடுங்கள்
2. சிவாகமங்கள், சாக்தாகமங்கள், வைணவ ஆகமங்களின் எண்ணிக்கையை குறிப்பிடுங்கள்
3. ஆகமங்கள் கூறும் பொருள் மரபினை எழுதுங்கள்

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................

(2) ..........................................................................................................................

(3)......................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1)சைவமசயத்தின் சிறப்பினையும் தொன்மையையும் விளக்கும் நூல்கள் வேதமும் ஆகமங்களும் என்பதனைப் பிள்ளைகளுக்கு உணர்த்தி அவைகூறும் விடயங்களை பிள்ளைகள் கடைப்பிடித்து வாழ நெறிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 :** பக்தி இறைநம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து, அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.3 :** சமய இலக்கியங்கள் மூலம் சமய உணர்வை விருத்தி செய்வர், தத்துவக் கருத்துக்களை அறிந்து அவற்றை உரியவாறு வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு :** "கந்தபுராண மீட்சிப் படலத்தினூடாக இறைவனின் கருணைத்திறத்தினை அறிந்து கொள்வோம்."

**பாடவேளைகள் :** 05

**கற்றற் பேறுகள் :**
- கந்தபுராண ஆசிரியரையும், காண்டங்களையும் கூறுவர்
- கந்தபுராணம் முருகப்பெருமானின் வரலாற்றினையும் கருணைத்திறத்தையும் கூறும் நூல் என்பதனை விளக்குவர்.
- சூரசம்காரத்துடன் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தொடர்புபடுத்துவர்
- மீட்சிப்படலத்தின் மூலமாக ஆன்ம விடுதலை பற்றிய எண்ணக்கருவினைப் பெறுவர்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- மாணவரிடம் கந்தபுராணம் பற்றிய கதைகளை கேட்டு அறியுங்கள்
- கந்தபுராண ஆசிரியரையும் காண்டங்களையும் கேட்டு அறியுங்கள்
- ஆலயங்களில் நடைபெறும் சூரசம்கார விழா பற்றிக் கலந்துரையாடுங்கள்
- சைவ சித்தாந்தக் கருத்துக்களுடன் தொடர்புபடுத்திக் கலந்துரையாடுங்கள்
- கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுக்களுக்குமுரிய பொருட்களைப் பகிந்தளியுங்கள்.
- தேவையானவிடத்து ஆலோசனை வழங்கி வழிகாட்டுங்கள்

**படி III:**
- குழுக்கள் தனித்தனியே இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்
- ஒவ்வொரு குழுவினரும் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- ஒரு குழுவினர் கருத்துக்களைக் கூற, ஏனைய குழுவினர் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்துங்கள்.

**படி IV:**
- குழுக்களின் கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.
- கீழ்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- கந்தபுராண ஆசிரியர் - கச்சியப்ப சிவாச்சாரியார்
- கந்தபுராணம் - அசுரகாண்டம், உற்பத்திக் காண்டம், தட்சகாண்டம், தேவகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம் என ஆறு காண்டங்களைக் கொண்டது.
- முருகப் பெருமானின் பிறப்பு, வளர்ப்பு, திருமணம், சூரசம்காரம் தேவர்களை சிறைமீட்டல், அருளல், ஆகிய அருட்செயல்களை விளக்கும் புராணமாக விளங்குகின்றது.
- அறிவால் நிறைந்த புராணமாக விளங்குவது கந்தபுராணம்
- இறைவனின் பெரும்கருணையும் ஆன்மா மும்மலங்களில் இருந்து ஆன்ம விடுதலை அடையும் சைவ சித்தாந்த தத்துவக் கருத்தை விளக்கும் புராணமாக விளங்குகின்றது.
- கந்தபுராணம் தற்போதும் ஆலயங்களில் தற்காலத்திலும் கந்தபுராணம் புராண படனம் செய்யும் முறையும் காணப்படுகின்றது.

- கந்தபுராண மீட்சிப்படலத்தில் சூரனால் சிறைபிடிக்கப்பட்டிருந்த தேவர்களை முருகன் விடுவித்த அருட்சிறப்பு விளக்கப்படுகின்றது.
- இக்கதை மூலம் ஆன்மாக்கள் மல பந்தங்களினால் பல்வேறு துயரங்களை அடையும் போது துன்பங்களை நீக்கி இறைவன் அருள் செய்வான் என்ற தத்துவக் கருத்தினை கதை மூலம் விளக்கப்படுகின்றது.
- முருகன் - பரம்பொருள்
- தேவர்கள் - ஆன்மாக்கள்
- அசுரர்கள் - மும்மலங்கள்
- சிறை - மும்மலங்களினால் கட்டுண்டு இருத்தல்
- சிறை மீட்பு - ஆன்ம விடுதலை

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 2.3.1 இலுள்ள செயற்பாட்டுப்பத்திரம்.
- டிமை கடதாசி, நிறப்பேனாக்கள்.
- கந்தபுராணம் - மீட்சிப்படலம்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- கந்தபுராண ஆசிரியரையும் காண்டங்களையும் கூறுவர்
- முருகப் பெருமானின் கருணைத்திறத்தினை விளக்குவர்
- சைவசித்தாந்தக் கருத்துக்களுடன் தொடர்புபடுத்தி சூரசம்காரத்தினை விளக்குவர்
- மீட்சிப்படலம் வாயிலாக ஆன்ம விடுதலை பற்றிய விளக்கத்தினை கூறுவர்.
- சைவசித்தாந்தக் கருத்துக்களுடன் தொடர்புபடுத்தி சூரசம்காரத்தினை விளக்குவர்
- துன்பங்களில் இருந்து இறைவன் எம்மை விடுவிப்பான் என்பதனை அறிந்து இறைவழிபாட்டில் ஈடுபடுவர்.
- புராண படனம் செய்யும் மரபினை அறிவர்

### செயற்பாட்டுப் படிவம்

**குழு 1**
- மீட்சிப்படலத்தினை அடிப்படையாகக் கொண்டு நாடக பிரதியாக்கம் செய்து காட்டுக.

**குழு 2** பிரதியாக்கம் செய்யப்பட்ட நாடகத்தினை வகுப்பறையில் நடித்துக் காட்டுக

**குழு 3** மீட்சிப்படலத்தினை அடிப்படையாகக் கொண்டு வகுப்பறையில் சொற்பொழிவு ஒன்றினை தயாரிக்குக.

**குழு 4** வகுப்பறையில் புரர்ண படன நிகழ்வை செய்துகாட்டுங்கள்

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ........................................................................................................................

(2) ........................................................................................................................

(3) ........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

சமய இலக்கியங்கள் கற்பதற்கான ஆர்வத்தினை பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுங்கள் புராண படனம் நடைபெறும் ஆலயங்களுக்கு அழைத்துச் சென்று அதில் பங்குபற்றுங்கள்.

**தேர்ச்சி 3.0 :** பக்தி உணர்வு குறித்த விளக்கத்தை நாயன்மார் சரிதங்களினூடாக பெற முனைவர். இறை நம்பிக்கையும் அன்புமே பக்தியின் அடிப்படை எனப் புரிந்து கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பெரிய புராணம் கூறும் நாயன்மார் வரலாறு மூலம் பக்தி நிலைகளைப் புரிந்து கொள்ள முயற்சிப்பர், சமய வரலாறு கூறும் உண்மைப் பொருளை இனங் கண்டு கூறுவர்.

**செயற்பாடு : குங்கிலிய கலய நாயனார் பற்றி அறிந்து கொள்வோம்**

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**

- குங்கிலியக் கலய நாயனாரின் சிவத்தொண்டினை அறிந்து விவரிப்பர்.
- குங்கிலியக் கலய நாயனாரிடம் காணப்பட்ட நற்பண்புகளை பிறருக்கும் எடுத்துரைப்பர்.
- குங்கிலியக் கலய நாயனாரின் சிவத்தொண்டினை தாமும் பின்பற்றி சைவசமயத்தை மேன்மையுறச் செய்யும் ஆற்றலை வளர்த்துக்கொள்வர்.
- குங்கிலியக் கலய நாயனாரின் குருபூசைத்தினத்தைக் கொண்டாடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- குங்கிலிய கலய நாயனார் படத்தினை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்
- அதனை அடிப்படையாகக் கொண்டு உரையாடல் ஒன்றினை நிகழ்த்துங்கள்

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்
- செயற்பாட்டிற்கான படிவங்களை உரிய முறையில் பகிர்ந்தளியுங்கள்

**படி III:**
- குழுத் தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை வழங்குங்கள்
- அதன்போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்
  குங்கிலிய கலய நாயனார்
  - பிறந்த இடம் - திருக்கடவூர்
  - இளமைப்பெயர் - கலயர்
  - நின்ற நெறி – கிரியை நெறி
  - முத்தியடைந்த தினம் - ஆவணி மூலம்
  - புரிந்த தொண்டு - இறைவனுக்கு குங்கிலியத் தூபமிட்டு பூசை செய்தமை
  - சிறப்பு - இறைவன் மீது கொண்ட பக்தியின் காரணமாக தனது மனைவியின் தாலியை விற்று குங்கிலியம் வாங்கித் தூபமிட்டு பூசை செய்தமை
  - தீவிர பக்தி உடையவர்களை இறைவன் ஆட்கொண்டு அவர்களுக்கு அருள்புரிவார் என்பதை குங்கிலிய கலய நாயனார் கதை விளக்குகின்றது.
  - நாமும் இறைவன் மீது மெய்யன்பு கொண்டால் இறையருள் பெறலாம்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- கும்பாபிசேக இறுவட்டை நிழற்படம், டிமைன் கடதாசி, பேனா

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:**
- குங்கிலிய கலய நாயனார் வரலாற்றினை அறிவர்
- அவர்தம் வாழ்க்கை முறையை அறிந்து போற்றுவர்
- அவரின் சமயப் பணியை அறிவர்
- தம்மாலான சமயப் பணிகளை ஆற்ற முன்வருவர்

### செயற்பாட்டுப் படிவம்

**குழு 1, 3**
- குங்கிலிய கலய நாயனாரின் வாழ்க்கைக் குறிப்புக்களை எழுதுங்கள்
- குங்கிலிய கலய நாயனாரின் பணியை எழுதுங்கள்
- இவற்றினை அடிப்படையாகக் கொண்டு நாடகப்பிரதி ஒன்றினை ஆக்குங்கள்
- அதனை நடித்துக் காட்டுங்கள்

**குழு 2, 4**
- குங்கிலிய கலய நாயனாரின் வாழ்க்கைக் குறிப்புக்களை எழுதுங்கள்
- குங்கிலிய கலய நாயனாரின் பணியை எழுதுங்கள்
- இவற்றினை அடிப்படையாகக் கொண்டு வில்லுப்பாட்டு ஒன்றினை ஆக்குங்கள்
- அதனை இசைத்துக் காட்டுங்கள்

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)..........................................................................................................................

(2)..........................................................................................................................

(3)..........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

குங்கிலிய கலய நாயனாரின் வாழ்க்கைக் குறிப்புக்களை வாசிக்கச் செய்து அவரது சமயத்தினூடான பணிகளை இனங்காணச் செய்தல் அவர்களுடன் இணைந்து சமயத் தொண்டுகளில் ஈடுபட்டு அவற்றுக்கு வழிகாட்டுதல்

**தேர்ச்சி 4.0 :** சமய வழிபாட்டுடன் முறைகளை விதிப்படி பேணிப் போற்றுவர்

**தேர்ச்சி மட்டம் 4.1 :** ஆலய உற்சவக் கிரியைகளையறிந்து, அவற்றின் உண்மைத் தத்துவங்களை விளக்குவர்.

**செயற்பாடு :** ''குடமுழுக்குக் கிரியையின் மூலம் நடாத்தப்படும் தத்துவங்களை அறிந்து கொள்ளுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- கும்பாபிஷேகம் என்பதன் பொருளைக் கூறுவர்.
- குடமுழுக்கின் வகைகளை எழுதிக் காட்டுவர்.
- குடமுழுக்கில் இடம்பெறும் கிரியைகளையும் அவற்றிற்கான தத்துவங்களையும் அறிந்து கூறுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- மாணவர்கள் தாம் தரிசித்த கும்பாபிஷேகம் பற்றிக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கும்பாபிஷேகக் கிரியைகள் பற்றி ஆதாரங்கள் மூலம் எடுத்துக் கூற இடமளியுங்கள்.
- கும்பாபிஷேகம் பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடுங்கள்.

**படி II:**
- மாணவர்களை வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி III:**
- குழுத் தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளைக் குழுக்களுக்கு வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள்.
- கீழ்வரும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

  கும்பாபிசேகம்:

  ஆவர்த்தனம், அநாவர்த்தனம், புணராவர்த்தனம்,அந்தரிதம் ஆகிய நான்கு வகையில் மேற்கொள்ளப்படும்.

  (1) ஆவர்த்தனம்: புதிதாக ஆலயத்தை அமைத்து மூலமூர்த்தியை கும்பத்தில் ஆவாகனம் செய்து மூலஸ்தானத்தில் அம்மூர்த்தியை எழுந்தருளச் செய்து அபிஷேகம் செய்தல்.

  (2) அநாவர்த்தனம்: இயற்கை அனர்த்தங்களால் ஆலயம் அழிவுறும்போது ஆலயத்தைக் கட்டி விக்கிரகங்களைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்தல்.

  (3) புணராவர்த்தனம்: ஆலயங்களில் பழுது ஏற்படும்போது சுவாமியை பாலயம்

செய்து, ஆலயத்தைப் புதுப்பித்து மீண்டும் சுவாமியை பிரஷ்டை செய்வதாகும். இதுவே பெரும்பாலும் ஆலயங் களில் நடைபெறும்.

(4) அந்தரிதம்: ஆலயத்தில் திருட்டு அல்லது துர்நிகழ்வுகள் ஏற்படும் இடத்து உடனடியாக அத் துர்நிகழ்வை நீக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் அபிசேகம். இதற்கு நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டியதில்லை.

- நிலம் , தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய அனைத்தை யும் ஓரிடத்தில் நிறுத்துவதே கும்பாபிஷேகமாகும்.

- கும்பத்தின் குறியீடு:

| | | |
|---|---|---|
| கும்பம் | - | உடம்பு |
| சீலை | - | தோல் |
| நூல் | - | நாடி |
| குடம் | - | ததை |
| தண்ணீர் | - | இரத்தம் |

- அவற்றிற்கு இடப்படும் இரத்தினங்கள் எலும்பு.

| | | |
|---|---|---|
| தேங்காய் | - | தலை |
| மாவிலை | - | தலைமயிர் |
| தர்ப்பை | - | குடுமி |
| மந்திரம் | - | உயிர் |

- கும்பாபிஷேகத்தின்போது பூர்வாங்கக் கிரியைகள் இடம்பெற்று மகா கும்பத்தை கோயில் கலசத்தின்மேல் அபிசேகம் செய்வது கும்பாபிஷேகம் ஆகும்.

- குமராபிஷேகம் காண்பது கோடி புண்ணியம்.

- பன்னிரு வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் பெரும் சாந்தி ஆகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:** • கும்பாபிசேக இறுவட்டைு, நிழற்படம், டிமைன் கடதாசி, பேனா

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி** V: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.

- கும்பாபிஷேகம் என்பதன் பொருள் விளக்கத்தினை அறிவர்.
- கும்பாபிஷேகத்தின் மறு பெயர்களைக் கூறுவர்.
- கும்பாபிஷேகத்தின் வகைகளைக் கூறுவர்.
- கும்பத்தின் தத்துவ விளக்கத்தினை எழுதிக் காட்டுவர்.
- கும்பாபிஷேகம் கிரியை காலத்தில் ஆலய வழிபாட்டினை மேற்கொள்வர்.

## செயற்பாட்டுப் படிவம்

**குழு 1, 3**

(1) கும்பாபிஷேகம் என்பதன் பொருள் விளக்கம் யாது?
(2) கும்பாபிஷேகத்தின் மறுபெயர்கள் மூன்று தருக.
(3) கும்பாபிஷேகத்தின் வகைகளையும் அதன் விளக்கங்களையும் தருக.
(4) கும்பத்தின் தத்துவத்தினை மனிதனுடன் தொடர்புபடுத்துக.

**குழு 2, 4**

(1) கும்பாபிஷேக கிரியையைத் தரிசித்து அங்கு மேற்கொள்ளப்பட்ட கிரியைகளையும், நீர் பெற்ற அனுபவங்களையும் அடிப்படையாக வைத்துக் கட்டுரை எழுதுக.

### ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................
(2) ..........................................................................................................................
(3) ..........................................................................................................................

### பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1) உங்கள் சூழலில் உள்ள ஆலயத்தில் நடைபெறும் கும்பாபிசேகத்திற்குப் பிள்ளைகளை அழைத்துச் சென்று அக்கிரியையில் நிங்களும் பங்கு பற்றுங்கள்

**தேர்ச்சி 5.0 :** சமயப் பெரியார்களைப் பற்றி அறிந்து, அவர்களை தம் வழிகாட்டி களாகக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5.1 :** நாயன்மாரின் வரலாற்றினை அறிந்து கூறுவர். அவர்களின் பக்தி, வைராக்கியம், சமூக நோக்கு முதலியவற்றைக் கடைப்பிடிக்கும் தூண்டுதலை வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு :** ''நாயன்மாரின் சமூக, சமய, நோக்கிலான பணிகளை அறிந்து போற்றுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- நாயன்மார் நால்வர் பற்றிய சமய, சமூகப் பணிகளை அறிந்து போற்றுவர்.
- இறையருள் பெற்றவர்களுக்கு எத்தகைய துன்பம் வரினும் அவை இலகுவில் நீங்கிவிடும் என்பதனை உணர்ந்து செயற்படுவர்.
- நாயன்மார் நால்வரின் சமய, சமூகப் பணிகளை வேறுபடுத்திக் குறிப்பிடுவர்.
- தம்மாலான சமய, சமூகப் பணிகளைச் செய்ய முன்வருவர்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி I:**
- எம்மால் பாடசாலைக்கும், வீட்டிற்கும் ஆற்றக்கூடிய பணிகள் எவை? என்பது பற்றிய வினவுதலை எழுப்பி, அதற்கு மாணவர் விடை கூற சந்தர்ப்பம் அளியுங்கள்.
- மாணவரின் விடைகளோடு பின்வரும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
    - சமய, சமூக வளர்ச்சிக்காக நாயன்மார்கள் பல பணிகளை ஆற்றியுள்ளனர்.
    - இப்பணிகளை அவர்கள் ஆற்ற இறையருள் துணை செய்துள்ளது.
    - சைவசமயத்தின் உறுதிப்பாட்டினை நிலைநிறுத்தியவர்கள் நாயன்மார்கள்.

**படி II:**
- மாணவர்களை நான்கு குழுக்களாக்குங்கள்.
- குழுத்தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தரஉள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி III:**
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்குக் குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- ஒவ்வொரு குழுவும் கருத்துக்களை வெளிப்படுத்திய பின்னர், பின்வரும் அடிப்படை யில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.

**திருஞானசம்பந்தர்:**

* **இறையருள் பெற்று அதனடிப்படையில் ஆற்றிய சமயப்பணிகள்:**
- பாண்டிய மன்னனின் வெப்புநோயை நீக்கி சைவத்தைத் தழுவ வழிவகுத்தமை.
- சமணர்களோடு அனல்வாதம், புனல்வாதம் என்பன புரிந்து சைவசமய உண்மைகள் மேலானவை என நிறுவியமை.

- தேவாரங்களைப் பண்ணோடு பாடியமை.
- யாத்திரை செய்தமை.
- பதிகங்கள் பாடியமை.

*** சமூகப்பணிகள்:**

- பனியால் வாடிய மக்களின் குளிர்ச்சுரம் நீக்கியமை.
- பசிப்பிணியால் வருந்திய மக்களுக்கு பசிப்பிணி நீக்கியமை.
- ஆண் பனைகளைப் பெண் பனைகளாக மாற்றியமை.
- சாதியடிப்படையில் உயர்வு தாழ்வு பாராட்டாமை.

**திருநாவுக்கரசர்:**

*** இறையருள் பெற்று ஆற்றிய சமயப்பணிகள்:**

- சமணப்பள்ளியாக மாற்றப் பெற்ற சிவாலயத்தை மீண்டும் மாற்றிப் பொலிவுறச் செய்தமை.
- பூட்டப்பட்டிருந்த ஆலயக் கதவினைத் திறந்து அடியவர்கள் வழிபட வழிவகுத்தமை.
- பதிகங்கள் பாடியமை.

*** சமூகப்பணிகள்:**

- உழவாரப்பணி மூலம் சரியைத் தொண்டின் சிறப்பினை வெளிப்படுத்தியமை.
- சைவசமயமே மெய்ச் சமயம் என நிறுவி பல்லவ மன்னனை சைவசமயத்தைத் தழுவ வைத்தமை.

**சுந்தரமூர்த்தி நாயனார்:**

*** இறையருள் பெற்று ஆற்றிய சமயப்பணிகள்:**

- திருத்தொண்டர் தொகையைப் பாடியமை.
- பதிகங்கள் பாடியமை.

*** சமூகப்பணிகள்:**

- முதலை விழுங்கிய குழந்தையை மீட்டுக் கொடுத்தமை.

**மாணிக்கவாசகர்:**

*** இறையருள் பெற்று ஆற்றிய சமயப்பணிகள்:**

- பிறசமயத்தவர்களை வாதில் வென்று அவர்களைச் சைவசமயத்தவர்களாக மாற்றியமை.
- திருவாசகம் பாடியமை.
- எளிமையான நாட்டார் வழக்காற்றுக் கூறுகளைக் கொண்டு திருவாசகம் பாடியமை.

| | | |
|---|---|---|
| கண்ணப்பநாயனார் | : | சமூகத்தில் கண் தானம் செய்யும் முறைக்கு முன்னோடி. |
| அப்பூதியடிகள் | : | தண்ணீர்ப்பந்தல் அமைக்கும் திருப்பணியை முதல் முதல் நடைமுறைப்படுத்தியவர். |
| அகத்தியார் | : | அணு பற்றிய விடயங்களை முன்வைத்தவர். |
| மங்கையற்கரசி, குலச்சிறை நாயனார் | : | மதமாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மதங்களைப் போற்றிப் பேணுதல் |
| ஐயடிகள் காடவர்கோன் | : | எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேணும் என்று தொண்டு செய்தவர். 11ம் திருமுறையில் முதன்மை பெறுகிறார். |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 5.1.1 இலுள்ள செயற்பாட்டுப்பத்திரம்.
- டிமை கடதாசி, நிறப்பேனாக்கள்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி** V: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- நாயன்மார்கள் ஆற்றிய சமயப்பணிகளை அறிந்து போற்றுவர்.
- இறையருள் பெற்றவர்கள் எந்தவேளையிலும் மனந்தளரார் என்பதை உணர்வர்.
- தம்மாலான பணிகளைச் செய்ய முன்வருவர்.

## பின்னிணைப்பு 5.1.1:

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

குலுக்கள் முறை மூலம் ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு நாயன்மாரைத் தெரிவு செய்யுங்கள். அவர்கள் குறித்து பின்வரும் அடிப்படையில் தகவல்களைத் திரட்டி முன்வையுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| (i) | சமயப் பணிகள் | (1) | திருஞானசம்பந்தர் |
| (ii) | சமூகப்பணிகள் | (2) | அப்பர் |
| (iii) | அற்புதங்கள் | (3) | சுந்தரர் |
| | | (4) | மாணிக்கவாசகர் |

| | | |
|---|---|---|
| கண்ணப்பநாயனார் | : | சமூகத்தில் கண் தானம் செய்யும் முறைக்கு முன்னோடி. |
| அப்பூதியடிகள் | : | தண்ணீர்ப்பந்தல் அமைக்கும் திருப்பணியை முதல் முதல் நடைமுறைப்படுத்தியவர். |
| அகத்தியார் | : | அணு பற்றிய விடயங்களை முன்வைத்தவர். |
| மங்கையற்கரசி, குலச்சிறை நாயனார் | : | மதமாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மதங்களைப் பேணுதல். |
| ஐயடிகள் காடவர்கோன் | : | எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேணும் என்று தொண்டு செய்தவர். 11ம் திருமுறையில் முதன்மை பெறுகிறார். |

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)..........................................................................................................................

(2)..........................................................................................................................

(3)..........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1)உங்கள் சூழலில் நடைபெறும் சமூக, சமயப் பணிகளில் பிள்ளைகளைப் பங்கு பற்ற செய்வதுடன் நீங்களும் கலந்து முன்மாதிரியாகச் செயற்படுத்துங்கள்

**தேர்ச்சி 5.0 :** சமயப் பெரியார்களைப் பற்றி அறிந்து, அவர்களை தம் வழிகாட்டிகளாகக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5.2 :** சந்தான குரவர் வரலாறுகளை அறிந்து கூறுவர்.

**செயற்பாடு :** ''சந்தான குரவர்களையும் அவர்கள் ஆற்றிய பணிகளையும் அறிந்து போற்றுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- சந்தான குரவர்களை அறிவர்.
- சந்தான குரவர்களின் பணிகளை அறிந்து அவற்றுக்கு மதிப்பளிப்பர்.
- சந்தான குரவர்களின் குருபூசைத்தினங்களை பாடசாலையில் கொண்டாட முன்வருவர்.

### பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி I:**
- சந்தான குரவர்களின் படங்களைத் தேடிப் பெற்றுக் காட்சிப்படுத்துங்கள்.
- படங்களை அடிப்படையாகக் கொண்டு சந்தாரன குரவர்கள் பற்றி மாணவர்கள் அறிந்துள்ள விடயங்களைக் கூற இடமளியுங்கள்.
- கீழ்க் காணப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்று நிகழ்த்துங்கள்.
  - சைவசமய தத்துவ வளர்ச்சியில் சந்தான குரவர்கள் முக்கியத்துவம் பெறுவர்.
  - சந்தான குரவர்களை இரண்டு பிரிவினராக வகைப்படுத்துவர்.

**சந்தான குரவர்**

| **அகச்சந்தானகுரவர்** | **புறச்சந்தானகுரவர்** |
|---|---|
| திருநந்திதேவர் | மெய்கண்டதேவர் |
| சனற்குமாரர் | அருணந்தி சிவாசாரியார் |
| சத்தியஞானதரிசினி | மறைஞான சம்பந்தர் |
| பரஞ்சோதி முனிவர் | உமாபதி சிவாசாரியார் |

**படி II:**
- மாணவர்களை நான்கு குழுக்களாக்குங்கள்.
- குழுத்தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தரஉள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி III:**
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- ஒவ்வொரு குழுவும் கருத்துக்களை வெளிப்படுத்திய பின்னர், பின்வரும் அடிப்படையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.
  - சந்தானம் என்றால் பரம்பரை அல்லது தலைமுறை என்பது.
  - சமயக் குரவர்களின் திருமுறை பலவற்றிலும் காணப்பட்ட தத்துவக் கருத்துக்களைத் தொகுத்துத் தந்தவர்கள் புறச்சந்தான குரவர்கள் ஆவர்.

**மெய்கண்டதேவர்:**

* ஊர் - திருப்பெண்ணாடகம்
* வேறு பெயர் - சுவேதனைப் பெருமாள், திருவெண்காடர்
* குரு - பரஞ்சோதி முனிவர்
* சீடர்கள் - அருணந்தி சிவாச்சாரியார், மனவாசம் கடந்தார்
* அருளிய நூல் - சிவஞானபோதம்
* முக்தி பெற்ற தினம் - ஐப்பசிச் சுவாதி
* சைவசித்தாந்த சாத்திர சிந்தனைகளை ஒழுங்குபடுத்தி எழுதிய முதல்வர்.
* பரஞ்சோதி முனிவரால் மெய்கண்டார் எனும் திருப்பெயர் சூட்டப்பட்டது.

**அருணந்தி சிவாச்சாரியார்:**

* ஊர் - திருத்துறையூர்
* வேறு பெயர் - சகலாகம பண்டிதர்
* குரு - மெய்கண்ட தேவர்
* சீடர் - மறைஞானசம்பந்தர்
* அருளிய நூல்கள் - சிவஞானசித்தியார், இருபாஇருப.்.து
* முக்தி பெற்ற தினம் - புரட்டாதிப் பூரம்

**மறைஞானசம்பந்தர்:**

* ஊர் - திருப்பெண்ணாகடம்
* வேறு பெயர் - பரசிவானந்தம்
* குரு - அருணந்தி சிவாசாரியார்
* சீடர் - உமாபதி சிவாசாரியார்
* அருளிய நூல் - சதமணித்திரட்டு
* முக்தி பெற்ற தினம் - ஆவணி உத்தரம்

**உமாபதி சிவாசாரியார்:**

* ஊர் - கொற்றவன்குடி
* வேறு பெயர்கள் - கொற்றவன்குடி முதலியார், கொற்றவன் குடியடிகள்
* குரு - மறைஞான சம்பந்தர்
* சீடர்கள் - அருணந்தி சிவாசாரியார், மனவாசகம் கடந்தார்
* அருளிய நூல்கள்:
    (1) சித்தாந்த நூல்கள்
        (i) சிவப்பிரகாசம்
        (ii) திருவருட்பயன்
        (iii) வினாவெண்பா
        (iv) கொடிக்கவி
        (v) போற்றிப் ப.்.றொடை
        (vi) நெஞ்சுவிடுதூது
        (vii) உண்மைநெறி விளக்கம்
        (viii) சங்கற்ப நிராகரணம்
    (2) ஏனைய நூல்கள்
        (i) கோயிற்புராணம்
        (ii) பொட்கராகம விருத்தி உரை
        (iii) சேக்கிழார் புராணம்
        (iv) திருமுறைகண்ட புராணம்
        (v) திருப்பதிகக்கோவை
        (vi) திருநாமக் கலிவெண்பா
        (vii) திருத்தொண்டபுராணசாரம்
* முக்தி பெற்ற தினம் - சித்திரை அத்தம்
* அற்புதங்கள்: (1) சிதம்பரத்தில் ஏறாதிருந்த கொடியைக் கொடிக்கவி பாடி, ஏறவைத்தமை.
    (2) பெற்றான் சாம்பானுக்கு முத்தியளித்தமை.
    (3) முள்ளிச்செடிக்கு முத்தியளித்தமை.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 5.2.1 இலுள்ள மாதிரிச் செயற்பாட்டுப்பத்திரம்.
- சந்தான குரவர்களின் படங்கள்
- எழுது கடதாசி, நிறப்பேனாக்கள்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.

- சந்தான குரவர்களின் வாழ்க்கை வரலாற்றினை அறிந்து போற்றுவர்.
- சந்தான குரவர்களின் பணிகளை அறிந்து அவற்றுக்கு மதிப்பளிப்பர்.
- சந்தான குரவர்களின் குருபூசைத் தினங்களைக் கொண்டாட முன்வருவர்.

## பின்னிணைப்பு 5.2.1:

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு 1:**

(1) மெய்கண்ட தேவரின் வாழ்க்கைக் குறிப்புகளையும், அவர் ஆற்றிய பணிகளையும் அறிக்கைப்படுத்துங்கள்.

(2) அவற்றை வகுப்பறையில் முன்வையுங்கள்.

**குழு 2:**

(1) அருணந்தி சிவாச்சாரியாரின் வாழ்க்கைக் குறிப்புக்களையும், அவர் ஆற்றிய பணிகளையும் அறிக்கைப்படுத்துங்கள்.

(2) அவற்றை வகுப்பறையில் முன்வையுங்கள்.

**குழு 3:**

(1) மறைஞான சம்பந்தரின் வாழ்க்கைக் குறிப்புக்களையும், அவர் ஆற்றிய பணிகளை யும் அறிக்கைப்படுத்துங்கள்.

(2) அவற்றை வகுப்பறையில் முன்வையுங்கள்.

**குழு 4:**

(1) உமாபதி சிவாச்சாரியாரின் வாழ்க்கைக் குறிப்புக்களையும், அவர் ஆற்றிய பணிகளையும் அறிக்கைப்படுத்துங்கள்.

(2)அவற்றை வகுப்பறையில் முன்வையுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)..........................................................................................................................

(2)..........................................................................................................................

(3)..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1)சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டுவரும் பெரியார்களின் வரலாறுகளை பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள். பிள்ளைகளை சமய சமூகப் பணிகளில் ஈடுபடச் செய்யுங்கள்.

**தேர்ச்சி 5.0 :** சமயப் பெரியார்களைப் பற்றி அறிந்து, அவர்களை தம் வழிகாட்டி களாகக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5.3 :** சித்தர்கள், ஞானியர்கள் பற்றி அறிந்து கூறுவர்.

**செயற்பாடு :** ''அருணகிரிநாதரைப் பற்றி அறிந்து போற்றுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- அருணகிரிநாதரின் வரலாற்றினை அறிந்து போற்றுவர்.
- அருணகிரிநாதரின் அற்புத வாழ்வையும் இறை அனுபவப்பேற்றை யும் உணர்ந்து அவரது பாடல்களைப் படிக்க விரும்புவர்.
- அருணகிரிநாதரின் பாடல்களின் சிறப்பினை ஏனையோருக்கும் வெளிப்படுத்துவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- திருப்புகழிலிருந்து யாதாயினும் ஒரு பாடலினைப் பாடி அல்லது இறுவட்டி லிருந்து ஒலிக்கவிட்டு அது பற்றி மாணவரிடம் வினவுங்கள்.
- பின்வரும் தகவல்களின் அடிப்படையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற் கொள்ளுங்கள்.
  - பிற்காலத் தோத்திரப் பாடல்களில் திருப்புகழும் ஒன்று.
  - பஞ்ச தோத்திரங்கள் ஓதியதன் பின் இது பாடப்படுகின்றது.
  - சந்தப் பாக்களால் அமைந்தது திருப்புகழாகும்.
  - வாக்கிற்கு அருணகிரி எனப் போற்றப்பட்டவர்.
  - முருக பக்தராவர்.

**படி II:**
- மாணவர்களை மூன்று குழுக்களாக்குங்கள்.
- குழுத்தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தரஉள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி III:**
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- ஒவ்வொரு குழுவும் கருத்துக்களை வெளிப்படுத்திய பின்னர், பின்வரும் அடிப்படை யில் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள்.
  - கி.பி. 15 அளவில் திருவண்ணாமலையில் வாழ்ந்தவர்.
  - இயற்பெயர், பெற்றோர் விபரம் பற்றிய குறிப்புகள் கிடைக்கப் பெறவில்லை.
  - பிரபுதேவரால் மன்னன் காலத்தில் வாழ்ந்தவர்.
  - தமிழ், சமஸ்கிருத மொழிப் புலமையுடையவர்.
  - இளமைக்காலத்தில் தீய ஒழுக்கத்தில் ஈடுபட்டதால் பெருநோய்க்கு ஆளானார்.
  - ஊரவரின் ஏளனத்துக்கு ஆளான அருணகிரியார் திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தின் வடகோபுர வாசலிலிருந்து குதித்துத் தன் உயிரை மாய்த்துக் கொள்ள முற்பட்டார். முருகப்பெருமான் அவர் முன்தோன்றி தடுத்தாட் கொண்டார்.
    ''முத்தைத்தரு பத்தித்திருநகை......'' என அடியெடுத்துக் கொடுத்துத் திருப் புகழைப் பாட அருள் பாலித்தார்.

- அதன் பின்னர் அவர் நோய் நீங்கப் பெற்றது.
- இந்தச் சம்பவம், அருணகிரிநாதரை பிரபுடதேவ நாய மன்னனின் அரசவை புலவராக்கியது.

* **அற்புதங்கள்:**
(1) "அதனசேடனாராட..." எனும் திருப்புகழைப் பாடி அரசவைக்கு முருகப்பெருமானை எழுந்தருளச் செய்தமை.
(2) கந்தரந்தாதி பாடியபொழுது வாதிட்ட வில்லிப்புத்துஸரரை 'திதத்த......' எனும் பாடலைப் பாடி, வாதில் வென்றார்.
(3) கூடுவிட்டு கூடுபாயும் வல்லமை கொண்ட அருணகிரிநாதர் மன்னனின் கண் சுகம் பெற கிளி உருவில் பாரிஜாத மலர் பெறச் சென்றபோது அவரின் நிஜ உடல் எரிக்கப்படு கின்றது. பின்னர் அருணகிரியார் கிளி உருவிலேயே தன் வாழ்க்கையைக் கழிக்கின்றார்.
(4) கிளி உருவிலேயே திருத்தணிகை முருகன் கையில் வாசம் செய்து கந்தரனுபூதி, கந்தரலங்காரம் பாடி முத்தி பெற்றார்.
(5) முத்தியடைந்த தினம் - ஆனி மாத மூல நட்சத்திரம்.

* **அருளிய நூல்கள்:**
- திருப்புகழ்
- கந்தரந்தாதி
- கந்தரனுபூதி
- சுந்தரலங்காரம்
- திருவகுப்பு
- மயில் விருத்தம்
- வேல் விருத்தம்
- திருவெழுகூற்றிருக்கை

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 5.3.1 இலுள்ள மாதிரிச் செயற்பாட்டுப்பத்திரம்.
- டிமை கடதாசி, எழுதுகருவிகள்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி** V: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- அருணகிரிநாதர் வரலாற்றைக் கூறுவர்
- அருணகிரிநாதருக்காக முருகப் பெருமான் செய்த அற்புதங்களைக் கூறுவர்
- அருணகிரிநாதர் அருளிய நூல்களைப் பட்டியற்படுத்துவர்.

## பின்னிணைப்பு 5.3.1:

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு 1:**
அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாற்றை ஒரு கதையாக எழுதி, அதனை தலைப்பிடக் கூறுக.

**குழு 2:**
அருணகிரிநாதர் செய்த அற்புதங்களையும், அவருக்காக முருகப்பெருமான் செய்த அற்புதங்களையும் தேடிப்பெற்று காட்சிப்படுத்துங்கள்.

**குழு 3:**
அருணகிரிநாதர் அருளிய நூல்களையும், அவை தோன்றிய சந்தர்ப்பங்களையும் பட்டியற்படுத்திக் காட்சிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 :** சமயப் பெரியார்களைப் பற்றி அறிந்து, அவர்களை தம் வழிகாட்டி களாகக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 5.4 :** ஈழத்துச் சமயப் பெரியார்களையும் அவர்களின் பணிகளையும் அறிந்து கூறுவர்.

**செயற்பாடு :** "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரது வாழ்க்கையும், அவரது சமய, சமூக. கல்விப் பணிகளையும் அறிந்து போற்றுவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது வாழ்க்கைப் பின்னணியை அறிவர்.
- நாவலர் அவர்கள் ஆற்றிய சமய. சமூக, கல்விப் பணிகளை அறிந்து போற்றுவர்.
- நாவலர் அவர்கள் எழுதி வெளியிட்ட நூல்களைத் தேடி அறிவதில் ஈடுபடுவர்.
- நாவலர் வழியில் தம்மாலான சமய, சமூக, கல்விப் பணிகள் ஆற்ற முன்வருவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- ஈழத்தில் வாழ்ந்து சமய, சமூக, கல்விப் பணி புரிந்த பெரியார்களின் பெயர்களைக் கூற இடமளியுங்கள்.
- தேவைப்படின் சில பெரியார்களின் படங்களைக் காட்டுங்கள்.
- கீழ்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்துங்கள்.
  - சமயத்தை வளர்ப்பதற்குத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் சமயப் பெரியார்களாவர்.
  - இலங்கைத் திருநாட்டில் சமயத்தை வளர்ப்பதற்கும், சமூகத்தை மேம்பாடடை யச் செய்வதற்குமாக பல பெரியோர்கள் வாழ்ந்துள்ளனர்.

    (உ+ம்) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்<br>
    சேர். பொன். இராமநாதன்<br>
    சுவாமி விபுலாநந்தர்<br>
    சு. சிவபாதசுந்தரனார்<br>
    இந்துபோட் சு. இராசரத்தினம்<br>
    பசுபதிச் செட்டியார்
- மேற்குறிப்பிட்டோரில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் முதன்மையாக வைத்துப் போற்றப்படுகின்றனர்.

**படி II:**
- மாணவர்களை ஆறு குழுக்களாக்குங்கள்.
- குழுத்தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தரஉள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி III:**
- குழுத் தேடல், செயற்பாட்டுக்கான ஆலோசனைகளைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து மற்றைய குழுவினரும் பொருத்தமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம்

வழங்குங்கள்.


**படி IV:** • ஒவ்வொரு குழுவினரும் உரையாற்றிய பின்னர் பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பொன்றினை மேற்கொள்ளுங்கள்.

- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்
  1. சமய பெரியாராகவும்
  2. சீர்திருத்தவாதியாகவும் விளங்கினார்.

- நாவலர் அவர்களின் வாழ்க்கைப் பற்றிய குறிப்புக்கள்:

| | | |
|---|---|---|
| பிறந்த இடம் | - | நல்லூர் |
| பிறப்பு | - | 1822.12.18 |
| தாய் | - | சிவகாமிப்பிள்ளை |
| தந்தை | - | கந்தப்பிள்ளை |

- இவர் ஆற்றிய பணிகள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.




- **சமயப்பணி:**
  1. பிரசங்கம்
  2. புராண படனம்
  3. கண்டனங்கள்: (அ) சுதேசிய கண்டனங்கள்
     (ஆ) கிறிஸ்தவ கண்டனங்கள்

- **கல்விப்பணி:**
  1. யாழ்ப்பாண சைவப்பிரகாச வித்தியாசாலை - 1849
  2. தமிழ்நாடு சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை - 1864
  3. கோப்பாய் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை - 1872

- **பதிப்பாசிரியர் பணி:**
  1. 1849 இல் நல்லூரில் வித்தியானுபாலன யந்திரசாலை எனும் அச்சகத்தை நிறுவினார்.
  2. தமிழ்நாட்டிலுள்ள வித்தியானுபாலன யந்திரசாலை, முத்தமிழ் விளக்க அச்சுக்கூடம், வாணி நிவேதன அச்சுக்கூடம் என்பவற்றில் இருந்து நூல் களைப் பதிப்பித்து வெளியிட்டார்.
  3. பதிப்பித்த நூல்கள் - சூடாமணி நிகண்டு, திருக்குறள், பரிமேலழகர் உரை, சேதுபுராணம், 11 ஆம் திருமுறை.

- **உரையாசிரியர் பணி:**
  1. ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, நன்னெறி, வாக்குண்டாம், சைவசமயநெறி, கோயிற்புராணம் ஆகியவற்றுக்கு உரை எழுதியுள்ளார்.
  2. வசனநடையில் எழுதியவை: பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், கந்தபுராண வசனம்.

- **சமூகப்பணி:**
  1. கஞ்சித் தொட்டி அமைத்து தர்மம் செய்தல்.
  2. ஆலயங்களில் சின்னமேளம் நடைபெறுவதைத் தடை செய்தல்.
  3. பலியிடுதலைத் தடுத்தல்.

4. மட்டக்களப்பு, யாழ்ப்பாண வேளாண்மை சமூகம்.

- **நூலாக்கப்பணிகள்:**
  1. பாலபாடம் 1 ஆம், 2 ஆம், 4 ஆம் புத்தகம்
  2. சைவவினா விடை 1 ஆம், 2 ஆம் புத்தகம்
  3. இலக்கணச் சுருக்கம்
  4. இலங்கைப் பூமிசாஸ்திரம்
  5. சிவாலய தரிசன விதி
  6. சிதம்பர மான்மியம்

- ஈழத்து நூற்பதிப்பு முன்னோடியாக நாவலர் திகழ்ந்துள்ளார்.
- தமிழ் நூல்கள் எவ்வாறு பதிப்பு பெறவேண்டும் எனும் கொள்கையை உருவாக்கியவர் நாவலரே.
- திருவாவடு துறை ஆதீனம் அவருக்கு நாவலர் எனும் பட்டத்தை வழங்கியது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 5.4.1 இலுள்ள மாதிரிச் செயற்பாட்டுப்பத்திரம்.
- பெரியார்களின் படங்கள்
- டிமை கடதாசி, நிறப்பேனாக்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பணிகளை அறிந்து குறிப்பிடுவர்.
- நாவலர் அவர்களின் சமய, சமூக, கல்விப் பணிகளை அறிந்து போற்றுவர்.
- நாவலர் அவர்களின் நூல்களைத் தேடியறிவதில் ஈடுபடுவர்.
- தம் வாழ்வில் தம்மாலான சமய, சமூக, கல்விப்பணிகளை ஆற்றுவர்.

**பின்னிணைப்பு 5.4.1:**

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

- செயற்பாட்டுப் படிவத்தில் தங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தலைப்பில் தகவல்களைத் திரட்டி, 4 நிமிட பேச்சு ஒன்றினைத் தயார் செய்யுங்கள்.

பேச்சு தலைப்பு

**குழு 1:** - நாவலரின் சமூகப்பணி
**குழு 2:** - நாவலரின் சமயப்பணி
**குழு 3:** - நாவலரின் உரையாசிரியர் பணி
**குழு 4:** - நாவலரின் கல்விப்பணி
**குழு 5:** - நாவலரின் நூலாக்கப்பணி
**குழு 6:** - நாவலரின் பதிப்பாக்கப்பணி

**தேர்ச்சி 6.0** : சைவசித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி வெளிப்படுத்துவர்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : மும்மல இயல்புகளை நூல்கள் வாயிலாக அறிந்து போற்றுவர்.

**செயற்பாடு** : "மும்மலங்கள் பற்றி அறிவோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :
- சைவசித்தாந்தம் கூறும் மும்மலங்களைக் கூறுவர்.
- ஆணவத்திற்கு வழங்கப்படும் மறுபெயர்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் எழுதிக் காட்டுவர்.
- ஆகந்துக மலங்களை அறிந்து கூறுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- சைவசித்தாந்தம் கூறும் மும்மலங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மும்மலங்களின் இயல்பு பற்றி கலந்துரையாடல்.
- மும்மலங்களிற்கும் ஆன்மாக்களிற்கும் இடையிலான தொடர்புகளை வினாவி அறியுங்கள்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களைப் பகிர்ந்து அளியுங்கள்.
- செயற்பாட்டில் ஒவ்வொரு குழுவினரும் ஈடுபடுவதை அவதானித்து வழிப் படுத்துதல்.

**படி III:**
- ஒவ்வொரு குழுவினரும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கை களாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் கருத்துக்களை முன்வைக்கும்போது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  - சைவசித்தாந்தம் கூறும் மும்மலங்களும் பதி, பசு போல் அநாதியானவை.
  - பசு மும்மலங்களுடன் சார்ந்தே காணப்படும்.
  - மும்மலங்கள் பாசம், அசித்து, அசத்து எனவும் அழைக்கப்படுகின்றது.
  - ஆணவம் சகசமலம், மூலமலம், இருண்மலம் எனப் பல பெயர்களில் அழைக்கப் படுகின்றது. (சித்தாந்த நூல்களை ஆதாரம் காட்டவும்.)
  - கன்மம் என்பது செயல் அல்லது வினை எனப் பொருள்படும்.
  - இருபா இருப.்.து கூறும் கன்மத்தின் குணங்கள் ஆறு. அவை: இருத்தல், கிடத்தல், விடுதல், இயற்றல், பரநிந்தை, மேவல்.
  - மாயையிலிருந்து தோன்றும் 36 தத்துவங்கள் பற்றிய விளக்கம்: சிவத்தத்துவம் - 5, வித்தியாதத்துவம் - 7, ஆன்ம தத்துவம் - 24.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்.
- டிமை கடதாசி, பேனா
- சைவசித்தாந்த நூல்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி** V: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.

- சைவசித்தாந்தம் கூறும் மும்மலங்களைக் கூறுவர்.
- பதி, பசு போன்று மும்மலங்களும் அனாதி என்பதனை நூல்கள் வாயிலாகத் தெரிந்து கொள்வர்.
- சித்தாந்த நூல்கள் வாயிலாக மும்மல இயல்புகளை அறிந்து விளக்குவர்.

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

(1) சைவசித்தாந்தம் கூறும் மும்மலங்களும் எவை?
(2) ஆணவத்திற்கு வழங்கப்படும் மறுபெயர்கள் 3 தருக.
(3) கன்மத்தின் முப்பெரும் பிரிவுகளும் எவை?
(4) எல்லாக் காரியங்களும் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் காரணமாய் நிற்பது எது?
(5) ஆன்மாவிற்கும் ஆணவத்திற்கும் இடையிலான தொடர்பு எவ்வாறு விளக்கப்படுகின்றது?
(6) ஆணவம் ஏன் இருளிலும் கொடியது என விளக்கப்படுகின்றது?
(7) இப்பிறவியில் நாம் அனுபவிப்பதற்கெனப் பெறப்பட்ட கன்மம் எது?
(8) ஆகந்துக மலங்கள் எவை?
(9) வித்தியா தத்துவங்கள் எவை?
(10) ஆன்மாவை முதலில் விட்டு நீங்கும் மலம் எது?

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................
(2) ..........................................................................................................................
(3) ..........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

ஆன்மாக்கள் மேற்கொள்ளும் செயல்களுக்கெல்லாம் மும்மலங்களே அடிப்படை என்பதை அறிந்து, நல்வினையை ஆற்றவேண்டும் என்பதனை பிள்ளைகளுக்கு உணர்த்துங்கள்

**தேர்ச்சி 6.0** : சைவசித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி வெளிப்படுத்துவர்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : ஒதுக்கப்பட்டுள்ள திருவருட்பயன் பாடப்பரப்பு மூலம் சித்தாந்த கருத்துக்களை அறிந்து கொள்வர்.

**செயற்பாடு** : "திருவருட்பயன் பாடல்களினூடாக அருளுருவாகிய குருவிடம் உண்மைப்பொருளை அறிந்து கொள்ளுவோம்."

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :
- இருவினையொப்பு என்பதன் பொருளைக் கூறுவர்.
- மலபரிபாகம் என்பதன் பொருளை விளக்கிக் கூறுவர்.
- ஆன்மா தான் செய்யும் செயலை சிவன் செய்யும் செயலாகக் கருதிச் செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- சீடன் குருவருள் இன்றி உண்மைப்பொருளை அறிந்து கொள்ள முடியாமையைக் கலந்துரையாடல்.
- இருவினையொப்பு, மலபரிபாகம், சத்தினிபாதம் பற்றி உதாரணம் மூலம் விளக்கி, ஞான நிலையினைப் பெற மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் பற்றி அறிந்து எழுதுவர்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- உரிய பொருட்களைப் பகிர்ந்து அளியுங்கள்.
- செயற்பாட்டில் ஒவ்வொரு குழுவினரும் ஈடுபடுவதை அவதானித்து வழிப்படுத்துதல்.

**படி III:**
- ஒவ்வொரு குழுவினரும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் கருத்துக்களை முன்வைக்கும்போது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்துங்கள்.
  - இருவினையொப்பு என்பதன் பொருள் நல்வினையையும் தீவினையையும் சமமாகக் கருதிச் செயற்படுதல்.
  - ஆணவத்தின் முனைப்பால் ஆன்மாக்கள் வினைகளை இயற்றுகின்றன. வினைகள் நீங்க சிவன் ஆன்மாக்களுக்குப் பிறவித் துன்பத்தை கொடுத்துள்ளார்.
  - இருவினையொப்பு இன்ப, துன்ப நுகர்ச்சியிலிருந்து விடுபடும்போது ஏற்படல்.
  - மலங்கள் வலிகெடுதல் மலபரிபாகம் எனப்படும்.
  - இருள் குறையக்குறைய ஒளியேறி வருவது போல் மலம் வலி கெட ஆன்மா சிவத்தோடு சேருகின்றது.
  - இந்நிலையில் ஆன்மா தன்செயலை சிவன் செயலாகக் கருதிச் செயற்பட்டு ஞானத்தால் பெரு மகிழ்ச்சியடைகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்.
- டிமை கடதாசி, நிறப்பேனா
- திருவருட்பயன் புத்தகம்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி** V: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.

- இருவினையொப்பு என்பதன் பொருள் விளக்கத்தைக் கூறுவர்.
- மலபரிபாகம் என்பதன் விளக்கத்தைக் கூறுவர்.
- ஆன்மாக்கள் வினைகளை செய்வதற்கு அடிப்படையான மலத்தினைக் கூறுவர்.
- சத்தினிபாதம் என்பதன் பொருளை எழுதுவர்.

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

(1) இருவினையொப்பு நெறியில் நின்று ஒழுகிய நாயனார் யார்?
(2) ஆன்மாக்கள் மலத்தினின்று நீங்கி ஈடேற்றத் துணைபுரிவன எவை?
(3) சத்தினிபாதம் என்பதன் பொருள் யாது?
(4) 'அரன் பணியில் நிற்க அகலும் குற்றம்' எனக் கூறியவர் யார்?
(5) பற்றின்றி இருப்பவரிடம் யாது கைகூடும்?

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................
(2) ..........................................................................................................................
(3) ..........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

நன்மையையும் தீமையையும் சமமாகக் கருதும் செயற்பாடுகளில் ஈடுபட்டு பற்றற்ற செயல்களில் ஈடுபட பிள்ளைகளை வழிப்படுத்துங்கள்

**தேர்ச்சி 6.0** : சைவசித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி வெளிப்படுத்துவர்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : ஒதுக்கப்பட்டுள்ள திருவருட்பயன் பாடப்பரப்பு மூலம் சித்தாந்த கருத்துக்களை அறிந்து கொள்வர்.

**செயற்பாடு** : ''திருவைந்தெழுத்தை ஓதி, முத்தியடைந்தோரின் தன்மையை அறிவோம்.''

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :
- திருவைந்தெழுத்தின் தன்மையை அறிவர்.
- அணைந்தோர் தன்மையை அறிந்து திருவைந்தெழுத்தை ஓதி தாமும் அவர் வழி வாழ முற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- மாணவர்களிடம் நகராதி, சிகராதி பஞ்சாட்சரங்களைக் கூறும்படி கேட்டல்.
- ஐந்தெழுத்தின் சிறப்பை யசுர் வேதத்தினோடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடல்.
- ஜீவன்முத்தர் என்போர் பற்றி மாணவர் கொண்டுள்ள கருத்தைக் கேட்டறிதல்.
- ஜீவன்முத்தர் பற்றிக் கலந்துரையாடல்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- உரிய பொருட்களைப் பகிர்ந்து அளியுங்கள்.
- செயற்பாட்டில் ஒவ்வொரு குழுவினரும் ஈடுபடுவதை அவதானித்து வழிப் படுத்துதல்.

**படி III:**
- ஒவ்வொரு குழுவினரும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கை களாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் கருத்துக்களை முன்வைக்கும்போது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்கயில் கவனம் செலுத்துங்கள்.
  - சைவாகமங்களும் வேத உபாகமங்களும் ஐந்தெழுத்தின் பெருமையை உணர்த்தும் நூல்கள்.
  - மலபரிபாகம் என்பது திரோதான சக்தி அருட்சக்தியாக மாறி ஆன்மாவில் பதிந்து, சிவனை அடைய வழிகாட்டும்.
  - நகராதி, சிகராதி பஞ்சாட்சங்களை உச்சரிப்பதன் மூலம், உலகியல், ஆன்மீகப் பயன்களைப் பெறுவர்.
  - முத்தி நிலையைப் பெற்றோர் என்றும் சிவனையே தரிசிப்பர்.
  - முத்தியடைந்தோர் பதியைப் போல் ஐந்தொழில்களையும், பசுவைப் போல் வினையையும் செய்யமாட்டார்.
  - சீவன் முக்தர்களுக்கு விருப்பு வெறுப்பில்லை.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்.
- டிமை கடதாசி, பேனா
- திருவருட்பயன் புத்தகம்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.

- திருவைந்தெழுத்தின் சிறப்பினைக் கூறுவர்.
- சீவன்முத்தரின் நிலையைக் கூறுவர்.
- அணைந்தோர் தன்மையைக் கூறுவர்.

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

(1) திருவைந்தெழுத்தின் சிறப்பினையும், அணைந்தோர் தன்மையினையும் கூறி, உரையாடல் ஒன்றினைத் தயாரித்து, வகுப்பறையில் எடுத்துக் கூறுக.

(2) திருவைந்தெழுத்தின் சிறப்பினைக் கூறும் பாடலடிகளைத் தொகுத்துக் காட்சிப்படுத்துக.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................

(2) ..........................................................................................................................

(3) ..........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1) திருவைந்தெழுத்தை நாளாந்த வழிபாட்டில் தாமும் ஓதி, பிள்ளைகளையும் ஓத வழிப் படுத்துங்கள்.

(2) முத்தியடைந்தோரின் வாழ்வியல் கருத்துக்களைப் பிள்ளைகளுக்குக் கூறி வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0** : சைவசித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி வெளிப்படுத்துவர்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : ஒதுக்கப்பட்டுள்ள திருவருட்பயன் பாடப்பரப்பு மூலம் சித்தாந்த கருத்துக்களை அறிந்து கொள்வர்.

**செயற்பாடு** : ''ஆன்ம சுத்தியினால் அடையும் பேரானந்தம் பற்றி அறிவோம்.''

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :
- ஆன்ம சுத்தி என்பதன் பொருளை அறிவர்.
- ஆன்மா திருவருளைத் தானாகக் காணமாட்டாது எனக் கூறுவர்.
- முத்திபெற்றவர் பிறப்பிற்குள் அகப்படார் என்பதனைக் கூறுவர்.
- தாடலை என்பதன் பொருள் விளக்கம் கூறுவர்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- ஆன்மாவிலிருந்து ஆணவமலம் நீங்கப் பெறுதல், ஆன்ம சுத்தி என்பதைக் கலந்துரையாடுங்கள்.
- முக்தி பெற்றவர் இனிப்பிறவார் என்பதனை எடுத்துக் கூறுவர்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- உரிய பொருட்களைப் பகிர்ந்து அளியுங்கள்.
- செயற்பாட்டில் ஒவ்வொரு குழுவினரும் ஈடுபடுவதை அவதானித்து வழிப் படுத்துங்கள்.

**படி III:**
- ஒவ்வொரு குழுவினரும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கை களாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் கருத்துக்களை முன்வைக்கும்போது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்துங்கள்.
  - ஆன்மா ஆணவமலம் நீங்கப் பெற்றால் வன்செயலின்றி திருவருள் வசப்படும். இது ஆன்ம சுத்தி எனப்படும்.
  - ஆன்மா தானாக அருளையடையாது.
  - திருவருளை அடைந்தோர்க்குக் கடவுள் வெளிப்படுவது எளிதாகும்.
  - அருளுக்குப் பின்னே ஆன்மா நிற்றல் அவசியமாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்.
- டிமை கடதாசி, பேனா
- திருவருட்பயன் புத்தகம்

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- ஆன்ம சுத்தி என்பதன் பொருளை அறிந்து கூறுவர்.
- மலபரிபாகம் அடைந்தோர் எதனைப் பெற்றுக் கொள்வோர் எனக் கூறுவர்.
- சைவசித்தாந்தம் கூறும் முத்திநிலையினைக் கூறுவர்.

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

(1) ஆன்ம சுத்தி என்பதன் பொருள் விளக்கம் யாது?
(2) சைவசித்தாந்தம் கூறும் முத்தி நிலை யாது?
(3) தாடலை என்பதன் பொருள் விளக்கத்தை எழுதுங்கள்

### ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ......................................................................................................................
(2) ......................................................................................................................
(3) ......................................................................................................................

### பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

பிறவி எடுத்த ஆன்மாக்களின் இலட்சியம் முத்தி அடைதல் என்ற எண்ணக்கருவை பிள்ளைகளுக்கு கூறி அவர்களை இறை பணியில் ஈடுபடச் செய்யுங்கள்.

**தேர்ச்சி 6.0 :** சைவசித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி வெளிப்படுத்துவர்.

**தேர்ச்சி மட்டம் 6.3 :** ஆன்மீக விடுதலைக்கான மார்க்கங்கள் பற்றிய அறிவைப் பெற்று செயற்பாட்டில் ஈடுபடுவர்.

**செயற்பாடு :** ‘‘சைவநாற்பாதங்களைக் கடைப்பிடிப்போம்.’’

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- ஆன்மீக விடுதலைக்கான வழிகளைக் கூறுவர்.
- நாற்பாதங்களையும், மார்க்கங்களையும் எழுதிக் காட்டுவர்.
- நாயன்மார்களின் வாழ்வியலுடன் நாற்பாதங்களைத் தொடர்பு படுத்துவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- சைவநாற்பாதங்களை மாணவர்களிடம் வினாவி பாடத்தை ஆரம்பியுங்கள்.
- ஆன்மீக விடுதலைக்குரிய வழிகள் பலவாயினும் இலகுவான வழி நாற்பாதங்களே என்பதைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- நாற்பாதங்களையும் அவற்றிற்கான பிரிவுகளையும் கலந்துரையாடுங்கள்.
- தாயுமானவர் நாற்பாதங்களை எவற்றிற்கு ஒப்பிடுகின்றார் என்பதை எழுத வழிகாட்டுங்கள்

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- உரிய பொருட்களைப் பகிர்ந்து அளியுங்கள்.
- செயற்பாட்டில் ஒவ்வொரு குழுவினரும் ஈடுபடுவதை அவதானித்து வழிப் படுத்துங்கள்.

**படி III:**
- ஒவ்வொரு குழுவினரும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் கருத்துக்களை முன்வைக்கும்போது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்துங்கள்.
  - சைவநாற்பாதங்கள் இறைவனையடைய மிக இலகுவான வழி.
  - நாற்பாதங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும்.
  - நாற்பாதங்களில் உபாயநிலை 16, உண்மைநிலை 16 வகைப்படும்.
  - சரியை என்பது பொது உடம்பினால் இறைவனுக்கு செய்யும் தொண்டுகள்.
  - கிரியை என்பது உடலாலும் உள்ளத்தாலும் இறைவனுக்குச் செய்யப்படும் செயற்பாடுகள்.
  - யோகம் என்பது அட்டாங்க யோக வழியில் நின்று இறைவனை வழிபடுதல்.
  - ஞானம் என்பது அறிவு வழியில் இறைவனை தரிசித்தலாகும்.
  - நாயன்மார்கள் நால்வரும் இந்நெறியில் நின்று இறைவனை அடைந்தவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சரியை | - தாசமார்க்கம் | - அப்பர் | - அரும்பு |
| கிரியை | - சற்புத்திரமார்க்கம் | - சம்பந்தர் | - மலர் |
| யோகம் | - சகமார்க்கம் | - சுந்தரர் | - காய் |
| ஞானம் | - சன்மார்க்கம் | - மாணிக்கவாசகர் | - கனி |

- நாற்பாதங்கள் மூலம் நால்வகை முத்திகளைப் பெறலாம்.

| | | | |
|---|---|---|---|
| சரியை | - | சாலோகம் | பதமுத்தி - உபாயநிலை |
| கிரியை | - | சாமீபம் | |
| யோகம் | - | சாரூபம் | |
| ஞானம் | - | சாயுச்சியம் | |

- தேவாரப் பாடல்களினூடாக சைவநாற்பாதங்களைத் தெரிந்து குறிப்பிடவும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்.
- டிமை கடதாசி, நிறப்பேனா
- நாற்பாதங்கள் அடங்கிய அட்டவணைகள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- இறைவனை அடைவதற்கான இலகு வழி நாற்பாதங்கள் எனக் குறிப்பிடுவர்.
- நாற்பாதங்களை சமய குரவர்களுடன் ஒப்பிடுவர்.
- ஆலயத்தில் மேற்கொள்ளும் சரியைத் தொண்டுகள் நான்கினைக் குறிப்பிடுவர்.
- நாற்பாதங்களினால் கிடைக்கும் முத்திகளை அட்டவணைப்படுத்துவர்.

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

(1) சைவசித்தாந்தம் கூறும் ஆன்மீக விடுதலைக்குரிய வழிகள் மூன்றினைத் தருக.
(2) சரியை நெறியில் நின்று உடலால் இறைவனை வணங்கிய நாயனார் யார்?
(3) நாற்பாதங்களுள் கிரியையை மலருக்கு ஒப்பிட்டவர் யார்?
(4) சாமீப முத்தியடைபவர் சிறப்பாக எம்மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.
(5) பதமுத்திகள் எவை?
(6) பரமுத்தி எனப்படுவது எது?
(7) அட்டாங்க யோகங்கள் எவை?
(8) யோகநெறியில் நின்று சிவனையடைந்த சமய குரவர் யார்?
(9) நாற்பாதங்களில் கனிக்கு ஒப்பிடப்படும் பாதம் எது?
(10) இறைவனது உருவத்தைப் பெற்று வழிபடும் முத்தி எது?

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..............................................................................................................
(2) ..............................................................................................................
(3) ..............................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

ஆலயச் செயற்பாடுகளிலும் சமூக செயற்பாடுகளிலும் பிள்ளைகளை பங்கேற்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0** : சைவசித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி வெளிப்படுத்துவர்.

**தேர்ச்சி மட்டம் 6.3** : ஆன்மீக விடுதலைக்கான மார்க்கங்கள் பற்றிய அறிவைப் பெற்று செயற்பாட்டில் ஈடுபடுவர்.

**செயற்பாடு** : "சிவசின்னங்கள், தீட்சை பற்றியறிந்து, அவற்றை எமது வாழ்வியலில் கடைப்பிடிப்போம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :
- சிவசின்னங்களைக் குறிப்பிடுவர்.
- தீட்சை என்பதன் பொருளை எழுதிக் காட்டுவர்.
- தீட்சையின் முப்பெரும் பிரிவுகளைக் கூறுவர்.
- தீட்சை பெற்றவன் சிவசின்னங்களைத் தரிக்கும் முறையைக் கூறுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- தீட்சையளிக்கும் நிகழ்ச்சி பற்றி மாணவர்கள் தாம் கண்டறிந்தவற்றைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- தீட்சை பெற்றுக் கொள்வதன் அவசியத்தைப் பற்றிக் கலந்துரையாடல்.
- சிவசின்னங்கள் பற்றி மாணவர்களிடம் வினாவி, பாடல்களின் ஊடாக சிவசின்னங் களின் பெருமையைக் கலந்துரையாடல்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- உரிய பொருட்களைப் பகிர்ந்து அளியுங்கள்.
- செயற்பாட்டில் ஒவ்வொரு குழுவினரும் ஈடுபடுவதை அவதானித்து வழிப் படுத்துங்கள்.

**படி III:**
- ஒவ்வொரு குழுவினரும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கை களாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் கருத்துக்களை முன்வைக்கும்போது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்துங்கள்.
  - சிவசின்னங்கள், தீட்சை என்பன இந்துக்களின் வாழ்வியலில் பெறும் முக்கியத் துவத்தை உணர்வர்.
  - சைவசமயத்தவர் ஒவ்வொருவரும் தீட்சை பெற்று சைவசமயியாதல் அவசிய மாகும்.
  - தீட்சை என்பது மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது என்பதாகும்.
  - தீட்சையின் வகைகளாவன சமயதீட்சை, விசேடதீட்சை, நிர்வாணதீட்சை என்பன வாகும்.
  - சமய தீட்சையின் வகைகள் ஏழாகும். நயனம், ஸ்பரிசம், மானசம், லாசனம், வாசகம், ஔத்திரி.
  - தீட்சையளிக்கும் சிவாச்சாரியாரின் தகுதிகள்:
    * ஆசாரிய அபிஷேகம் பெற்றிருத்தல்.
    * சித்தாந்த சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்தவராக இருத்தல்.
    * அவற்றை நல்ல முறையில் எடுத்துரைக்கும் திறனுடையவராக இருத்தல்.
    * திருமுறைகள், பிரபந்தங்களைக் கற்று, நடைமுறையில் செயற்படுத்துபவராக இருத்தல்.

* ஒழுக்க சீலராகவும் சமயத்தின் உன்னத தேவைகளை நன்கு அறிந்தவராக வும் இருத்தல்.
* இறை வழிபாட்டில் நம்பிக்கை உடையவராக இருத்தல்.

- சிவசின்னங்களாவன:- விபூதி, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து.
- சிவசின்னங்களைத் தரிசிப்பவரே சைவசமயி.
- விபூதியைத் தரிக்கும் முறைகளாக உத்தூளனம், திரிபுண்டாரம் என்பன.
- தீட்சை பெற்றோர் உத்தூளனமாக விபூதியை அணிய வேண்டும்.
- திருவைந்தெழுத்து நகராதி பஞ்சாட்சரம் - நமசிவாய
  சிகராதி பஞ்சாட்சரம் - சிவாயநம
  என இரு வகைப்படும்.
- உலகியல் வாழ்விற்காக உச்சரிக்கப்படுவது நமசிவாய என்னும் இறைவியல் வாழ்விற்காக உச்சரிக்கப்படுவது சிவாயநம என்றும் கூறப்படுகிறது.
- உருத்திராக்கம் என்பது உருத்திரனின் கண் (உருத்திரன் + அங்கம்) எனப்படும்.
- இதில் 32 மணிகள் காணப்படும். அவை 28 ஆகமங்களையும், நால்வேதங் களையும் குறிப்பாக உணர்த்துகின்றன.
- சைவசமயிகள் இவ்வுலக, மறுவுலக இன்பத்தைப் பெற தீட்சையும், சிவசின்னங் களும் முக்கிய சாதனைகளாக அமைகின்றன.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்.
- டிமை கடதாசி, பேனா
- இறுவட்டுக்கள், விபூதி, உருத்திராக்கமாலை, அட்டவணைகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி** V: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- சிவசின்னங்கள் எவையெனக் குறிப்பிடுவர்.
- தீட்சை என்பதன் பொருளை எழுதிக் காட்டுவர்.
- உருத்திராக்கத்தின் மறுபெயர்கள் மூன்றினைக் குறிப்பிடுவர்.
- தீட்சை பெற்றவர் விபூதியளிக்கும் முறையினை குறிப்பிடுவர்.

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

(1) திருநீற்றுப் பதிகம் பாடியவர் யார்?
(2) 'நீறில்லா நெற்றி பாழ்' என்ற முதுமொழிக்குரியவர் யார்?
(3) உருத்திராக்கத்தை அணிவதால் பெறும் பேறு பற்றி சம்பந்தர் யாது கூறுகின்றார்?
(4) குரு சிவமாக நின்று அருட்பார்வையால் சீடனின் ஆணவமலத்தைப் போக்கும் தீட்சை எது?
(5) ஓமத்தோடு தொடர்புடைய தீட்சை எது?
(6) தீட்சையளிக்கும் குரு கொண்டிருக்க வேண்டிய தகுதிப்பாடுகள் 5 தருக.
(7) உலகியல் இன்பத்தை வேண்டி சைவசமயி உச்சரிக்கும் மந்திரம் எது?
(8) தேவாச முதலிகளுக்கு வழங்கிய தீட்சைகள் பற்றிக் குறிப்பிடுக.
(9) சிவ சின்னங்களைக் குறிப்பிடுங்கள்

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ....................................................................................................................
(2) ....................................................................................................................
(3) ....................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

சிவசின்னங்களைத் தாமும் தரித்த பிள்ளைகளையும் தரிக்கச் செய்யுங்கள். பிள்ளைகளை தீட்சை பெறச் செய்து சைவசமயி என்பதை உறுதிப்படுத்தி சைவசமயியாக ஈடுபட வழிகாட்டுக.

**தேர்ச்சி 7.0** : நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவர்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் சடங்குகளின் சிறப்பை தெரிந்து கூறுவர்.

**செயற்பாடு** : ''நாட்டார் தெய்வங்களுள் கண்ணகி, நாகதம்பிரான் தெய்வங்கள் பற்றியறிவோம்.''

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்** :
- நாட்டார் தெய்வ வழிபாட்டில் இடம்பெறும் ஆண் தெய்வங்களை யும், பெண் தெய்வங்களையும் வகைப்படுத்துவர்.
- ஈழத்தின் கண்ணகியம்மன் வழிபாட்டின் வரலாற்றையும் புகழ்மிக்க ஆலயங்களையும் எழுதுவர்.
- நாகதம்பிரான் வழிபாட்டின் தோற்றத்தினையும் முக்கியமான ஆலயங்களையும் கூறுவர்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி I:**
- மாணவர்கள் தம் ஊரிலுள்ள கிராமியத் தெய்வங்கள் பற்றிக் கூற இடமளித்தல்.
- கிராமிய வழிபாட்டுச் சடங்குகளையும், அவற்றை மேற்கொள்ளுபவரையும் பற்றியும் கலந்துரையாடல்.
- ஆண் தெய்வங்களில் நாகதம்பிரான் வழிபாட்டையும் பெண்தெய்வங்களில் கண்ணகியம்மன் சடங்கு பற்றியும் அறிந்து கூறுவர்.
  கலந்துரையாடலின் போது பின்வரும் பாடங்கள் குறித்து கவனம் செலுத்துங்கள்.
  - ஈழத்து நாட்டார் தெய்வ வழிபாடு கண்ணகியம்மன் வழிபாடு மிகையாகக் காணப்படும்.
  - இந்துக்களின் வழிபாட்டுடன் இணைந்து காணப்படும் வழிபாடாக நாகதம்பிரான் வழிபாடு காணப்படுகின்றது.

**படி II:**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக் களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்காக தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்துங்கள்.
  - கண்ணகி வரலாற்றின் பெருமை கூறும் காவியமாக இளங்கோவடிகள்களின் சிலப்பதிகாரம் அமைகின்றது.
  - ஈழத்தில் முதலாம் கஜபாகு மன்னன் கண்ணகி வழிபாட்டை அறிமுகப் படுத்தினான்.
  - இலங்கையில் வடபாகத்தில் இருந்து யானை மீது ஊர்வலமாக கண்டி வரை பரவப்பட்ட வழிபாடாகக் காணப்படுகின்றது.

- கண்ணகி வழிபாடு சிறப்பாகக் காணப்படும் இடங்களாக வற்றாப்பளை கண்ணகியம்மன், காரைதீவு கண்ணகியம்மன், மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகியம்மன், மந்திகை கண்ணகி அம்மன், களுவாஞ்சிக்குடி கண்ணகியம்மன், மண்டுவில் கண்ணகியம்மன் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- கண்ணகி வழிபாட்டில் கண்ணகி வழக்குரை காவியம், சிலம்பு கூறல், கோவலன் கதை, குளிர்த்திப் பாடல், மழைக்காவியம் என்பன முதன்மை இடம்பெறுகின்றன.
- நாக வழிபாட்டின் தொன்மையை ஆதாரங்கள் மூலம் எடுத்துக் காட்டுதல். (உ+ம்:- மகாவம்சம், இராமாயணம்)
- இலங்கையின் பூர்விகக் குடிகளான நாகர்களின் வழிபாட்டுக் கடவுள்.
- **நாக வழிபாட்டிற்கான காரணம்:-** ஒவ்வொரு மனிதனிடமும் ஐம்புலன்கள் காணப்படுகின்றன. இவை எம்மைப் பாவச் செயல்களிற்கே தூண்டுகின்றன. பாவங்களைச் செய்யாது ஐம்புலன்கள் ஆகிய பகைவர்களிடமிருந்து நீங்கி, பாதுகாப்பு பெறும் பொருட்டு இறைவனை இடைவிடாது வழிபடவே இவ்வழிபாடு தோன்றியது.
- திருக்கோயில்களில் ஐந்து தலை நாகமே வழிபாட்டிற்குரியதாக விளங்குகின்றது.
- நாகதம்பிரான் வழிபாடு சிறப்பாக இடம்பெறும் இடங்களாவன:- நாகர்கோயில், புளியம்பொக்கனை, பருத்தித்துறை, புதூர், நவாலி, செம்பியன்பற்று, அனலைதீவு, புளியந்தீவு, பொன்னாலை, கட்டைப்பறிச்சான் போன்ற இடங்கள்.
- பொங்கல், திருக்குளிர்த்தி, பால் பழம் வைத்தல் என்பன முக்கிய வழிபாடாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் பத்திரங்கள்
- மாதிரிப்படங்கள்
- இறுவட்டுக்கள்
- கடதாசி, பேனா

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- நாட்டார் தெய்வ வழிபாட்டின் பொருளை விளக்கிக் கூறுவர்.
- இடம்பெறும் ஆண் தெய்வங்களையும், பெண் தெய்வங்களையும் வகைப்படுத்துவர்.
- குழுவாக இணைந்து தத்தம் பிரதேசங்களில் வழிபடப்படும் கண்ணகியம்மன், நாகதம்பிரான் ஆலயங்களையும், வழிபாட்டு முறைகளையும் இனங்காண்பர்.

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு 1, 3**

(1) கண்ணகி வழிபாடு பற்றிப் பின்வரும் விடயங்களைச் சேகரியுங்கள்.
- கண்ணகி வழிபாடு ஈழத்தில் தோன்றிய வரலாறு.
- இத்தெய்வத்திற்கு பூசையை மேற்கொள்ளுபவர்.
- கிராமிய வழிபாட்டில் இடம்பெறும் முக்கிய வழிபாட்டு அம்சங்கள்.
- கண்ணகி வழிபாடு நடைபெறும் பிரதான இடங்கள்.

**குழு 2, 4**

(1) நாகர்களின் முதன்மைத் தெய்வத்தைக் குறிப்பிடுக.
(2) நாகர் என்பதன் பொருள் விளக்கத்தை எழுதுவர்.
(3) உமது பிரதேசத்தில் காணப்படும் நாகர் கோயில்களை எழுதிக் காட்டுவர்.
(4) நாகத்தை இந்துக்கள் வழிபடுவதற்கான காரணத்தை எழுதுவர்.
(5) நாகர்கோயில்களில் இடம்பெறும் வழிபாட்டு முறைகளை எழுதுவர்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..................................................................................................................

(2) ..................................................................................................................

(3) ..................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

பிரதேசங்களில் காணப்படும் நாட்டார் தெய்வ கோயில்களை தரிசிப்பதும், அவற்றில் இடம் பெறும் வழிபாட்டு அம்சங்களையும் அவதானிக்கச் செய்தல்.

**தேர்ச்சி 7.0 :** நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவர்.

**தேர்ச்சி மட்டம் 7.2 :** கிராமிய வழிபாட்டின் அம்சங்களின் கலைச் சிறப்புக்களைத் தெரிந்து விளக்குவர்.

**செயற்பாடு :** "கிராமிய கலைவடிவங்களையும், வழிபாட்டு அம்சங்களையும் பற்றியறிவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- கிராமிய வழிபாட்டில் இடம்பெறும் பூசை முறைகளை அட்ட வணைப்படுத்துவர்.
- அவற்றுக்கான தத்துவ விளக்கங்களை எழுதிக் காட்டுவர்.
- கிராமிய வழிபாட்டில் இடம்பெறும் கலைவடிவங்களைக் கூறுவர்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி I:**
- மாணவர்கள் தரிசித்த நாட்டார் கடவுளர்க்கு மேற்கொள்ளப்பட்ட பூசை முறை களை கூற இடமளித்தல்.
- பூசை முறைகளின் தத்துவார்த்த விளக்கங்களைக் கலந்துரையாடல்.
- நாட்டார் வழிபாட்டில் இடம்பெற்ற கலையம்சங்களை சேகரிக்க வழிப்படுத்துதல்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தல்.
- ஒவ்வொரு குழுவுக்குமுரிய பொருட்களைப் பகிர்ந்தளித்தல்.
- கொடுக்கப்பட்ட படங்களின் துணையுடன் செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்துதல்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  - நாட்டார் தெய்வ வழிபாட்டில் கும்பம் வைத்தல், கதவு திறத்தல், மண்டபம் காவல் பண்ணுதல், கல்யாணச் சடங்கு, கும்பச் சடங்கு, பள்ளையச் சடங்கு, சுவாமி ஊர்வலம், மடைபரவல், பரிகலம் அழைத்தல், பொங்கல், குளிர்த்தி, தீ மிதிப்பு, நேர்த்தி, வேண்டுதல், வைரவச் சடங்கு, வழிவிடுதல் முதன்மையிடம் பெறுகின்றன. (இப்பூசை முறைகள் இடத்திற்கிடம் வேறுபட்டுக் காணப்படும்.)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்
- மாதிரிப்படங்கள்
- இறுவட்டுக்கள்
- கடதாசி, நிறப்பேனா

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- கிராமிய வழிபாட்டில் இடம்பெறும் பூசை முறைகளை அட்டவணைப்படுத்துவர்.
- கிராமிய கலை வடிவங்களை நேரில் தரிசித்து அவற்றிற்கு மதிப்பளிப்பர்.
- கூட்டாக இணைந்து நாட்டார் தெய்வ வழிபாட்டு முறைகளைச் சேகரிப்பர்.

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு 1, 3**

பின்வரும் தகவல்களைச் சேகரித்து, அறிக்கையைப் பூரணப்படுத்துங்கள்.

| சடங்கு முறை | வழிபாட்டு முறைகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | யாழ்ப்பாணம் | வன்னி | மட்டக்களப்பு | மலையகம் | திருகோணமலை |
| | | | | | |
| | | | | | |

பின்வரும் வழிபாட்டு முறைகள் தவிர்ந்த, உமது பிரதேசத்தில் காணப்படும் வேறு வழிபாட்டு முறைகளை, இவற்றுடன் சேர்த்து எழுதுங்கள்.

பரிகலம் அழைத்தல்.
மடை பரவல்.
கும்பச் சடங்கு.
பூப்பந்தல் ஆடுதல்.
விபூதி ஓதிக் கொடுத்தல்.
குளிர்த்தி பாடுதல்.
தீ மிதிப்பு.
வழக்குரை காதை படித்தல்.
பள்ளையைச் சடங்கு.
வைரவர் சடங்கு.
வழிவிடுதல்.
வளந்து வைத்தல்.
மடை பிரித்தல்.
தூளி பிடித்தல்.

**குழு 2, 4**

(1) நாட்டார் வழிபாட்டில் பாரம்பரியமாக மேற்கொள்ளப்படும் கலை வடிவங்கள் 3 தருக.
(2) காவடியின் வகைகள் 4 தருக.
(3) கரகாட்டம் அதிகளவில் ஆடப்படும் தெய்வம்.
(4) கரக குடத்தில் இடம்பெறும் பொருட்கள் 4 தருக.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..............................................................................................................................
(2) ..............................................................................................................................
(3) ..............................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

நாட்டுப்புற ஆலயங்களிற்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று, அங்கு இடம்பெறும் கலை வடிவங்களையும் அங்கு மேற்கொள்ளப்படும் சடங்கு முறைகளையும் அவதானிக்கச் செய்து, அதில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 8.0 :** ஈழத்துச் சைவ மரபுகளையும் வரலாற்று ஆதாரங்களையும் திரட்டி ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும், வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.

**தேர்ச்சி மட்டம் 8.1 :** ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் எடுத்துரைப்பர்.

**செயற்பாடு :** ''மகாவம்சம் முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ள சைவசமயம் பற்றிய கருத்துகைக்களை அறிவோம்.

**பாடவேளை :** 03

**கற்றற் பேறுகள் :**
- ஈழத்து சைவசமய தொன்மையை கூறுவர்.
- புராதனமாக ஈழத்தின் வாழ்ந்தவர் இந்துக்களே என்பதை ஆதாரங்கள் மூலம் எழுதிக் காட்டுவர்.
- ஈழத்துச் சைவசமய வளர்ச்சியை காலங்களின் அடிப்படையில் பகுத்துக் காட்டுவர்.
- ஈழத்து சைவசமய வளர்ச்சியின் தொன்மையை அறிந்து அவற்றைப் போற்றுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- ஈழத்துச் சைவசமய வளர்ச்சியின் தொன்மை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- சைவசமய வரலாற்றின் தொன்மையை அறிய உதவும் சான்றாதாரங்கள் பற்றி வினாக்களை வினவி அவை தொடர்பாக கலந்துரையாடுங்கள்
  - ஈழத்தை திருமூலர் சிவபூமி எனக் கூறியமை
  - மகாவம்சம் பற்றி மாணவர்கள் அறிந்த விடயங்களை கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

**படி II:**
- மாணவர்களைக் சிறு குழுக்களாக்குங்கள்.
- குழுத் தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்துங்கள்.
  - இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் நிலவிய சமயம் சைவசமயம் என்பது திருமூலர் கூற்றாகும்.
  - ஈழத்தில் சைவத்தின் தொன்மையை சைவ இலக்கியங்கள், பௌத்த இலக்கியங்கள், தொல்பொருள் சான்றுகள் பிறநாட்டார் குறிப்புக்கள் என்பவற்றிலும் காணலாம்.
  - பொலநறுவை, அனுராதபுரம், கந்தளாய் போன்ற இடங்களில் காணப்படும் சான்றுகள்.
  - மகாவம்சம், சூழவம்சம், தீபவம்சம் போன்ற பௌத்த நூல்களும் சைவம் பற்றிய கருத்துக்கள்.
  - இபன் பத்துத்த, மக்கன்சி போன்றோரின் சைவம் பற்றிய குறிப்புக்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 8.1.1 இலுள்ள செயற்பாட்டுப் பத்திரம்
- டிமை கடதாசி, பேனாக்கள்
- இலக்கியக் குறிப்புக்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- ஈழத்தை சிவபூமி எனக் கூறப்பட்டதன் கருத்துக்களைக் கூறுவர்
- ஈழத்துச் சைவசமயத்தின் தொன்மையை அறிய உதவும் சான்றாதாரங்களை விளக்குவர்
- சைவத்தின் தொன்மையை ஆராய்ந்த அறிஞர்கள் பற்றிக் குறிப்பிடுவர்
- ஈழத்துச் சைவசமயத்தின் தொன்மை பற்றி மகாவம்சம் கூறும் கருத்துக்களை ஆராய்ந்து விளக்குவர்.

## பின்னிணைப்பு 8.2.1:

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

குழு 1, 3

(1) ஈழத்துச் சைவசமயத்தின் தொன்மையை அறிய உதவும் சான்றாதாரங்களை பட்டியற்படுத்துங்கள்

(2)ஈழத்துச் சைவசமயத்தின் தொன்மை பற்றிய நாயன்மார் பாடல்களை எடுத்துக் காட்டுங்கள்

(3)ஈழத்துச் சைவசமயத்தின் தொன்மையை அறிய உதவும் பௌத்த இலக்கியங்களை பட்டியற்படுத்துங்கள்

குழு 2, 4

(1) ஈழத்துச் சைவசமயத்தின் தொன்மையை பௌத்த இலக்கியங்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களை தொகுத்துக் கூறுங்கள்

(2) ஈழத்துச் சைவசமயத்தின் தொன்மையை அறிய உதவும் மகாவம்சம் பற்றிய கருத்துக்களை எழுதுங்கள்

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)..........................................................................................................................

(2)..........................................................................................................................

(3)..........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

ஈழத்துச் சைவசமயத்தின் தொன்மையை அறிய உதவும் சான்றாதாரங்கள் தொடர்பாக கலந்துரையாடுங்கள் தொன்மை வாய்ந்த இடங்களுக்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று அது தொடர்பாக இனங்காட்டுங்கள், அவற்றை பற்றிய ஆக்கங்களை எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 8.0 :** ஈழத்துக் சைவ மரபுகளையும் வரலாற்று ஆதாரங்களையும் திரட்டி ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.

**தேர்ச்சி மட்டம் 8.2 :** ஈழத்துச் சைவ ஆலயங்கள் பற்றிய விவரங்களையும் பெறுவர். அவற்றுடன் வரலாற்று முக்கியத்துவத்தைத் தெரிந்து கூறுவர்.

**செயற்பாடு :** ''மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயம் பற்றி அறிந்து போற்றுவோம்.''

**பாடவேளை :** 01

**கற்றற் பேறுகள் :**
- மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் சிறப்பம் சங்களை அறிந்து போற்றுவர்.
- இவ்வாலயத்தின் தீர்த்தச் சிறப்பை அறிந்து பயன் பெறுவர்.
- இவ்வாலயம் தொடர்பான தகவல்களைத் திரட்டி, தொகுத்து, மற்றோருடன் பகிர்ந்து கொள்வர்.
- இவ்வாலயத்திற்கு தலயாத்திரை செல்ல முன்வருவர்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி I:**
- ஈழத்தில் காணப்படும் விநாயகர் ஆலயங்களைக் கூறும்படி மாணவர்களிடம் வினவுங்கள்.
- பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை நடத்துங்கள்.
  - ஈழத்தில் பல விநாயகர் ஆலயங்கள் காணப்படுகின்றன.
  - அவற்றுள் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயமும் ஒன்று.
  - இவ்வாலயத்தில் ஆடிஅமாவாசை மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

**படி II:**
- மாணவர்களைக் சிறு குழுக்களாக்குங்கள்.
- குழுத் தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  - இவ்வாலயம் மட்டக்களப்பில் அமிர்தகழி எனும் இடத்தில் அமைந்துள்ளது.
  - இவ்வாலயத்தின் மூலவர் சுயம்பு லிங்கமாக வீற்றிருப்பவர்.
  - இத்தலம் இராமபிரானால் தரிசிக்கப்பட்ட சிறப்புப் பெற்ற தலமாகும்.
  - இவ்வாலயத்தில் ஆடிஅமாவாசை மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.
  - இவ்வாலயத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து பிதிர்க்கடன் செலுத்துகின்றனர். இதன் மூலம் பிதிர்கள் ஆன்மீக ஈடேற்றத்தைப் பெறுவர் என மக்கள் நம்புகின்றனர்.
  - இவ்வாலயத்தின் சிறப்புக்களையும் வரலாறுகளையும் கூறும் நூல்களும் பிரபந்தங்களும் உள்ளன.
    - மாமாங்கேஸ்வரர் கீர்த்தனை
    - மாமாங்கேஸ்வரர் பதிகம்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 8.2.1 இலுள்ள செயற்பாட்டுப் பத்திரம்
- டிமை கடதாசி, பேனாக்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி** V: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- மாமாங்கேஸ்வரர் ஆலயம் பற்றிய வரலாற்றினைக் கூறுவர்
- அவ்வாலயத்தில் நடைபெறும் பிதிர்க்கடன் செலுத்தும் முறைகளைப் விளக்குவர்
- ஆலயத்தில் பாடப்பட்ட நூல்களை எழுதுவர்
- ஆலயத்தின் திருவிழா தொடர்பான விடங்களைப் பட்டியற்படுத்துவர்
- ஆலயத்தின் பெருமைகளை அறிந்து தலயாத்திரை மேற் கொள்வர்

**பின்னிணைப்பு 8.2.1:**

**மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்**

**குழு 1, 3**

(1) ஆலயம் தொடர்பான படம்.
(2) ஆலய அமைவிடம், விழாக்கள் கதைகள்.
(3) ஆலயத் தோற்றம் தொடர்பான புராணக் கதைகள்.

**குழு 2, 4**

(1) ஆலயத்தில் இடம்பெறும் மகோற்சவம்.
(2) சமுதாயத்தோடு இவ்வாலயம் கொண்டுள்ள தொடர்புகள்.
(3) இவ்வாலயம் மீது பாடப்பட்டுள்ள நூல்கள்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)..........................................................................................................................
(2)..........................................................................................................................
(3)..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

மாமாங்கேஸ்வரர் ஆலயத்திற்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று, அங்கு இடம்பெறும் திருவிழா மற்றும் ஏனைய நிகழ்வுகளை அவதானிக்கச் செய்து, அதில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 8.0** : ஈழத்துக் சைவ மரபுகளையும் வரலாற்று ஆதாரங்களையும் திரட்டி ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.

**தேர்ச்சி மட்டம் 8.2** : ஈழத்துச் சைவ ஆலயங்கள் பற்றிய விவரங்களையும் பெறுவர். அவற்றுடன் வரலாற்று முக்கியத்துவத்தை தெரிந்து கூறுவர்.

**செயற்பாடு** : ''திருக்கேதீச்சர ஆலயம் பற்றி அறிந்து போற்றுவோம்.''

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :
- திருக்கேதீச்சர ஆலயத்தின் சிறப்பம்சங்களை அறிந்து போற்றுவர்.
- இவ்வாலயத்தின் தீர்த்தச் சிறப்பை அறிந்து பயன் பெறுவர்.
- இவ்வாலயம் தொடர்பான தகவல்களைத் திரட்டி, தொகுத்து, மற்றோருடன் பகிர்ந்து கொள்வர்.
- இவ்வாலயத்திற்கு தலயாத்திரை செல்ல முன்வருவர்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- ஈழத்தில் காணப்படும் சிவாலயங்களைக் கூறும்படி மாணவர்களிடம் வினவுங்கள்.
- பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை நடத்துங்கள்.
  - ஈழத்தில் பல சிவாலயங்கள் காணப்படுகின்றன.
  - அவற்றுள் திருக்கேதீச்சர ஆலயமும் ஒன்று.
  - இவ்வாலயத்தில் சிவராத்திரி மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

**படி II:**
- மாணவர்களைக் சிறு குழுக்களாக்குங்கள்.
- குழுத் தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  - அமைவிடம் - மாதோட்டம் (மன்னார்)
  - முர்த்தி - திருக்கேதீஸ்வர நாதர், கௌரியம்பாள்
  - தீர்த்தம் - பாலாவி
  - ஈழத்தில் சோழர் ஆட்சியின் போதும் யாழ்ப்பாண இராச்சியத்தின் போதும் சிறப்புற்றுக் காணப்பட்டது
  - போர்த்துக்கீசர் காலத்தில் இவ்வாலயம் இடித்து அழிக்கப்பட்டது.
  - சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் பாடப்பட்ட தலமாகும்.
  - யாத்திரிகர்கள் தங்குதற்பொருட்டு பல மடங்கள் கட்டப்பட்டுள்ளன.
  - சிவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.
  - இவ்வாலயத்தின் சிறப்புக்களையும் வரலாறுகளையும் கூறும் நூல்களும் பிரபந்தங்களும் உள்ளன.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 8.2.1 இலுள்ள செயற்பாட்டுப் பத்திரம்
- டிமை கடதாசி, பேனாக்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- திருக்கேதீச்சர ஆலயம் பற்றிய வரலாற்றினைக் கூறுவர்
- அவ்வாலயத்தில் நடைபெறும் சிவராத்திரி விழா பற்றி விளக்குவர்
- ஆலயத்தில் பாடப்பட்ட நூல்களை எழுதுவர்
- ஆலயத்தின் திருவிழா தொடர்பான விடங்களைப் பட்டியற்படுத்துவர்
- ஆலயத்தின் பெருமைகளை அறிந்து தலயாத்திரை மேற் கொள்வர்

**பின்னிணைப்பு 8.2.1:**

**மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்**

**குழு 1, 3**

(1) ஆலயம் தொடர்பான படம்.
(2) ஆலய அமைவிடம், சிவராத்திரி பற்றிய விளக்கம்.
(3) ஆலயத் தோற்றம் தொடர்பான புராணக் கதைகள்.

**குழு 2, 4**

(1) ஆலயத்தில் இடம்பெறும் மகோற்சவம்.
(2) சமுதாயத்தோடு இவ்வாலயம் கொண்டுள்ள தொடர்புகள்.
(3) இவ்வாலயம் மீது பாடப்பட்டுள்ள நூல்கள்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)..........................................................................................................................
(2)..........................................................................................................................
(3)..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

திருக்கேதிச்சர ஆலயத்திற்கு பிள்ளைகளுடன் தலயாத்திரை சென்று, அங்கு இடம்பெறும் திருவிழா மற்றும் ஏனைய நிகழ்வுகளை அவதானிக்கச் செய்து, அதில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 8.0** : ஈழத்துக் சைவ மரபுகளையும் வரலாற்று ஆதாரங்களையும் திரட்டி, ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.

**தேர்ச்சி மட்டம் 8.2** : ஈழத்துச் சைவ ஆலயங்கள் பற்றிய விவரங்களையும் பெறுவர். அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தைத் தெரிந்து கூறுவர்.

**செயற்பாடு** : ''வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் சிறப்பினை அறிந்து வழிபடுவோம்.''

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :
- வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் அமைவிடம், தோற்றத்தினை அறிவர்.
- அவ்வாலயத்தில் இடம்பெறும் சடங்குமுறையினை அறிந்து போற்றுவர்.
- நாட்டார் தெய்வ வழிபாட்டுக்கு மதிப்பளிப்பர்.
- ஆலயத்திற்கு யாத்திரை செய்ய முன்வருவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் பற்றி தாம் அறிந்த விடயங்களை மாணவர்கள் கூற இடமளியுங்கள்.
- பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை நடத்துங்கள்.
  - வடமாகாணத்திலுள்ள புகழ்பெற்ற கண்ணகி அம்மன் ஆலயங்களுள் வற்றாப் பளை கண்ணகி அம்மன் ஆலயமும் ஒன்றாகும்.
  - இங்கு இடம்பெறும் சடங்கு முறையானது ஆகம முறை சாராததாகும்.

**படி II:**
- மாணவர்களைக் 4 குழுக்களாக்குங்கள்.
- குழுத் தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  - கஜபாகு மன்னனால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட கண்ணகியம்மன் வழிபாடு அனுராதபுரத்திலிருந்து இலங்கையின் வடபகுதிக்குப் பரவியது என்று ஐதீகமாக நம்பப்படுகின்றது.

  - வற்றாப்பளை எனும் பெயர் வரக்காரணம், கண்ணகி பத்தாவதாக தங்கிய இடமாதலால் இது பத்தாப்பளை என முன்னர் அழைக்கப்பட்டுக் காலப் போக்கில் இச்சொல் மருவி வற்றாப்பளை என ஆயிற்று என்று குறிப்பிடப்

படுகின்றது.

- இவ்வாலயம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடலை அண்மித்த வற்றாப்பளை எனுமிடத்தில் அமைந்துள்ளது.

- வன்னி மன்னர்களின் ஆதரவைப் பெற்றுக் காணப்பட்டது இவ்வாலயத்தின் சிறப்பாகும்.

- வைகாசிப் பூரணை தினத்தில் இடம்பெறும் பொங்கல் சடங்கு சிறப்பான தாகும்.

- பொங்கல் சடங்கு தவிர்ந்த ஏனைய சடங்குகள் அனைத்தும் ஆகம விதிமுறைக்கமைய பிரமணர்களால் நடாத்தி வைக்கப்படும். பொங்கல் சடங்கு மாத்திரம் பூசகரால் நடாத்தி வைக்கப்படும்.

- இவ்வாலயத்தின் மீது பாடப்பட்ட பாடல்கள் வருமாறு:
  (1)வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் வசந்தன் பாடல்.
  (2)மரைக்காவியம்
  (3)அம்மானை

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 8.2.1 இலுள்ள செயற்பாட்டுப் பத்திரம்
- டிமை கடதாசி, பேனாக்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- வற்றாப்பளை அம்மன் ஆலய வரலாற்றினைக் கூறுவர்
- அவ்வாலயத்தில் நடைபெறும் சடங்கு முறைகளைப் பட்டியற்படுத்துவர்
- ஆலயத்தில் பாடப்பட்ட நூல்களை எழுதுவர்

**பின்னிணைப்பு 8.2.1:**

**மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்**

**குழு 1, 3**

(1)ஆலயம் தொடர்பான படம்.
(2)ஆலய அமைவிடம், அது பற்றிய ஐதீக கதைகள்.
(3)ஆலயத் தோற்றம் தொடர்பான ஐதீகக் கதைகள்.

**குழு 2, 4**

(1)ஆலயத்தில் இடம்பெறும் சடங்குகள்.
(2)கிராமிய வழிபாட்டோடு இவ்வாலயம் கொண்டுள்ள தொடர்புகள்.
(3)இவ்வாலயம் மீது பாடப்பட்டுள்ள நூல்கள்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)..........................................................................................................................
(2)..........................................................................................................................
(3)..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

நாட்டுப்புற ஆலயங்களிற்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று, அங்கு இடம்பெறும் கலை வடிவங்களையும் அங்கு மேற்கொள்ளப்படும் சடங்கு முறைகளையும் அவதானிக்கச் செய்து, அதில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 8.0** : ஈழத்துக் சைவ மரபுகளையும் வரலாற்று ஆதாரங்களையும் திரட்டி, ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.

**தேர்ச்சி மட்டம் 8.2** : ஈழத்துச் சைவ ஆலயங்கள் பற்றிய விவரங்களையும் பெறுவர். அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தைத் தெரிந்து கூறுவர்.

**செயற்பாடு** : “மண்டூர் முருகன் ஆலயம் பற்றி அறிவோம்.”

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :
- மண்டூர் ஆலயம் பற்றிய தகவல்களை அறிந்து போற்றுவர்.
- இவ்வாலயத்தின் சிறப்பினை அறிந்து பக்தி கொள்வர்.
- தலயாத்திரை மேற்கொள்ள முன்வருவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- மண்டூர் முருகன் ஆலயம் பற்றி ஏற்கனவே அறிந்த விடயங்களைக் கூற மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை நடத்துங்கள்.
  - ஈழத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களுள் மண்டூர் முருகன் ஆலயமும் ஒன்று.
  - இவ்வாலயத்தில் இடம்பெறும் பூசைகள் ஆகம விதிமுறைக்கு உட்படாத தாகும்.
  - இவ்வாலயம் கந்தபுராண வரலாற்றோடு தொடர்புடையது.

**படி II:**
- மாணவர்களைக் 4 குழுக்களாக்குங்கள்.
- குழுத் தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்துங்கள்.
  - மண்டூர் ஆலயம் அமைந்துள்ள,
    - (1) மாவட்டம் - மட்டக்களப்பு
    - (2) ஊர் - மண்டூர்
  - சின்னக் கதிர்காமம் எனப் போற்றப்படுகிறது.
  - இங்கு கப்புகனார் பூசை செய்கிறார்.
  - மூலஸ்தானம் திரைச்சீலையால் மூடப்பட்டு மௌன பூசை இடம்பெறும்.

- **மகோற்சவம்:**
    * கதிர்காமத் தீர்த்தம் முடிந்து, 10ம் நாள் கொடியேறி திருவிழா நடை பெறும்.
    * தீர்த்தம், ஆவணி மாதம் பூரணை தினத்தில் இடம்பெறும்.
    * தீர்த்தம் முடிந்து மூன்றாம் நாளில் வேடர் பூசை நடைபெறும்.

- **ஏனைய விழாக்கள்:**
    * கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரத்தன்று கார்த்திகை திருவிழா நடைபெறும்.
    * கந்தசஷ்டி விரத காலத்தில் திருச்செந்தூர் புராணம் படிக்கப்படுகிறது.
    * வண்ணக்கர் முறைமையே ஆலய நிருவாகத் தொடர்பில் காண முடியாது.
    யாழ்ப்பாண இராச்சிய காலத்தோடு தொடர்பானது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 8.2.1 இலுள்ள செயற்பாட்டுப் பத்திரம்
- மண்டூர் ஆலயம் தொடர்பான படங்கள்
- டிமை கடதாசி, நிறப்பேனாக்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- மண்டூர் ஆலயத்தின் சிறப்பினை அறிந்து போற்றுவர்.
- தலயாத்திரை மேற்கொள்ள முன்வருவர்.

## பின்னிணைப்பு 8.2.1:

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு 1, 3**

மண்டூர் ஆலயம் தொடர்பான தகவல்கள்:
(1) அமைவிடம்
(2) பூசைகள் நடைபெறும் முறை
(3) மகோற்சவம் / திருவிழா நடைபெறும் காலம்.

**குழு 2, 4**

மண்டூர் ஆலயம் தொடர்பான தகவல்கள்:
(1) ஆலய வளர்ச்சிக்கு உதவியோர்.
(2) ஆலயம் மீது பாடப்பட்ட பிரபந்தங்கள்.
(3) பூசகர் அழைக்கப்படும் விதம்.
(4) ஆலய முகாமை.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)..............................................................................................................................
(2)..............................................................................................................................
(3)..............................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

சைவ ஆலயங்களின் தொன்மையையும் மரபினையும் பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள் இவ்ஆலயங்களைப் போற்றி வாழ வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 8.0** : ஈழத்துக் சைவ மரபுகளையும் வரலாற்று ஆதாரங்களையும் திரட்டி, ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.

**தேர்ச்சி மட்டம் 8.2** : ஈழத்துச் சைவ ஆலயங்கள் பற்றிய விவரங்களையும் பெறுவர். அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை தெரிந்து கூறுவர்.

**செயற்பாடு** : இணுவில் கந்தசுவாமி கோயில் பற்றி அறிவோம்

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :
- இணுவில் கந்தசுவாமி ஆலயம் பற்றிய தகவல்களை அறிந்து போற்றுவர்.
- இவ்வாலயத்தின் சிறப்பினை அறிந்து பக்தி கொள்வர்.
- தலயாத்திரை மேற்கொள்ள முன்வருவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- இணுவில் கந்தசுவாமஆலயம் பற்றி ஏற்கனவே அறிந்த விடயங்களைக் கூற மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- இணுவில் கந்தசுவாமி கோயில் படத்தினை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்
- அதனை அடிப்படையாகக் கொண்டு உரையாடல் ஒன்றினை நிகழ்த்துங்கள்

- பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை நடத்துங்கள்.
  - இவ்வாலயத்தில் இடம்பெறும் பூசைகள் ஆகம விதிமுறைக்கு உட்படாத தாகும்.
  - இவ்வாலயம் கந்தபுராண வரலாற்றோடு தொடர்புடையது.

**படி II:**
- மாணவர்களைக் 4 குழுக்களாக்குங்கள்.
- குழுத் தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தர உள்ளீடுகளைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்துங்கள்.
  - ஆலய அமைவிடம்
    - யாழ்ப்பாண குடா நாட்டின் மத்தியில் காணப்படும் இணுவில் கிராமத்தில் அமையப்பெற்றுள்ளது
    - இணையிலி என்ற பழைமைப் பெயரே மருவி தற்போது இணுவில் என அழைக்கப்பெறுகின்றது.

- மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புடையது
- மூர்த்தி – ஆறுமுகப்பெருமான்
- தலவிருட்சம் - நொச்சி மரம்
- தீர்த்தம் - வைரவ தீர்த்தம்
- காலத்தால் முற்பட்ட வரலாற்றுப் பெருமையை தன்னகத்தே கொண்டது
- கனகராச முதலி காலத்து ஆலயமாக இது கருதப்படுகின்றது (கி.பி 1365)
- விழாக்கள்
    - 25 நாட்கள் மகோற்சத்தைக் கொண்டது
    - ஆனி மாத அமாவாசைத் தினத்தன்று தீர்த்கோற்சவம் இடம்பெறும்
    - கந்தசஷ்டி திருவிழா இங்கு வெக சிறப்பாக இடம்பெறும். மகோற்சவத்தினைப் போன்று யாகம் அமைக்கப்பட்டு 6 நாட்களும் யாக பூசை இடம்பெறும்.
    - 6 நாட்களும் கந்தபுராணத்தில் வரும் சூரப்பதுமன் வதைப்படலம் படிக்கப்பட்டு சொல்லப்படுகின்றது.
- நூல்கள்
    - இணுவில் பதிகம் - வறுத்தலைவிளான் மயில்வாகனப் புலவர்
    - கல்யாணவேலர் திருவூஞ்சல் - இணுவை சின்னத்தம்பி புலவர்
    - இணுவை முருகன் பக்தி ரசக்கீர்த்தனை – கணபதிதாசன்
    - இணுவை அந்தாதி – சிற்றம்பலம்
    - இணுவை முருகன் பிள்ளைத்தமிழ் - பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 8.2.1 இலுள்ள செயற்பாட்டுப் பத்திரம்
- இணுவில் கந்தசுவாமி கோயில் தொடர்பான படங்கள்
- டிமை கடதாசி, நிறப்பேனாக்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- இணுவில் கந்தசுவாமி கோயில் வரலாறு பற்றி அறிவர்
- இவ்வாலயத்தின் விழாக்கள் பற்றி அறிவர்
- இவ்வாலயத்தின் மிது பாடப்பட்ட நூல்கள் பற்றி அறிவர்
- இவ்வாலயத்தின் வரலாற்றுச் சிறப்பினை மற்றவருக்கும் எடுத்துரைப்பர்
- இவ்வாலயத்திற்கு தல யாத்திரை மேற்கொள்ள முன்வருவர்.

## பின்னிணைப்பு 8.2.1:

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு 1, 3**

இணுவில் கந்தசுவாமி கோயில் தொடர்பான தகவல்கள்:

(1) அமைவிடம்
(2) பூசைகள் நடைபெறும் முறை
(3) மகோற்சவம் / திருவிழா நடைபெறும் காலம்.

**குழு 2, 4**

இணுவில் கந்தசுவாமி கோயில் தொடர்பான தகவல்கள்:

(1) ஆலய வளர்ச்சிக்கு உதவியோர்.
(2) ஆலயம் மீது பாடப்பட்ட பிரபந்தங்கள்.
(3) பூசகர் அழைக்கப்படும் விதம்.
(4) ஆலய முகாமை.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1).........................................................................................................................

(2).........................................................................................................................

(3).........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

சைவ ஆலயங்களின் தொன்மையையும் மரபினையும் பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள் ஆலயங்களைப் போற்றி வாழ வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 8.0 :** ஈழத்துக் சைவ மரபுகளையும் வரலாற்று ஆதாரங்களையும் திரட்டி, ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.

**தேர்ச்சி மட்டம் 8.2 :** ஈழத்துச் சைவ ஆலயங்கள் பற்றிய விவரங்களைப் பெறுவர். அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தைத் தெரிந்து கூறுவர்.

**செயற்பாடு :** ‘‘பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் பற்றி அறிந்து போற்றுவோம்.’’

**பாடவேளை :** 01

**கற்றற் பேறுகள் :**
- பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் சிறப்பம் சங்களை அறிந்து போற்றுவர்.
- இவ்வாலயத்தின் தீர்த்தச் சிறப்பை அறிந்து பயன் பெறுவர்.
- இவ்வாலயம் தொடர்பான தகவல்களைத் திரட்டி, தொகுத்து, மற்றோருடன் பகிர்ந்து கொள்வர்.
- இவ்வாலயத்திற்கு தலயாத்திரை செல்ல முன்வருவர்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி I:**
- ஈழத்தில் காணப்படும் விஷ்ணு ஆலயங்களைக் கூறும்படி மாணவர்களிடம் வினவுங்கள்.
- பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை நடத்துங்கள்.
  - ஈழத்தில் பல விஷ்ணு ஆலயங்கள் காணப்படுகின்றன.
  - அவற்றுள் பொன்னாலை வரதராஜப் பெருமான் ஆலயமும் ஒன்று.
  - யாழ்ப்பாணத்தில் 4 திசைகளிலும், நான்கு விஷ்ணு ஆலயங்கள் உண்டு.
  - இவ்வாலயம் யாழ்ப்பாணத்தில் வடமேற்குத் திசையில் அமைந்துள்ளது.

**படி II:**
- மாணவர்களைக் 4 குழுக்களாக்குங்கள்.
- குழுத் தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்.
  - இவ்வாலயம் யாழ்ப்பாணத்தின் வடமேற்கே 20 கிலோமீற்றர் தொலைவில் கடற்கரைக்கு அண்மையில் அமைந்துள்ளது.
    - * இவ்வாலயத்தின் வரலாற்றுச் சிறப்புக்கள்:
      - துருவாச முனிவரின் சாபத்திற்கு உட்பட்ட இந்திரன் சாப விமோசனம் பெற்ற தலம்.
      - இந்திரனுக்கு, விஷ்ணு பெருமான் பொன்மயமாகக் காட்சி கொடுத்த தலம்.
  - தட்சிண கைலாய மான்மியத்தில் பொன்னாலையின் பெருமை உணர்ந்த பகுதியில் இக்கோயில் வரலாறு கூறுவது.
  - மூர்த்தி - வரதராஜப் பெருமாள்

- தலம் - பொன்னாலயம்
- தீர்த்தம் - ஆலயத்தின் கடற்பகுதி
- தலவிருட்சம் - வன்னி மரம்
- இவ்வாலயத்தின் தீர்த்தமாகிய கடற்பகுதியில் பிதிர்க்கடன்கள் செய்யப் படுகின்றன.
- பூசை, விழா பற்றிய விபரங்கள்:
  * தினமும் 5 வேளை பூசை இடம்பெறும்.
  * மாதந்தோறும் ஏகாதசி சிறப்பாக நடைபெறும்.
  * இராம நவமி சிறப்பாக இடம் பெறும்.
  * பெரியாழ்வார், நம்மாழ்வார் குரு பூசை இடம் பெறும்.
  * வருடத்தில் இரண்டு முறை மகோற்சவம் நடைபெறும்.

  (1) ஆவணி மாத கிருஷ்ண ஜெயந்தியன்று தேர்த்திருவிழாவும், மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் அமையுமாறு 18 நாள் மகோற்சவம் நடைபெறும்.

  (2) மார்கழி மாதம் சுவர்க்க வாயில் ஏகாதசியன்று தேர்த்திருவிழா வும், மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் அமையும் முகமாக 10 நாள் மகோற்சவம் நடைபெறும்.

  - ஆலய சிறப்புக் கூறும் நூல்கள்:

    (1) தட்சிண கைலாய மான்மியம்

    (2) நாராயண கவசம்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 8.2.1 இலுள்ள செயற்பாட்டுப் பத்திரம்
- ஆலயம் தொடர்பான படங்கள்
- டிமை கடதாசி, நிறப்பேனாக்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய சிறப்பினை அறிந்து போற்றுவர்.
- ஆலய தீர்த்தச் சிறப்பினை அறிந்து பயன் பெறுவர்.
- இவ்வாலய சிறப்புக்களை மற்றோருடன் பகிர்ந்து கொள்வர்.
- தல யாத்திரை மேற்கொள்ள முன்வருவர்.

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு 1, 3**

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் தொடர்பான தகவல்கள்:

(1) ஆலய அமைவுச்சூழல்

(2) ஆலயத்தின் புராதனச் சிறப்புக்கள்

**குழு 2, 4**

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் தொடர்பான தகவல்கள்:

(1) ஆலய மகோற்சவ நிகழ்வுகள்

(2) ஆலயம் தொடர்பான நூல்கள்

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................

(2) ..........................................................................................................................

(3) ..........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

ஆலயங்களிற்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று, அங்கு இடம்பெறும் சடங்கு முறைகளை அவதானிக்கச் செய்து, அதில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 8.0 :** ஈழத்துக் சைவ மரபுகளையும் வரலாற்று ஆதாரங்களையும் திரட்டி, ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.

**தேர்ச்சி மட்டம் 8.3 :** ஈழத்துச் சைவசமய நூல்கள், இதழ்கள், நிறுவனங்கள் பற்றி எடுத்துரைப்பர். அறிவர்.

**செயற்பாடு :** "சித்திர குப்த நாயனார் கதையை அறிவோம்."

**பாடவேளை :** 01

**கற்றற் பேறுகள் :**
- சித்திரகுப்த நாயனார் கதையை அறிவர்.
- இக்கதையில் வரும் முக்கிய பகுதிகளைப் பிறருக்கு எடுத்துக் கூறுவர்.
- சித்ரா பௌர்ணமி விரதம் அன்று சித்திரகுப்த நாயனார் கதையை படிப்பர்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி I:**
- சித்திரை மாதத்தில் வரும் விசேட நிகழ்வுகள் பற்றிக் கேட்டுக் கலந்துரையாடலை நிகழ்த்துதல்.
- சித்ரா பௌர்ணமி தினத்தில் ஆலயத்தில் நடைபெறும் விசேட நிகழ்வுகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடல்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமுரிய பொருட்களைப் பகிர்ந்தளித்தல்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்கு குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்துங்கள்.

  - சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் சித்திரத்திலிருந்து தோன்றிய தால் சித்ரபுத்திரனார் எனப்பட்டார்.
  - சித்திரை மாதத்தில் வரும் பூரணை தினத்தில் சித்திர புத்திரனை நோக்கி அனுட்டிக்கப்படும் விரதம்.
  - உயிர்கள் புரியும் பாவக் கணக்குகளை பரிசீலிக்கும் பொறுப்புடையவர் இவர்.
  - பொன், வெள்ளி பதுமைகளில் சித்திரபுத்திரரை நியமப்படி வழிபாடு செய்தல்.
  - அன்னம், வெல்லம், எள், பால், நெய், பழம் முதலியன படைத்து கஞ்சி வார்த்தும் வழிபடுதல்.
  - இறந்த பின் நரகத்திற்குச் செல்லாதிருப்பதற்காகவும், யம பயமில்லாமலிருப்ப தற்காகவும் இவ்விரதம் அனுட்டிக்கப்படுகின்றது.

- தாயாரை இழந்தவர்களுக்கு பிதிர் தர்ப்பணம் செய்யும் நாளாகவும், பிரம ஹத்தி தோசம் நீங்கும் விரதமாகவும் உள்ளது.
- தமிழ்நாட்டில் மதுரையில் சித்திர பௌர்ணமி விழா சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- செயற்பாட்டுப் படிவம்
- டிமை கடதாசி, பேனா
- சித்திரகுப்த நாயனார் கதை

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- சித்திரகுப்தனாரின் தோற்றத்தினை அறிந்து கூறுவர்.
- சித்திரா பௌர்ணமியின் சிறப்பினை அறிவர்.
- சித்திரகுப்த நாயனார் விரதத்தினை அனுஷ்டிக்கும் முறையையும் பயனையும் விளக்குவர்.

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

- சித்திரகுப்த நாயனார் கதையைத் தேடி, உரைச்சித்திர வடிவமாக எழுதிக் காட்சிப் படுத்துக.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ........................................................................................................................

(2) ........................................................................................................................

(3) ........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

சித்திரா பௌர்ணமி அன்று சித்திரகுப்த நாயனார் கதையை கேட்கவும், வாசிக்கவும் வழிப்படுத்துவதோடு அன்றைய தினம் நீங்களும் பிள்ளைகளோடு ஆலயத்திற்குச் சென்று அவை பற்றிய விடயங்களை கலந்துரையாடுங்கள்.

**தேர்ச்சி 8.0 :** ஈழத்துக் சைவ மரபுகளையும் வரலாற்று ஆதாரங்களையும் திரட்டி, ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் அறிவர்.

**தேர்ச்சி மட்டம் 8.3 :** ஈழத்துச் சைவசமய நூல்கள், இதழ்கள், நிறுவனங்கள் பற்றி எடுத்துரைப்பர். அறிவர்.

**செயற்பாடு :** ''சைவ பரிபாலன சபை பற்றி அறிவோம்.''

**பாடவேளை :** 01

**கற்றற் பேறுகள் :**
- ஈழத்து சைவசமய நிறுவனங்களை பட்டியற்படுத்துவர்.
- சைவபரிபாலன சபையின் நோக்கங்களை அறிந்து கொள்வர்.
- சைவபரிபாலன சபையின் பணிகளை மதிப்பிடுவர்.
- இதுபோன்று தத்தமது ஊர்களில் இயங்கும் சமய நிறுவனங் களுடன் இணைந்து செயற்பட முன்வருவர்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி I:**
- தாங்கள் அறிந்த சமய, சமூக சீர்திருத்த இயக்கங்கள் பற்றி குறிப்பிட மாணவர்களுக்கு சந்தர்ப்பம் அளியுங்கள்.
- கீழுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றை நடத்துங்கள்.
  - இலங்கையில் சமய நிறுவனங்கள் பல உள்ளன.
    (1) விவேகானந்த சபை
    (2) இந்துமாமன்றம்
    (3) இராமகிருஷ்ண மிஷன்
    (4) சைவபரிபாலன சபை
  - இந்நிறுவனங்கள் சைவத்தைப் பாதுகாத்து அதனை வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.
  - அவ்வக் காலச் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு இந்நிறுவனங்கள் தோற்றம் பெற்றன.

**படி II:**
- மாணவர்களை 3 குழுக்களாக்குங்கள்.
- குழுத் தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தர உள்ளீடுகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

**படி III:**
- குழுத்தேடல், செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்திலுள்ள விடயங்களைச் செய்வதற்குக் குழுக்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் குறித்து ஏனைய குழுவினரும் விளக்கமான முறையில் கருத்துக்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி IV:** • குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்துங்கள்.

**சைவபரிபாலன சபை:**

- தோற்றம் - 1888.04.29
- ஆறுமுகநாவலரின் சைவப் பிரகாச வித்தியாசாலையில் வித்துவ சிரோமன்மணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளையின் தலைமையில் இந்நிறுவனம் ஆரம்பிக்கப் பட்டது.

- **தோற்றத்திற்கான காரணிகள்:**
  (1) அந்தியர் ஆதிக்கம்
  (2) கிறிஸ்தவ மிஷனரிமாரின் ஆதிக்கம்
  (3) பழைய ஆலயங்கள் அழிக்கப்பட்டமை.
  (4) கிறிஸ்தவ மிஷனரிமார் கல்வியில் செலுத்திய ஆதிக்கம்.
  (5) ஆங்கிலத்தை அரச மொழியாக்கியமை.

- **நோக்கம்:**
  (1) மதமாற்றத்தைத் தடுத்தல்.
  (2) சைவப் பிள்ளைகள் சைவசமயத்தைப் பேணி ஆங்கிலத்தையும், தமிழை யும் பயில வித்தியாசாலைகளை ஊர்கள் தோறும் ஏற்படுத்துதல்.
  (3) சைவப் பிரசாரங்களைக் கொண்டு சமயப் பிரசங்கம் செய்தல்.
  (4) சைவசமயத்தை வளர்க்கும் பொருட்டு பத்திரிகைகளை நடாத்துதல்.
  (5) சைவாலயங்கள், மடங்கள் என்பவற்றைப் புதுப்பித்தல்.
  (6) கோயில், மடங்கள் என்பவற்றின் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
  (7) கைவிடப்பட்ட ஆலயங்களையும், அவற்றின் சொத்துக்களையும் பொறுப் பேற்று நடாத்துதல்.
  (8) வாசிகசாலைகளையும், நூல்நிலையங்களையும் நடாத்துதல்.
  (9) சைவசமயப் பிரசாரம் செய்தல், புராண படனம், குருபூசை, பண்ணிசை முதலானவற்றை நடாத்துதல்.
  (10) சிறைக் கைதிகளுக்குப் பிரசாரம் செய்தல்.

- **பணிகள்:**
  * பிரசங்கம் செய்தல்.
    - 1889 முதல் நிரந்தரப் பிரசங்கம் செய்வோர் நியமிக்கப்பட்டனர்.
    - ஞாயிறு தோறும் சிறைக் கைதிகளுக்குச் சைவம் பிரசங்கம்.

  * பத்திரிகை வெளியிடல்.
    - 1889 இல் (புரட்டாதி மாதம்) சைவப் பிரகாச யந்திர சாலையை நிறுவுதல்.
    - 1889 புரட்டாதி மாதம் 11 ஆம் திகதி இந்து சாதனம், இந்து ஓகன் (hindu Organ) ஆகிய இரு பத்திரிகைகளையும் வெளியிட்டன.

  * பாடசாலைகளைத் தாபித்தல்:
    - 1889 ஆம் ஆண்டில் இந்து உயர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.
    - இது 1895 இல் யாழ் இந்துக் கல்லூரி எனப் பெயர் பெற்றது.

  * தரும சாதனங்களைப் பொறுப்பேற்றல்.
    - புண்ணிய நாச்சிமார் மடம் 1933 இல் பொறுப்பேற்றல்.
    - சிதம்பரம் மாலை கட்டித் தெருவிலுள்ள மடம், விக்டோரியா வாசிகசாலை என்பனவற்றைப் பொறுப்பேற்றல்.
  * நூல்களை வெளியிடல்.
    - நாவலர் நூல்களை மறுபதிப்புச் செய்தல்.
    - இந்து சாதனத்தின் விடயங்களை நூல் வடிவம் பெறச் செய்தல்.
    - பாடநூல்களை வெளியிடல் (தமிழ், ஆங்கிலம்)

* ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவுதல்.
  - உரும்பிராய் இந்துக் கல்லூரி
  - காரைநகர் இந்துக் கல்லூரி

* மாநாடுகள் நடத்துதல்.
* சமய பாட பரீட்சைகளை நடாத்துதல்.
* குருகுலக் கல்விச் சபையை நிறுவி நடாத்துதல்.
* சமய தீட்சை செய்வித்தல்.
* பிரச்சார சபையை நிறுவி நடாத்துதல்.
* புராண படனம் செய்வித்தல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 8.3.1 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- எழுது கடதாசி, நிறப்பேனாக்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- ஈழத்துச் சமய நிறுவனங்களை அறிவர்.
- சைவ பரிபாலன சபையின் நோக்கங்களை அறிந்து செயற்படுவர்.
- சைவபரிபாலன சபையின் பணிகளை அறிவர்.
- இதுபோல் தம்மாலான பணிகளைச் செய்ய முன்வருவர்.

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு 1:**
(1)சைவபரிபாலன சபையின் தோற்றம், அதற்கான பின்னணி ஆகியவற்றை தேடிப் பெற்று அறிக்கைப்படுத்துங்கள்.
(2)அவற்றை வகுப்பறையில் முன்வையுங்கள்.

**குழு 2:**
(1)சைவபரிபாலன சபையின் நோக்கங்களைத் தேடிப்பெற்று பட்டியற்படுத்துங்கள்.
(2)அவற்றை வகுப்பறையில் முன்வையுங்கள்.

**குழு 3:**
(1)சைவபரிபாலன சபையின் பணிகளைத் தேடிப்பெற்று பட்டியற்படுத்துங்கள்.
(2)அவற்றை வகுப்பறையில் முன்வையுங்கள்.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.
(1).......................................................................................................................
(2).......................................................................................................................
(3).......................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**
உங்கள் சூழலில் உள்ள சமய நிறுவனங்களை அறிந்து அவற்றின் செயற்பாடுகளில் பங்கு பற்றி அதனூடாக சைவ மக்களுக்கான அன்றாடத் தேவைகளுக்கு உதவும் செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்துங்கள்

**தேர்ச்சி 9.0** : சைவசமயிகள் வாழ்வில் சமூகப் பணியின் முக்கியத்துவத்தை அறிந்து சமுதாய முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : சரியைத் தொண்டின் மகத்துவத்தை அறிந்து சரியையில் ஈடுபடுவர்.

**செயற்பாடு** : ‘‘சரியைத் தொண்டு அடிப்படையில் சமூகப் பணிகளில் ஈடுபடுவோம்.’’

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :
- சரியைத் தொண்டு சமயப்பணி மட்டும் அல்ல சமூகப்பணியும் என்பதனை அறிவர்.
- இறைசிந்தனையுடன் சமூகப் பணிகளில் முன்நின்று ஈடுபட்ட சமுதாய முன்னேற்றத்திற்கு உதவுவர்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி I:**
- மாணவர் செய்த பணிகளைக் கேட்டு அறிதல்.
  அவற்றுள் சமயப் பணிகள், சமூகப் பணிகள் எனப் பட்டியல்படுத்துங்கள்.
- சமயப்பணி போல் சமூகப்பணிகளும் இறை தொண்டு என்ற அடிப்படையில் கலந்துரையாடுங்கள்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- நியதிகளைக் கூறி குழுத் தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.

**படி III:**
- மாணவர்கள் குழுக்களாகச் செயற்படுவதனை மேற்பார்வை செய்யுங்கள்.
- மாணவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் வழங் குங்கள்.

**படி IV:**
- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துரை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்களின் செயற்பாடுகள் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்தி நீங்கள் தொகுப்புரை வழங்குங்கள்.
  - தன்னலம் கருதாத சேவை மார்க்கம் திருத்தொண்டு ஆகும்.
  - திருத்தொண்டுகள் சமயத் தொண்டுகளாகவும், சமூகத் தொண்டுகளாகவும் விளங்குகின்றது.
  - சமூகத் தொண்டுகள் பொதுப் பணிகள் எனவும் அழைக்கப்படும். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதனை விளக்குதல்.
  - மக்கள் உள, உடல் ரீதியாகப் பாதிக்கப்படும்போது உதவுதல்.
  - அனர்த்த காலங்களில் முன்வந்து சேவை செய்தல்.
  - முதியோர் இல்லங்களுக்கு சென்று உதவி செய்தல்.
  - சிறுவர் இல்லங்களுக்கு சென்று உதவி செய்தல்.
  - விழுமியப் பண்புகளை வளர்த்தல்.
    (புரிந்துணர்வு, விட்டுக் கொடுத்தல், உதவும் மனப்பாங்கு, தலைமைத்துவப் பாங்கு, குழு ஒற்றுமை போன்றன).

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 9.1.1 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- டிமை கடதாசி, நிறப்பேனாக்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி** V: பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.

- சரியைத் தொண்டின் சிறப்பினை அறிவர். சரியைத் தொண்டு சமய சமூகத் தொண்டுகளாகும் என்பதைக் கூறுவர்.
- இறைசிந்தனையுடன் சமூகத் தொண்டுகளைச் செய்ய முன்வருவர்.
- உயிர்கள் மீது அன்பு காட்டி வாழ்வர்.
- சமூகத்தவர்களோடு தாமும் சேர்ந்து திருத்தொண்டு செய்வர்.

**பின்னிணைப்பு 9.1.1:**

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

ஒவ்வொரு குழுவும் தமக்கு வழங்கப்பட்ட திருத்தொண்டினை மேற்கொண்டு கட்டுரை சமர்ப்பிக்குக.

**குழு 1:**

உமது பாடசாலையின் அருகே உள்ள ஆலய மகோற்சவ காலத்தில் நடைபெறும் தேர்த் திருவிழாவில் நீங்கள் மேற்கொண்ட சமயப் பணிகளை தொகுத்து அறிக்கை எழுதுங்கள்.

**குழு 2:**

உமது சூழலில் உள்ள முதியோர் இல்லம் / சிறுவர் பராமரிப்பு இல்லத்திற்கு சென்று அங்கு நீங்கள் மேற்கொண்ட தொண்டுகள் பற்றி அறிக்கை எழுதுங்கள்.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................

(2) ..........................................................................................................................

(3) ..........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1) பிள்ளைகள் செய்யும் சமூகத் தொண்டிற்கு உதவுங்கள்.

(2) பெற்றோர்கள் பிள்ளைகளுடன் இணைந்து சமூகத் தொண்டில் ஈடுபடுங்கள்.

(3) ஆதரவு அற்றவர், முதியோர், சிறுவர்களைப் பராமரித்தல், எமது கடமை என்பதனை வலியுறுத்துங்கள்.

**தேர்ச்சி 9.0** : சைவசமயிகள் வாழ்வில் சமூகப் பணியின் முக்கியத்துவத்தை அறிந்து சமுதாய முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

**தேர்ச்சி மட்டம் 9.2** : அன்னதானத்தின் சிறப்பினை அறிந்து அதனை மேற்கொள்வர்.

**செயற்பாடு** : ‘‘சமய வாழ்வில் அன்னதானம் வழங்குதலின் சிறப்பினை அறிந்து நாமும் அன்னதானம் செய்வோம்.’’

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள் :**
- மனித வாழ்வில் அன்னதானம் வழங்குதல் சிறந்த பண்பு என்பதனை அறிந்து தாமும் அன்னதானச் செயல்பாட்டில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி I:**
- மாணவர்கள் செய்த தானங்கள் பற்றி கலந்துரையாடுங்கள்.
- தானம் செய்வதன் நோக்கம், பயன் என்பன பற்றி கலந்துரையாடுங்கள்.
- மாணவர்கள் கலந்து கொண்ட அன்னதான நிகழ்வினை கேட்டு அறியுங்கள்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- நியதிகளைக் கூறிக் குழுத் தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.

**படி III:**
- மாணவர்கள் குழுக்களாகச் செயற்படுவதனை மேற்பார்வை செய்யுங்கள்.
- மாணவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் வழங் குங்கள்.

**படி IV:**
- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துரை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த செயற்பாடுகள் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்தி நீங்கள் தொகுப்புரை வழங்குங்கள்.
  - தானம் என்பது பயன் கருதாது கொடுக்கும் கொடை.
  - வஸ்திர தானம், கண் தானம், இரத்த தானம், அன்னதானம் என பல வகைத் தானங்கள் உண்டு. இவற்றுள் சிறந்தது அன்னதானமாகும்.
  - ஆலயங்கள், சமய விழாக்கள், சமய நிறுவனங்களில் வழங்கப்படுவது அன்ன தானம் ஆகும்.
  - அன்னதானம் வழங்கும்போது பாரபட்சம் காட்டாது வழங்குவது உண்மையான தானமாகும்.
  - அன்னதானம் வழங்கும்போது இறைசிந்தனையுடனும், உடல் தூய்மையுடனும் வழங்குதல் வேண்டும்.
  - சிவனடியார், ஏழைகள், ஆதரவற்றோர் ஆகியோருக்கும் உணவு அளித்தல் சிறந்த பண்பாகும்.
  - அன்னதான சிறப்பினை உணர்ந்து, தாம் முன்நின்று அன்னதானம் நடத்துதல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 9.2.1 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- டிமை கடதாசி, நிறப்பேனாக்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.

- சரியைத் தொண்டின் சிறப்பினை அறிவர். சரியைத் தொண்டு சமய சமூகத் தொண்டுகளாகும் என்பதைக் கூறுவர்.
- இறைசிந்தனையுடன் சமூகத் தொண்டுகளைச் செய்ய முன்வருவர்.
- உயிர்கள் மீது அன்பு காட்டி வாழ்வர்.
- சமூகத்தவர்களோடு தாமும் சேர்ந்து திருத்தொண்டு செய்வர்.

**பின்னிணைப்பு 9.2.1:**

### மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

குழு 1:

உமது பாடசாலையில் நடைபெறும் சைவசமய விழாவின்போது இந்துமன்ற உதவியுடன் அன்னதானம் ஒன்றினை வழங்கி, அறிக்கை எழுதுக.

குழு 2:

உமது சூழலில் உள்ள ஆலய மகோற்சவத்தில் பங்கேற்று, நீர் மேற்கொண்ட கடமைகளை அறிக்கையாக எழுதுக.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

(3) ..............................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1) உங்கள் இல்லம் நாடி வருபவர்களை அன்போடு உபசரித்து உணவளிக்க பிள்ளைக்குக் கற்றுக் கொடுங்கள்.

(2) ஆலயங்களில் நடைபெறும் அன்னதான நிகழ்வில் நீங்களும் பங்கேற்று, பிள்ளைகளையும் செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

(3) அன்னதானம் வழங்குவது சிறந்த விழுமியப் பண்பு என்பதைப் பிள்ளைகளுக்கு வலியுறுத்துங்கள்.

(4) பிள்ளைகளிடம் பகிர்ந்துண்ணும் பண்பினை ஏற்படுத்துங்கள்.

**தேர்ச்சி 10.0:** சமயங்கள் கூறும் பண்புகளை அறிந்து அவற்றுக்கு மதிப்பளிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 10.1:** சமய நூல்கள் கூறும் அறக்கருத்துக்களை அடையாளப்படுத்துவர், அவற்றுக்கு மதிப்பளிப்பர்.

**செயற்பாடு** : கீதை கூறும் தத்துவமும் தம்மபதமும் பற்றி அறிந்து கொள்வோம்

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :
- தம்ம பதத்தினை அறிவர்.
- பகவத்கீதையினை அறிவர்
- இரண்டிற்கும் இடையிலான தொடர்பினை அறிவர். அவற்றுக்கு மதிப்பளிப்பர்

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி I:**
- பகவத்கீதை பற்றி மாணவர்கள் தாம் அறிந்த விடயங்களைக் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்
- தம்மபதம் பற்றி மாணவர்கள் தாம் அறிந்த விடயங்களைக் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்
- அக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சிறு கலந்துரையாடல் ஒன்றினை மேற் கொள்ளுங்கள்.

**படி II:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- தர உள்ளீட்டுப் பொருட்களைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- நியதிகளைக் கூறி குழுத் தேடலுக்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.

**படி III:**
- மாணவர்கள் குழுக்களாகச் செயற்படுவதனை மேற்பார்வை செய்யுங்கள்.
- மாணவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் வழங் குங்கள்.

**படி IV:**
- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துரை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் முன்வைத்த செயற்பாடுகள் அடிப்படையில் பின்வரும் கருத்துக்களில் கவனம் செலுத்தி நீங்கள் தொகுப்புரை வழங்குங்கள்.
  - இந்துமதத்தில் முக்கிய நூலாகக்கொள்ளப்படும் பகவத்கீதை, காலத்தால் புத்தருக்கு முந்தியதாகும்.
  - பௌத்தம் இந்தியச் சூழலில் தோன்றிய காரணத்தினால், சைவசமயத்தோடு நெருங்கிய தொடர்பினைக் கொண்டு காணப்படுகின்றது. குறிப்பாக சைவசமயத்தில் குறிப்பிடப்படும் பல கருத்துக்களை தம்மபதம் எனும் நூலிலும் காணக்கிடக்கின்றது.
  - தம்மபதம் புத்தபகவனால் அருளிச்செய்யப்பட்டதாகும்
  - பகவத்கீதையில் தர்மத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது அதேபோல், தம்மபதமும் தர்மத்திற்கே முக்கியத்துவம் அளித்துள்ளது.

- மனிதனுக்கு ஏற்படும் துக்கந்தான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம் என்ற குறிப்பு பகவத்கீதையில் வருகின்றது. பகவத்கீதை துக்கத்தினை நான்காக வகுத்துக் காட்டுகின்றது. அவை,
    1. துக்கம்
    2. துக்ககாரணம்
    3. துக்கநிவாரணம்
    4. துக்க நிவாரண மார்க்கம் என்பனவாகும்.
        - இதனையே புத்தரின் வாசகங்களாக காணப்படும் தம்மபதம் நான்கு வாய்மைகள் என குறிப்பிடுகின்றது.
          இந்துமதத்தில் அவதாரக் கோட்பாடு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. விஷ்ணு பகவான் தசாவதாரம் பெற்ற விடயம் சிறப்பாக பேசப்படுகின்றது.பௌத்தத்தில் பௌராணிகர் கௌதமபுத்தரை விஷ்ணுவின் அவதாரமாகவே கருதுகின்றனர். இன்றும் கூட பௌத்தர்கள் ''விஷ்ணு தெய்யோ'' என விஷ்ணுவை வழிபடுவதைக் காண்கின்றோம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இணைப்பு 10.1.1 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- டிமை கடதாசி, நிறப்பேனாக்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி V:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- பகவத்கீதை பற்றி அறிவர்
- தம்மபதம் பற்றி அறிவர்.
- இவ்விரு நூல்களுக்கும் இடையில் உள்ள தொடர்பினை அறிவர்.
- பிறமதக்கருத்துக்களைப் போற்றும் பண்பினைப் பெறுவர்.
- சமாதானத்தை நேசிப்பர்.

**பின்னிணைப்பு 10.1.1:**

## மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

**குழு 1:**
1. பகவத் கீதையை இயற்றியவர் யார்?
2. தம்மபதத்தை அருளிச்செய்தவர் யார்?
3. இவ்விரு நூல்களிலும் குறிப்பிடப்படும் முக்கிய கருத்துக்களை பட்டியற்படுத்துங்கள்
4. அவற்றினை அடிப்படையாகக் கொண்டு உரைச்சித்திரம் ஒன்றினைத் தயாரிக்குக.
5. அதனைச் சுவைபடச் கூறுக.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ........................................................................................................................

(2) ........................................................................................................................

(3) ........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

பகவத்கீதை கூறும் விடயங்கள் பற்றியும் அதன் கருத்துக்கள் தம்மபதத்தில் எவ்வாறு காணப்படுகின்றது.இரண்டுக்கும் இடையிலான தொடர்புகள் அவை வெளிப்படுத்தும் கருத்துக்களை தேடிப் பெற்று அவற்றுக்கு மதிப்பளிக்க கற்றுக் கொடுங்கள்

# கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதையும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்றேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) கணிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும்போதே கணிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம்பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர் களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங் களையும் இனங்கண்டு அவற்றிற்குப் பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமுமாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன் மூலம், தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப் படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்கள் செய்யும் வேலை களை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவரது ஆற்றல், அபிவிருத்தி என்பன எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்கு தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து, அவற்றை அவர்கள் சரியாகப் பெற்றுக் கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல் - கற்பித்தல் ஊடாக நிகழ வேண்டும். அத்தோடு அதற்குத் தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். கணிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பின்னூட்டல் / முன்னூட்டல் என்பனவாகும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமை களையும் ஆற்றல்களையும் இனம் காணும்போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டலையும் வழங்குவதும் ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர் களுக்கு அவசியமாகின்றது. கணிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட கணிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல், மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத்தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே, அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அணுகுமுறை வகைகள் வருமாறு:

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி/ முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடு